Library copy.

# செவ்வாழை

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி




சிறப்பிதழ் 1992.

KP 9

BT/VALAICHCHENAI HINDU COLLEGE
KP 9

# செவ்வாழை

## சிறப்பு மலர்

**14 - 10 - 1992.**

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி

# பாடசாலை கீதம்

ஓங்குக ஓங்குக ஓங்குக தாயே
ஓங்குக நின்புகழ் ஓங்குகவே.

அருள் எமக் கீர்ந்து அணைத்திடும் தாயே
இருள் தனை நீக்கி எமக்கொளி தாராய்
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
உய்பவர் நாம் என உணர்ந்தோம் என்றும்
— (ஓங்குக)

செந்தமிழ் ஆங்கிலம் சீரிய சிங்களம்
சேர்ந்து கலந்து தேங்கி நிறைந்து
கைத்தொழில் கமத்தொழில் கலையொடு சாத்திரம்
மெய்ப்பொருள் சேர் விளையாட்டுக் களென்றும்
— (ஓங்குக)

பண்புடன் அறமும் பரிவுடன் பயிலும்
தன்நிறைவோடு தன்மார்க்க சீலமும்
மகாவித்தியாலய மாணவர் நாமே
வாழ்ந்திடும் இன் புகழ் போற்றிடும் இதமே
— (ஓங்குக)

# செவ்வாழை பூ மலர்கிறது

மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி தன் வளர்ச்சியின் பெருமிதத்துடன் வழங்கும் சிறப்பு மலர் செவ்வாழையாகும்.

*1980 - 08 - 31* ல் கையெழுத்துப் பத்திரிகையாக மலர்ந்த செவ்வாழை பலவருட கால இடைவெளியின் பின் அச்சுப் பிரதியாக மலர ஆண்டவரின் ஆசிர்வாதம் கிடைத்துள்ளது.

இவ்விதழ் செம்மையானதாகவும் வாழையடி வாழையாக நீடித்து நிலைக்கக் கூடிய தாகவும், பாடசாலை அமைந்துள்ள வாழைச்சேனையின் பெயர் பிரதிபலிக்கக் கூடியதாக வும் இருக்க வேண்டும் என்பதற்காக இப்பெயரிடப்பட்டது.

துன்பமும், நெருக்கடியும் மிகுந்த இந்தச் சிரமமான காலகட்டத்தில் கல்வி ஆர்வ மும் கலை ஆர்வமுமே இம்மலர்வுக்குக் காரணமாகும். பாடசாலை ஆசிரிய மாணவர்களின் உள்ளங்களில் உருவாகிய கருத்துக்களைக் கொண்டு மலர்வதால் இளம் உள்ளங்களின் எழுத்தாற்றலையும் அறிவு வளர்ச்சியையும் உருவாக்குமென்பது திண்ணம்.

செவ்வாழைக்கு பெருந்தொகையான ஆக்கங்கள் கிடைத்த போதும் சிலவற்றையே இங்கு தொகுத்துள்ளோம். இம்மலர் மலர ஆக்கங்களும் பண உதவிகளும் பிரதி செய்ய உதவியவர்களுக்கும் குறிப்பாக அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பெற்றோர், நலன் விரும்பிகள், வியாபாரி கள் ஆகியோருக்கும் ஆசியுரை வழங்கிய வட கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராஜா அவர்கட்கும், வாழைச்சேனைக் கோட்டக் கல்வி அலுவலக பிராந் திய கல்விப்பணிப்பாளர் திரு. சு. மகாலிங்கம் அவர்கட்கும், கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. நடராசா அவர்கட்கும், இம்மலரை அச்சிட்டுத் தந்த மட்டக்களப்பு புனித செபத்தியார் அச்சகத்துக்கும் பத்திரிகைக் குழுவின் சார்பில் நன்றி தெரிவிப்பதில் அகமகிழ்கின்றோம்.

இம்மலரின் மலர்வுக்கு பல்வேறு வகையிலும் உதவிய அனைவருக்கும் நன்றி தெரி விப்பதுடன் இம்மலரில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் மன்னித்து மேலும் தொடர்ந்து மலர் வெளியிட உங்கள் அன்பையும் ஆசியையும் உதவியையும் வேண்டுகின்றோம்.

திரு. என். டபிள்யு. அருள்சீலன்
செல்வி. சி. லோகேஸ்வரி
(சஞ்சிகை இணை ஆசிரியர்கள்)

# பொருளடக்கம்


1) எமது கல்லூரி சில வரலாற்றுக் குறிப்புகள் 01
2) தமிழ் மணக்கும் பூங்கலைக்கு இந்துக் கல்லூரி என்று சொல் 06
3) செவ்வாழைக்கு நன்றி 07
4) இறைவனின் ஆசீர்வாதம் பெற்ற எங்கள் இந்துக் கல்லூரி 09
5) பொறுக்கு மணிகள் 12
6) சமதர்ம வாதி பாரதி 13
7) இன்றைய உலகில் சமாதானத்தின் அவசியம் 16
8) மனத்திலே வாழும் மன்னவன் 15
9) ஞாபக மறதி உள்ள ஒருவரின் வேடிக்கையான செயல் 17
10) கோலங்கள் 18
11) சமாதானத்துக்கு தூது 19
12) போட்டிகளும் புரிந்துணர்வும் 20
13) ஒரு கவிஞனின் கவலை 22
14) இன்பமும் துன்பமும் 23
15) இமயப் பறவையே எழு 25
16) எலும்புகள் எளிதில் சிதைவதில்லை 26
17) உழைப்பும் கலையும் 27
18) கொலை கொலை கொலை 28
19) அவளுக்கு கிடைத்த வாழ்வு 29
20) தந்திரக் கள்வன் 32
21) உண்மையை உணர்ந்திடு 32
22) சமுதாய ஆக்கத்தில் ஆசிரியர் 33
23) கலைகள் அறுபத்து நான்கும் 34
24) போலிப் பூக்கள் 35
25) ஒரு சமுதாய விளக்கு அணைகிறது 37
26) ஒரு கவிஞனின் ஆவல் 42
27) இன்னுமொரு நூற்றாண்டு 43
28) விடிவொன்று ஓடி வரும் 44
29) உங்கள் சிந்தனைக்கு 45
30) பத்தகத்தைக் காப்பதெப்படி 46
31) தந்தை சொல் மிக்க மந்திரமில்லை 47
32) ஏர் கொண்டு எழுந்திடடா 48
33) உங்களுக்குத் தெரியுமா 49
34) முயற்சியே உயர்ச்சி 53
35) பாட்டியின் தந்திரம் 55
36) நிம்மதியே... 56
37) பயில்வோருக்கு பதினாறு கேள்விகள் 57
38) ஆசிரியர் 58
39) கதம்ப அச்சாறு 59
40) தேச பக்தி 60
41) பரிசு பெறுங்கள் 61
42) குறுக்கெழுத்துப் போட்டி 62
43) படித்துச் சுவைத்தவை 63
44) சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள் 64
45) தோழர்களே நாம் ஒன்று கூடுவோம் 65
46) கடமை 66
47) விதியின் பாதையிலே... 67

வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்

திரு. க. தியாகராசா அவர்களின்

# ஆசியுரை

மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரியினால் வெளியிடப்படும் ''செவ்வாழை'' சிறப்பு மலருக்கு இவ்வாசியுரையினை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். கையெழுத்துப் பிரதியாக அல்லாமல் அச்சுப் பிரதியாக 'செவ்வாழை' மடல் விரிப்பது அதன் சிறப்பாகும். சிறந்த முறையில் மலரின் அமைப்பும் பொருளடக்கமும் அமைக்கப்பட்டுள்ளன. தரம் வாய்ந்த பல கட்டுரைகளையும், கவிதைகளையும், சிறுகதைகளையும், குறுக்கெழுத்துப் போட்டி, பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறு போன்ற இன்னும் பல பல்சுவை அம்சங்களை உள்ளடக்கிய சிறப்பினைச் செவ்வாழை கொண்டு விளங்குகிறது. சாதாரண பாடசாலை வெளியீடுகளைப் போலல்லாமல் பெரிய அளவில் மலர் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

எமது மாணவ, மாணவியர்களில் பல்வேறு சிறந்த திறன்கள் நிறைந்து பொதிந்து கிடக்கின்றன. எமது வாழ்வில் மாணவப் பராயம் பொன்போன்றதாகும். இப்பருவத்திலே அன்னாருக்கு வழங்கவேண்டிய சந்தர்ப்பங்களை நாம் வழங்கியாக வேண்டும், அவர்களில் மறைந்து கிடக்கும் படைப்பாற்றலை, கற்பனை வளத்தினை, கவிதை ஆற்றலை வளர்ப்பதற்கு இத்தகைய மலர் வெளியீடுகள் இன்றியமையாதனவாகும் மாணவரது திறன்கள் நெறிப்படுத்தப்பட்டு அவற்றை வளர்ப்பதற்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

'' செவ்வாழை''யின் பணி இத்துறையில் மகத்தானதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. 'செவ்வாழை' சிறப்பாக மடல் விரிக்கக் காரணமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவ - மாணவிகள் அனைவரையும் பாராட்டுவதுடன் இம்முயற்சியானது தொடர்ந்து வளர வேண்டுமெனவும் ஆண்டு தோறும் 'செவ்வாழை' மலர்ந்து மாணவர் தம் திறன்களை வளர்க்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு,
திருகோணமலை,
1992 - 08 - 04.

க. தியாகராஜா,
கல்விப் பணிப்பாளர்
வட - கிழக்கு மாகாணம்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு. எஸ். மகாலிங்கம் அவர்களின்

# ஆசியுரை

மட்டக்களப்பு மாவட்டத்தின் வட எல்லையில் அமைந்துள்ள வாழைச் சேனை இந்துக் கல்லூரி வெகு தொலைவிலுள்ள பல பாடசாலைகளுக்குக் கலங்கரை விளக்குப் போல பரிணமித்து வருகின்றது. அண்மைக் காலமாக இந்துக் கல்லூரி சகல துறைகளிலும் துரித வளர்ச்சியடைந்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நிலையில் ''செவ்வாழை'' என்ற சஞ்சிகை அச்சுப் பிரதியில் வெளி வருவதற்கு அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர் எடுத்த முயற்சி இக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாகும். இந்த முயற்சி மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வெளிக் கொணர நல்ல ஒரு சந்தர்ப்பமாகும். இம்முயற்சி அனைத்தும் வெற்றி பெற எனது மனமுவந்த பூரண நல்வாத்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

இக்கல்லூரி பாடவிதான, இணைப்பாட நடவடிக்கைகளில் துரித முன் னேற்றம் கண்டு இப்பிரதேச மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைய வேண்டும் என்பதும் எனது பேரவாவாகும்.

இம்முயற்சிகளை மேற்கொண்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கு எனது மனமுவந்த பாராட் டுக்களை வழங்குவதுடன், இம்முயற்சியானது மேலும் செழித்தோங்கி வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சு. மகாலிங்கம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
வாழைச்சேனை.

கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர்
திரு. க. நடராஜா அவர்களின்

# ஆசியுரை

மட்/வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயம், மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரியாக மலர்ந்து தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் மணம் பரப்புவது கண்டு, இக்கல்லூரியின் முன்னை நாள் அதிபர்களில் நானும் ஒருவன் என்பதனால் இரட்டிப்பான பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரி இன்னும் வளர்ச்சியடைய வேண்டும் என்பது எனது அவாவாகும். இதற்குரிய அறிகுறிகளைக் காண்கின்ற போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இதுவரை கை எழுத்துப் பிரதியாக வெளிவந்த ''செல்வாழை'' அச்சுவாகனமேறி அழகிய தோற்றப் பொலிவுடன் வரவிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இக்காலத்தில் இத்தகைய ஏடுகளை அச்சிடுவது கடும் சிரமமானதொரு காரியம். சிரமங்களைப் பாராமல் நீங்கள் நினைத்த பணியை முன்னெடுத்துச் செல்வது பாராட்டுக்குரிய ஒரு செயலாகும்.

உங்கள் முயற்சிகள் தொடர இறைவனைப் பிரார்த்தித்து, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சிறப்புற வேண்டுமெனவும், இப்பாடசாலை மென்மேலும் வளர்ந்து பிராந்திய முன்னேற்றத்திற்கு உதவ வேண்டுமெனவும் ஆசிக்கின்றேன்.

க. நடராஜா
பதிவாளர்,

கிழக்குப் பல்கலைக் கழகம்,
வந்தாறுமூலை.

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபர்
திரு. தா. பரசுராமபிள்ளை அவர்களின்

# ஆசியுரை

நீண்ட பல நாட்களின் பின் ''செவ்வாழை'' மலர் வெளியீடு பரிணமிப்பதிலும் முதன் முதலாக அச்சுப் பிரதியாக வெளிவர இருப்பதிலும் அதற்கு ஆசியுரை வழங்குவதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இம்மலரை வெளியிட வேண்டியதின் அவசியம் எமது ஆசிரியர் குழாத்திடமும், பழைய மாணவ சங்கத்திடமும் கூறிய போது எதுவித தயக்கமும் இன்றிச் சகலரும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன்வந்தமையும் மேலும் இரட்டித்த மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்துகின்றது.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்'' எனும் பாரதியாரின் வாக்கிற்கேற்ப எமது மாணவர்களின் தமிழ்மொழி ஆற்றல்களை இவ்வெளியீடு மூலம் வெளிக்கொணர வேண்டுமென்பதே இவ் வெளியீட்டின் நோக்கமாகும்.

மாணவர்களிடையே மறைந்தும் புதைந்தும் கிடக்கின்ற அனைத்துத் திறன்களையும் ஆர்வத்தையும் அணைகட்டி வைக்காது சிறந்த முறையில் ஆற்றுப்படுத்தினால் அவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்குகளை மேலும் மேலும் உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதுடன் நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பயன் பல விளையும் என்பது வெள்ளிடைமலை. அத்தகைய ஆற்றுப்படுத்தலின் ஒரு வழியாகச் ''செவ்வாழை'' மலர் வெளிவருவது கண்டு பேருவகையடைகின்றேன்.

''செவ்வாழை'' தனது பெயருக்கேற்றாற்போல் செம்மையானதாக அறிவெனும் பயிருக்கு அருமருந்தாக புதுப்புது மடல்கள் விட்டு வளர்வது போல தன்னோடு பயன்முடிக்காது தன் குட்டிகள் மூலமும் தொடர்ந்து பயனளிப்பது போல மேலும் மேலும் வருடா வருடம் வெளிவந்து நற்பயன்களை இவ்வையகத்திற்கு வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு. தா. பரசுராமபிள்ளை
அதிபர்,
மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி.

# கல்லூரி நிர்வாகக் குழு

### அதிபர்

திரு. தா. பரசுராமபிள்ளை B.A. Dip - in - Ed.

### உப அதிபர்

திரு. நா. கதிர்காமத்தம்பி Eng. Tr.

### பகுதித் தலைவர்கள்

திரு. மு. தவராசா (B. Com.)
திருமதி. பவானி கனகசிங்கம் (T. Tr. I)
" கிருபராணி மாரிமுத்து (Maths Tr.)
" இராஜலோஜினி செல்வராஜா (Eng. Tr.)

### ஆசிரியர்கள்

திரு. சி. சிவக்குமார் (Sc. Tr.)
" நா. மகாலிங்கம் (Sc. Tr.)
" அ. ஜெயஜீவன் (T. Tr.)
" க. சோமநாதன் (T. Tr.)
" ச. மகேஸ்வரன் (T. Tr.)
" ச. சிவனேசராசா (B.Sc.)
" ந. பத்மநாதன் (Maths Tr.)
" நா. குணலிங்கம் (B. Com.)
" சோ. இலட்சுமணன் (Han. Tr.)
" த. தர்மபாலன் (B.Sc.)
" சு. இராஜநாதன் (B.Sc.)
" என். டபிள்யூ. அருள்சீலன்
" பா. கணேசமூர்த்தி
" சி. முருகவேள்
" த. அகிலன் (B. A)
செல்வி. கௌசலியா கோபாலபிள்ளை (B. A)
திருமதி. புஸ்பராணி அழகரெட்ணம் (B. A.)
" பானுமதி வசந்தகுமார் (Hom. Sc. Tr.)
செல்வி. வி. [illegible] T. Trd.

திருமதி. சாந்தினி நிமலன் (Hom. Sc. Trd.)

" கலாவதி பேரின்பநாதன் (B. A.)

" மாலினி இராஜேஸ்வரன் (B.Sc. Dip - in - Ed.)

" கமலசாந்தினி கணேசன் Agri - Trd

செல்வி. சி. கருணாவதி (Hom. Sc. Trd.)

" சீ. லோகேஸ்வரி (B. A)

திருமதி. பூமணி சிவநாதன் (B. A)

செல்வி. சுகுணா முருகன் (B. A)

" இந்திராதேவி (B. A)

அருட்சகோதரி. எம். சிறியபுஸ்பம்

செல்வி. அனுசியா கமலநாதன்

" அனட் சிமியோன்

" வே. கோதைநாயகி (B. Sc.)

" க. தவமலர்

" சே. சந்திரலதா

" த. பரமேஸ்வரி

" க. லலிதா

### தொண்டர் ஆசிரியர்கள்

திரு. சி. மகேந்திரன் (B. A) Com

" சீ. யோகேஸ்வரன்

" க. கமலநேசன்

செல்வி. மாலினி மாணிக்கராஜா

" என். குமுதாதேவி

### பணியாளர்கள்

திரு. வீ. சிவலிங்கம்

செல்வி. தங்கப்பிள்ளை

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர்: திரு. தா. பரசுராமபிள்ளை (அதிபர்)

செயலாளர்: திரு. இ. புவிராசசிங்கம் (கா. ஆலை)

பொருளாளர்: திரு. மு. தவராசா (ஆசிரியர்)

### நிர்வாகசபை உறுப்பினர்

திரு. நா. கதிர்காமத்தம்பி (உப அதிபர்)

திரு. நா. குணலிங்கம் (ஆசிரியர்)

திரு. தே. பத்மநாதன்

திரு. கா. தம்பிராசா (J. P.)

திரு. சா. சபாரெத்தினம்

திரு. தா. கோணேஸ்வரன்

திருமதி. பூமணி சுப்பிரமணியம்

### கணக்குப் பரிசோதகர்கள் 

திரு. க. தவராசா (ஆசிரியர்)

திரு. எஸ். செல்லத்துரை

திரு. வீ. இளையதம்பி

## எங்கள் மன்றங்கள்

சாரணர் குழு

பெண் சாரணியர் குழு

பான்ட் வாத்தியக் குழு (*Band*)

கணித விஞ்ஞான மன்றம்

கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம்

இந்து மாணவர் மன்றம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

மாணவ தலைவர் குழு

பழையமாணவர் மன்றம்

## பழைய மாணவர் சங்கம்

போசகர்: திரு. தா. பரசுராமபிள்ளை
(அதிபர்)

திரு. நா. கதிர்காமத்தம்பி
(உப அதிபர்)

தலைவர்: திரு. ப. தேவராசா

செயலாளர்: திரு. ம. இரவீந்திரன்

பொருளாளர்: திரு. சா. பாலச்சந்திரன்

உப தலைவர்: திரு. க. கதிர்காமநாதன்

உப செயலாளர்: திரு. சி. முருகவேள்

### நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. அ. ஜெயஜீவன்

திரு. வீ. தங்கத்துரை

திருமதி. கேமாரஜனி சதாசிவம்

செல்வி. க. தவராணி

### எண் பார்வையாளர்கள்

திரு. ந. பகலவன்

திரு. டானியல் தேவராஜன் டேவிட்

# எமது கல்லூரி
# சில வரலாற்றுக் குறிப்புகள்

தா. பரசுராமபிள்ளை
B. A. (Dip. in. Ed)
அதிபர்.

ஈழ வள நாட்டின் குண திசையில் அமைந்த தேனாடு, மீனாடு என்று போற் றப்படும் மட்டுமாநகரின் வடதிசையில் இரு பது மை தொலைவில் கடலும், காடும், காவும் ந்த ஆறிடு மேடு வாழைநகர். முன் காலத்தில் 'மருங்கையடிப் பூவல்' என பெயர் கொண்டு அழைக்கப்பட்ட ப் பிரதேசம் வாழைக் கனிகள் சுரந்தமை கா ணமாக வாழைச்சேனை எனும் பெயர் பூண்டது. இப் பெரும் பழம்பதியின் அமைந்து பல நற் பிரஜைகளையும், கல்விமான்களை யும் உருவாக்கி இன்று 'இந்துக் கல்லூரி' எனும் பெயருடன் எளிலுற நிமிர்ந்து நிற்கும் எமது கலைக் கல்லூரியின் சில வரலாற்றுக் குறிப்புகளை மாணவர்களும், மற்றோரும் அறியும் வண்ணம் இங்கு வழங்குவது சாலப் பொருத்தம் என நினைக்கிறேன்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கல்வியில் துரித அபிவிருத்தி ஏற்பட்டு வந்த காலம். கிறிஸ்தவ மிஷனரிகள் மூலம் ஆங் காங்கே பல பாடசாலைகளை அமைத்து கல்வியோடு கிறிஸ்தவ மதமும் வளரத் தொடங்கியது. இவ்வகையில் வாழைச்சேனை யில் உள்ள பேத்தாழைக் கிராமத்திலும் ஒரு கிறிஸ்தவப் பாடசாலை கட்டப்பட்டு பாதிரி மாரால் நடாத்தப்பட்டு வந்தது. இதே காலப்பகுதியில் இராமக்கிருஷ்ண மிசனரியும் ஆங்காங்கே சைவ பாடசாலைகளையும் அமைத்து கல்வியொடு சைவமதத்தையும் பாதுகாக்க முற்பட்டனர். சமய எழுச்சி பேலோங்கத் தொடங்கியது.

இக் காலத்தில் தான் 1926 ம் ஆண்டு வாழைச்சேனையில் ஒரு சைவப் பாடசாலை வேண்டும் எனும் எண்ணம் எழுச்சி பெற்றது. இக்காலத்து இவ்வூர்ப் பெருமகனாகவும் கல் வியில் நாட்டமுள்ளவருமான கொஸ்த்தாப் பர் கந்தையா என்பவர் தலைமையில் ஊர் மக்கள் சைவ வித்தியாசாலை ஒன்றை நிறுவ அவாக் கொண்டனர். இக் காலத்தே தான் 1927 ம் ஆண்டு சுவாமி விபுலாநந்தர் தனது கல்விப் பணியில் முதற் கட்டமாக மட்டக் களப்புக் கல்லடியில் சிவானந்த வித்தியால யத்தைக் கட்டத் தொடங்கினார். இதே காலத்தில் திரு. கந்தையா அவர்களும் விபு லானந்த அடிகளை அணுகி வாழைச்சேனை யில் ஒரு பாடசாலை அமைக்க வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக் கூறினார். அடி களாரும் அதற்கு இணங்கி "நீங்கள் பொருத் தமான காணியில் பாடசாலைக் கட்டிடத்தை அமைத்துத்தந்தால் அதனைத் தான் பொறுப் பேற்று இந்து சபையால் ஆசிரியர்கட்கு வேதனம் கொடுத்து பராமரிப்பதாக உறுதி யளித்தார். இதன் பிரகாரம் திரு. கந்தையா அவர்கள் திரு. ஆறுமுகம் என்பவரிடம் நன் கொடையாகக் காணியைப் பெற்று 1929 ம் ஆண்டு பாடசாலைக் கட்டிடத்தை அமைத் தார். கட்டிடம் முடிவுற்றதும் திரு. கந்தையா குழுவினரின் அழைப்பின் பேரில் உரிய சுப வேளையில் சுவாமிகள் ஸ்ரீமத் அபிசானந்தா, ஸ்ரீமத் அபயானந்தா ஆகியோர் சகிதம் ஸ்ரீமத் விபுலாநந்த அடிகள் வருகை தந்து 'ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் சைவ வித்தியாசாலை' எனும் பெயரிட்டு எமது பாடசாலையைத் திறந்து வைத்தார்.

அன்றிலிருந்தே இப்பாடசாலை இந்து சபையினரால் பாரமெடுக்கப்பட்டு திரு. கந் தையா அவர்களின் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்பட்டு வந்தது. இருபத்தைந்து மாணவர்களுடன் ஆரம்பித்த இப்பாடசாலை யின் முதலாவது தலைமை ஆசிரியராக காரை தீவைச் சேர்ந்த திரு. சிவசம்பு அவர்கள் நிய மிக்கப்பட்டு சைவ வித்தியாசாலை சீரும் சிறப்புடனும் வளர்ச்சியடைந்து வந்தது. 1930 ம் ஆண்டுவரை தலைமையாசிரியராக கடமையாற்றிய திரு. சிவசம்பு அவர்கள்

மாற்றலாகிச் செல்ல யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவர் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்று 1930 ம் ஆண்டு வரை கடமையாற்றினார். இவருக்குப்பின் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த திரு. செல்வநாயகம் என்பவர் மிக குறுகிய காலம் பாடசாலைப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

இவர்களைத் தொடர்ந்து நான்காவது தலைமை ஆசிரியராக வந்தாறுமூலையைச் சேர்ந்த திரு. இலக்கணப்பிள்ளை அவர்கள் 1930 ல் தலைமையாசிரியரானார். இவர் பாடசாலை அதிபராக மட்டுமின்றி மாணவர்கட்கும் கிராம மக்களுக்கும் சிறந்த வைத்தியராகவும், ஓர் உண்மையான மாந்திரிகராகவும் செயல்ப்பட்டார். சித்திரை வருட காலங்களில் மாணாக்கர்களைக் கொண்டு எண்ணெய்ச்சிந்து பாடுவதும், வரவு குறைந்த மாணவர்கள் வீடுகட்கு சென்று அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்து கல்வி புகட்டியும் வந்தார்.

இவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வாழைச்சேனையைச் சேர்ந்த முதல் முதல் பயிற்றப்பட்டவரான திரு. S. P. கந்தையா தலைமை ஆசிரியராகக் கடமை ஏற்றார். இவருக்குப் பின் 1932 ல் முள்ளியவளையைச் சேர்ந்த முருகேசு என்பவரும் 1934 ல் அமிர்தகழியைச் சேர்ந்த திரு. சி. வினாயகமூர்த்தி என்பவரும் 1935 ல் வந்தாறுமூலையைச் சேர்ந்த திரு. அப்புசாமி என்பவரும் இப்பாடசாலையில் தலைமையாசிரியர்களாக கடமையேற்று சிறப்பாக நடாத்தி வந்தனர்.

இவர்களுக்குப் பின் சுன்னாகத்தைச் சேர்ந்த S. இளையதம்பி அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர்காலத்தில் தான் முதன்முதலாக இப்பாடசாலையில் மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மாணவர்கட்கான விளையாட்டுப் போட்டிகளும், பரிசில் வழங்கல்களும் நடமுறைப்படுத்தப்பட்டன. முதன் முதலில் இப்பாடசாலையில் இருந்து J. S. C அரசாங்கப் பரீட்சைக்கு மாணவர்கள் மட்டக்களப்பு பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி பரீட்சைக்குத் தோற்றுவிக்கச் செய்து சித்தியடைய வைக்கப்பட்டனர். இதன்பின் தொடர்ந்து இப்பாடசாலையில் இருந்து மாணவர்கள் J. S.C பரீட்சைக்கு தோற்றலாயினர். 1936 ல் திரு. S. இளையதம்பி அவர்கள் திடீரென மரணமுற்றதும், தாமரைக்கேணியைச் சேர்ந்த திரு. பூ. சபாபதிப்பிள்ளை என்பவர் 1942 ல் தலைமையாசிரியரானார்.

இவருடைய காலத்தில் திரு. [illegible]த சாமி உதவி ஆசிரியர் மூலம் ஊர்ப்பிரமுகர்களைத் தொடர்பு கொண்டு முதல் முதலாக இப்பாடசாலையில் பெற்றார் ஆசிரியர் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இக்காலத்தே சுவாமி விபுலாநந்தர் இரண்டாவது தடவையாக இப்பாடசாலைக்கு வருகை தந்தார். இதையொட்டி பாடசாலையில் பெரியதொரு கலைவிழா நடாத்தப்பட்டது. நாட்டுக் கூத்து, வசந்தன் நாடக, நடன, சங்கீதப் போட்டிகளும், சுவாமியவர்களின் 'கைலயங்கிரி யாத்திரை' சம்பந்தமான படமும் காண்பிக்கப்பட்டன. வெற்றி பெற்றோர்க்கு சுவாமி அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து 1938 ம் ஆண்டு இப்பாடசாலை அரசினர் பாடசாலையாக ஆக்கப்பட்டது. 1944 ம் ஆண்டு திரு. சபாபதிப்பிள்ளையவர்கள் மாற்றலாகிச் செல்ல திரு. ஆறுமுகவடிவேல் பாடசாலைத் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவரைத் தொடர்ந்து 1945 ல் யாழ் மிருசுவில் உசனைச் சேர்ந்த திரு. V. V. யோசேப் அவர்களும் அவரைத் தொடர்ந்து 2-3-45 ல் திரு. ஐசேக் என்பவரும் அவரைத் தொடர்ந்து 1 - 2 - 46 ல் திரு. S. இளையதம்பி அவர்களும் தலைமையாசிரியர்களாகப் பொறுப்பேற்றனர்.

திரு. இளையதம்பி அதிபர் அவர்கள் இப் இப்பாடசாலையில் 23 வருட நீண்டகால சேவை புரிந்த ஒரு பெருமகன் அரசியல் செல்வாக்கும், திணைக்கள செல்வாக்கும் மிக்கவராக காணப்பட்டமை இப்பாடசாலை வளர்ச்சிக்கு பெரிதும் துணைநின்றன. இவர் காலத்தில் தமிழ்மொழி போதனையோடு ஆங்கில மொழிபோதனையும் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களை ஊக்குவித்த பெருமையும் இவரையே சாரும். இவருடைய காலத்தில் தான் க. பொ. த. சாதாரண வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்து பெரும்பாலான மாணவர்களைச் சித்தி பெறச் செய்தார். இதனால் பிற ஊர்களில் இருந்தும், குறிப்பாக அதிகமான முஸ்லீம்களும் இப்பாடசாலையில் சேர்ந்து கல்வி பயின்றுபயன் பெற்றனர்.

1964 ம் ஆண்டு க. பொ. த (உ. த) கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழக தேர்வுப்

பரீட்சையில் திரு. R. துரைராஜசிங்கம் திரு சந்திரபால [illegible]கிய இருவரும் முதன் முதல் [illegible]ச்சி பெற்று பல்கலைக்கழகம் சென்றனர். 1969 ம் ஆண்டு பாடசாலையில் முதன் முதலாக சாரணிய இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு இலங்கையின் பலபாகங்களுக்கும் மாணவர்கள் பாசறை சென்று வந்தமையும் இவர் காலத்தே நடைபெற்ற முக்கிய அம்சங்களாகும்.

திரு இளையதம்பி அதிபர் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளனாகவும் மும்மொழிகளிலும் ஆற்றல் மிக்கவராகவும், சிறந்த நிர்வாகியாகவும் விளங்கியமை காரணமாக அவர் காலத்தே இப் பாடசாலை சிறந்த முன்னே[illegible]க் கொண்டிருந்தது எனலாம். தேவை[illegible]ன பாடசாலைக் கட்டிடங்களும் அதி[illegible] விடுதியும் இவர் காலத்தே கட்டப்ப[illegible]மையும் குறிப்பிடத்தக்கது. நீண்டகால சேவையி[illegible] இவர் மாற்றலாகிச் செல்ல ஆரையம்பதியைச் சேர்ந்த திரு. I. பரமானந்தம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார். இவர் 1-9-70 வரை கடமையாற்றிய பின் 2 - 9 - 70 ல் திரு. C. நடராஜா (நடராஜ மூர்த்தி) அவர்கள் பாடசாலை அதிபராக பொறுப்பேற்றார்.

சித்தாண்டியைச்சேர்ந்த திரு.C.நடராஜா அவர்கள் கடமையுணர்வும் நாட்டுப் பற்றும் மிக்கவர். எதையும் சாதுரியமாகவும் இலகுவாகவும் செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவர். அரசியல் செல்வாக்கும், திணைக்கள செல்வாக்கும் திறமையும் காரணமாக இடைக்காலத்தே தொய்வு நிலையில் இருந்த எமது பாடசாலையை மீண்டும் மிளிரச் செய்தார். 1965 ம் ஆண்டுடன் இடைநிறுத்தப்பட்ட க.பொ.த (உ.த) கலைப்பிரிவை மீண்டும் 1972ம் ஆண்டு தொடக்கித் தானே பல பாடங்களைக் கற்பித்து திரு. தர்மராஜா செல்வி. யோகேஸ்வரி ஆகிய இருவரையும் பல்கலைக் கழக தேர்ச்சி பெறச் செய்தார். இதிலிருந்தே உயர்தர கலைப்பிரிவு வகுப்புகள் தொடர்ந்து வளர்ந்து செல்கின்றன.

பாடசாலை பற்சிகிச்சை நிலையம் இவரது முயற்சியால் கட்டப்பட்டு பற்சிகிச்சை நிலையம் ஆரம்பிக்க உறுதுணையாய் இருந்தார். பாடசாலை ஓடைக்கட்டுகள் கட்டப்பட்டன. பாடசாலை மைதானம் சிறப்புற அமைப்பதற்கும் இவரது சேவை பெரிதும் உதவியது. இவர் மாற்றலாகிச் சென்றதும் 20-12-75 ல் திரு. S. பொன்னுத்துரை அவர்களும் அவரைத் தொடர்ந்து 20 - 01 - 78 ல் திரு. K. தியாகராஜா அவர்களும் பாடசாலைப் பொறுப்புகளை ஏற்று நடத்தினர். 23-11-78 ல் ஏற்பட்ட பயங்கர சூறாவளி காரணமாக நான்கு பாடசாலைக் கட்டிடங்கள் சரிந்து வீழ்ந்தன. பற்சிகிச்சைக் கட்டிடம் மாத்திரமே எஞ்சி நின்றது. இதைத் தொடர்ந்து மைதானத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களிலேயே வகுப்புகள் நடைபெற்றன. இக் காலத்தில் 976 மாணவர்களும் 29 ஆசிரியர்களும் காணப்பட்டனர்.

29 - 1 - 79 ல் திரு. K. தியாகராஜா இடமாற்றம் பெற்றுச் சென்றதும் 30-1-79 ல் திரு. S சிவராஜா அதிபராக பாடசாலைப் பொறுப்பினை ஏற்றார். சூறாவளி புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்ட காலம் அது. 1979 ல் 1ம் மாடிக்கட்டிட வேலைகள் ஆரம்பமாயின 1981 ல் 2வது மாடிக்கட்டிடம், பிரதான மண்டபம் என்பன கட்டப்பட்டன. இதைத் தொடர்ந்து 1983 ம் ஆண்டு பாடசாலைக்கென குழாய் நீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கியும் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வருடமே திறந்த வெளி அரங்கு கிராம முன்னேற்ற சங்கத்தினரால் கட்டுவதற்கு முயற்சி மேற் கொள்ளப்பட்டு திரு. கிருஷ்ணமூர்த்தி உதவி அரசாங்க அதிபரால் அடிக்கல் நாட்டப்பட்டது. 14-9 84 ல் திரு. சிவராஜா இடமாற்றம் பெற்றுச் செல்ல இப் பாடசாலையைப் பொறுப்பேற்றுநடத்துமாறு நான் கோரப்பட்டேன்.

பாடசாலைப் பொறுப்பு எமது தலையில் சுமத்தப்பட்ட பின்பல பாரிய பணிகள் எமது ஆசிரியர்குழாத்தை எதிர்நோக்கி நின்றன. நீண்ட காலமாக சூறாவளித்தடயங்கள் அகற்றப்படாதிருந்தமை பெருங் குறைபாடாகக் கருதப்பட்டது. எனவே மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், இந்து இளைஞர் மன்றம், கிறிஸ்தவ இளைஞர் மன்றம் போன்றோரது ஒத்துழைப்புடன் ஒன்பது நாட்கள் சிரமதானப் பணி மேற் கொள்ளப்பட்டு பாடசாலை வளாகம் சீர் செய்யப்பட்டு பாதைகள் கரப்பதாட்ட மைதானம் என்பன புதிதாக அமைக்கப்பட்டன. 85 ம் ஆண்டு மாவட்ட பாடசாலைகட்கு இடையில் நடாத்தப்பட்ட பூந்தோட்டப் போட்டியில் எமது பாடசாலை அழகான பூந்தோட்டமுள்ள பாடசாலையாகத் தெரிவு

செய்யப்பட்டு முதலாம் இடத்திற்கான வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இதற்கு திரு. S. சிவகுமார், திரு. S. வினாயகமூர்த்தி போன்ற ஆசிரியர்களின் பணி முக்கியமானதாகும்.

1985ம் ஆண்டு க. பொ. த (உ. த) வர்த்தகப் பிரிவும், மாணவர் தலைவர்கள் முறையும் கொண்டு வரப்பட்டன. 1986ம் ஆண்டு சர்வதேச தொண்டர் ஸ்தாபனத்தின் (IVS) உதவியுடன் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டு வண. பிதா ஹேவியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் அகில இலங்கை கூடைப்பந்தாட்ட சம்பியன்களான மைக்கல் மென் A,B கோஷ்டிகளுக்கிடையிலான கண்காட்சிப் போட்டி ஒன்றும் இடம் பெற்றது. மாணவர்கள் விருப்புடன் தினமும் விளையாடும் விளையாட்டாகவும், மாவட்டத்தில் இன்று உள்ள இரண்டாவது கூடைப்பந்தாட்ட மைதானமாகவும் இது மிளிர்கிறது. இதன் வளர்ச்சிக்கு திரு. S. சிவகுமார் ஆசிரியரின் முயற்சியும், பயிற்சியும் உறுதுணையாயுள்ளன.

இதுவரைகாலமும் கல்குடா வட்டாரத்தில் 3ம், அல்லது 2ம் நிலையில் விளையாட்டுப் போட்டிகளில் இடம் பெற்று வந்த எமது பாடசாலை 85ம் ஆண்டு முதல் இன்றுவரை முதலாம் இடத்தையே வகித்து வருகிறது. இதற்கு ஆசிரியர்கள் திரு. M. உமாபதிசிவம் திரு. சிவகுமார் போன்றோரின் ஊக்கமும் ஆக்கமும் துணை நிற்கின்றன.

1986ம் ஆண்டு விஞ்ஞான உயர்தர வகுப்பு வைப்பதற்கு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டது. பல தடவைகள் இதற்கு முன்னர் இம்முயற்சி தோல்வி கண்டே வந்துள்ளது. இருப்பினும் இவ்வாண்டு இம்முயற்சி வெற்றி பெற்று வகுப்புகள் திரு. S. மனோகரன் (கல்வி அதிகாரி) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (15 - 5 - 87 ல்) அன்றிலிருந்து எமது பாடசாலை 1 A B தரத்தை உடைய பாடசாலையாக உயர்வு பெற்றது. இதே ஆண்டில் இரு அலகுகளைக் கொண்ட விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்று திரு. S. நவரெத்தினராசா (கல்வி அதிகாரி) அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

1 - 9 - 86 ல் கொத்தணி முறை ஆரம்பிக்கப்பட்டதனால் இப்பாடசாலை கொத்தணி தலைமைப் பாடசாலையாக ஆக்கப்பட்டது. 1987ம் ஆ[illegible] பாடசாலையின் வைரவிழா மிகச்சிறப்பாகக் கொண்[illegible]டப்பட்டது. இதனுடன் சேர்ந்து பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக திரு. K. தியாகராசா (பிரதம கல்வி அதிகாரி) அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இவ்விழாவுடன் 87ம் ஆண்டு புதிதாகப் பெறப்பட்ட பாண்டு வாத்தியக் கருவிகள் மாணவர்கட்கு முறையாகப் பயிற்றப்பட்டு பரிசளிப்பு விழாவின் போது கெங்காதரம்பிள்ளை (கணக்காளர்) அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அன்றைய தினமே திறந்[illegible] அரங்கு 'விச்னேஸ்வரா' அரங்கு என [illegible]ர் சூட்டப்பட்டு திரு. M. சண்முகம் உ[illegible] அரசாங்க அதிபர் அவர்களால் திறந்து [illegible] கப்பட்டது. இவ்வி[illegible] முக்கிய பணியாற்றியவர் திரு. C. ஆறுமுகராசா (உதவி ஆசிரியர்) என்பது குறிப்பிடத்தக்கது.

1989ம் ஆண்டு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு காரணமாக பாடசாலைக்கென புதிதாக தொலைபேசி இணைப்பு (7344) பொருத்தப்பட்டது. இதே ஆண்டில் தான் பாடசாலைப் பெயர் இந்துக் கல்லூரி என பெயர் மாற்றம் பெற்றது. இப் பெயர் மாற்ற முயற்சி முன்னர் பல தடவைகள் கொண்டு வரப்பட்ட போதிலும் பலஎதிர்ப்புகள் காரணமாக நிறைவேறாது போயுள்ளன எனினும் 1989ல் இப்பணி தடையின்றி நிறைவேறியது ஒரு பெரும் வெற்றியாகும்.

1991ல் ஒன்று கூடல் மண்டபமும், 92ல் மைதானத்துள் அமைக்கப்பட்ட மண்டபமும் கட்டப்பட்டன. இதே ஆண்டு மார்ச் மாதம் பெண்கள் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட கவணர் திருமதி. தங்கராசா அவர்களால் சின்னஞ் சூட்டப்பட்டது. இவ்வாண்டிலேயே பாடசாலைக்கென ஒரு கூட்டுறவுச் சங்கிளை உருவாக்கப்பட்டு மாகாண சபையின் அங்கீகாரமும் பெற்று மாணவர்கட்கான நல்ல சேவையைப் புரிந்து வருகின்றது.

கல்வி நிலையைப் பொறுத்தவரை பல்கலைக்கழகத்துக்கு பின்வரும் மாணவர் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்கள். செல்விகள் சீ. லோகேஸ்வரி, மு. சுகுணா, K. தேவ

மனோகரி, T. அருந்ததி, திரு. K. மகேசன் தயானந்தன், A. சிறி போன்றோர் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியானார்கள். இவர்களது வளர்ச்சிக்கு திருவாளர்கள் S. அருட்பிரகாசம் R. துரைராசசிங்கம் செல்விகள் K. கோபாலபிள்ளை K. புஸ்பராணி போன்ற ஆசிரியர்கள் முயற்சி போற்றற்பாலது. 1987ம் ஆண்டு உ. த: பரீட்சைக்கு 11 பேர் தோற்றி 11 பேரும் சித்தியடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாதாரண பரீட்சையில் வருடா வருடம் 30க்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தர வகுப்பு கற்பதற்கு தகுதி பெறும் நிலையை அடைந்து வருகின்றனர். இவற்றுக்கு திருமதிகள் K. மாரிமுத்து R. செல்வராஜா திரு N. மகாலிங்கம் திரு S. சிவனேசராசா போன்றோரது அயராத முயற்சியும் காரணமாக அமைந்துள்ளன. 5ம் வகுப்பு புலமைப் பரீட்சையிலும் வருடா வருடம் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. திருமதி P. கனகசிங்கம், P. வசந்தகுமார், திரு K. சோமநாதன் செல்வி R. இன்பமலர் போன்றோர் பணி பாராட்டத்தக்கது.

பாடசாலை ஒழுங்கு கட்டுப்பாடு சீராக பேணப்பட்டு பிரச்சினைகள் தோன்றாவண்ணம் சுமூகமான முறையில் யாவும் தீர்க்கப் பட்டு வருகின்றன. மாணவ தலைவர்களது சேவையும் சாரணிய மாணவர்களது பணியும் ஆசிரியர்களது வழிநடத்தலும் ஒழுக்கமான பாடசாலை என பெயர் பெற உதவுகின்றன. இவற்றுக்காக திரு N. பத்மநாதன், S. சிவகுமார் திரு N. மகாலிங்கம் திரு M. தவராஜா திரு S. சிவனேசராசா செல்வி C. லோகேஸ்வரி போன்றோர் கண்ணுங் கருத்துமாக செயல்படுவது சிறப்புடையது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலை முகாமைத்துவ குழுவின் செயற்பாடு சிறப்புடையதாக அமைந்திருப்பதும் பெற்றார் ஆசிரியர் பழைய மாணவர்களது கூட்டு செயற்பாடும் பாடசாலை வளர்ச்சிக்கு மிகமிக சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. சகல நடவடிக்கைகட்கும் பொறுப்பாளராகவும் கண்காணிப்பாளராகவும் மேற்பார்வையாளராகவும் இருந்து செயல்படும் உதவி அதிபர் திரு N. கதிர்காமத்தம்பி அவர்களது நீண்டகால அனுபவமும் சேவையும் திருமதி ப. கனகசிங்கம் (பகுதித் தலைவர் ஆரம்பபிரிவு) திருமதி R. செல்வராஜா (பகுதித் தலைவர்) (கனிஷ்ட இடைநிலை) சிரேஷ்ட இடைநிலை திருமதி K. மாரிமுத்து திரு. M. தவராஜா (உயர்தர பிரிவு) போன்ற பகுதித் தலைவர்களது செயற்பாடுகள் 1986ம் ஆண்டு முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டதிலிருந்து திறம்பட காணப்படுவது பாடசாலை வளர்ச்சிக்கு அத்திவாரமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு 1926ம் ஆண்டில் இருந்து எடுக்கப்பட்ட இம்முயற்சி படிப்படியாக முன்னேற்றமடைந்து இன்று பல வசதிகளுடன் கூடி இந்துக் கல்லூரி என பெயர் கொண்டு இலங்கும் எமது கல்லூரிக்கு எதிர்காலத்திலும் மேலும் பல வசதிகளும், வாய்ப்புக்களும் கிடைக்கப் பெற்று ஒரு மத்திய மகா வித்தியாலயமாக தேசிய பாடசாலையாக வளர்ச்சியடைந்து எமது பிரதேச மக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகளையும் வழங்கும் வண்ணம் வளர்ச்சியடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

## அறிவுக்கு விருந்து

* மனம் என்ற சொல்லிலிருந்து தான் ''மனிதன்'' சொல் பிறந்தது. ஒருவனது மனம் பரிசுத்தமாக இல்லாவிட்டால் அவனே பரிசுத்தமாக இல்லை என்று அர்த்தம்.

* மன அமைதி தான் மனிதனடையும் பெரும் பாக்கியம்.

தொகுப்பு
சி. ரெஜிப்பிறேமினி
ஆண்டு - 11 சீ

---

# தமிழ் மணக்கும் பூங்கலைக்கு -இந்துக் கல்லூரியென்று சொல்!-

வாழைச் சேனையென்று வளமாயழைப்பதற்கு
சாலை தொறும் மாடங்கள் வளருதற்கு - மூலையெலாம்
சிந்தும் தமிழ்ப் பண்பை சீராக்கிவைத்ததற்கு
இந்துக் கல்லூரியென்று சொல்!

—★—

கல்வி யழகும் கற்றோரைப் பேணழகும்
நல்ல கலா சாலைக்கே உரியனவாம் - செல்வமென
சுந்தரத் தமிழ்க் கலையும் பண்பாடும் ஓங்குதற்கு
இந்துக் கல்லூரியென்று சொல்!

—★—

பண்ணால் இசையால் பழநெறியால் பாவால்
சொன்னால் இனிக்குதே எம்கல்லூரியே - முந்நாளில்
வந்தே எமக்கு நல்ல வழிகாட்டி வைத்ததெல்லாம்
இந்துக் கல்லூரியென்று சொல்!

—★—

படிப்புக்கு நல்ல பழக்கமெனும் நன்னெறிக்கு
துடிப்படக்கும் தூய்மையாய் உய்வழிக்கு - இடியொக்கும்
சந்தம் தொனிக்கும் தமிழ் மணக்கும் பூங்கலைக்கு
இந்துக் கல்லூரியென்று சொல்!

—★—

—என். ட்பிள்யூ. அருள்சிலன்—

# செவ்வாழைக்கு நன்றி

வஞ்சகர்கள் மூலம் தன் அண்ணனின் அரசைப் பெற்ற அமணன் குமணனாகிய தன் அண்ணனைத் தன் விருப்பப்படி காட்டிற்கு அனுப்பி வைத்தான். நண்பர்களின் சூழ்ச்சியால் குமணனின் தலையைக் கொய்து வரும்படி பறையறிவித்தான் அமணன். காட்டில் இருந்து கொடைக்குப் பேர்போன மன்னன் குமணனைக் காண பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர் சென்றார். புலவருக்குக் கொடுக்க எதுவுமில்லாது நின்ற வள்ளல் குமணன் யோசித்தான். தன் தலையை அமண மன்னனுக்கு அனுப்பினால் அதன் மூலம் பொற்காசுகளை பெருந்தலைச் சாத்தனார் பெற வாய்ப்புண்டு என்பதையறிந்த குமணன் தன் வாளாலேயே தன் தலையைக் கொய்ய வாளை உருவினான்.

[illegible]ாளை மட்டும் பறித்துக் கொண்ட பெருந்தலைச் சாத்தனார் அமணனை நோக்கி கொ[illegible] நாட்டிற்கு காட்டிலும் கடிதாக நடந்தார். அவரின் நடைக்கு மரம், கொடிகள் த[illegible] போட்ட போதும் அவர் வேகமாக அரசரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். [illegible]ின் நடைக்கு ஒரு செவ்வாழை மரம் தடை போட்டது. கைவீசிச் செல்லும் போது கையில் பிடித்திருந்த வாள் செவ்வாழை மரத்தில் ஊடுருவி நின்றது. அதைப் பிடித்திழுத்து [illegible] நடந்தார். வாளில் செவ்வாழையின் பால்பட்டுக் காய்ந்ததால் இரத்தம் தோய்ந்து காய்ந்த வாள் போல் தோன்றியது.

கொங்கு நாடு சென்ற பெருந்தலைச் சாத்தனாரையும், அண்ணனின் வாளையும், வாளில் இரத்தம் காய்ந்திருப்பதையும் கண்ட அமணன் தன் அண்ணன் குமணனை சாத்தனார் கொலை செய்து விட்டார் என்று யோசித்தான். உடனே பாசம் மேலௌ அண்ணா! அண்ணா! என்று அலறினான், துடித்தான். உன்னைக் கொல்ல நான் தானே காரணம் எனத் தலையை மண்டப வாயிலில் மோதினான். இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

தன் அண்ணன் மேல் அமணனுக்கு அளவு கடந்த பாசம் என்பதையறிந்து நடந்தவற்றைக் கூறினார். குமணன் இறக்கவில்லையென்றும் வாளின் இரத்தம் செவ்வாழையினது என்றும் எடுத்துரைத்தார். கெட்ட நண்பர்களின் சகவாசத்தைக் கலைத்த அமணன் உடனே குமணனை அழைத்து ஆட்சிப் பொறுப்பை அளித்தான்.

குமணன் அமணன் அண்ணன் தம்பி மக்கள் உட்பட கொங்கு நாடு சந்தோசப்படுகின்றது. தங்களின் நல்வாழ்விற்குக் காரணம் ''செவ்வாழையே'' எனச் செவ்வாழையைப் போற்றி நன்றி கூறினார். பெருந்தலைச் சாத்தனாரும் செவ்வாழையைப் போற்றிப்பாடலானார். எனவே நாமும் செவ்வாழைக்கு நன்றி கூறுவோமாக!

ஆசிரியர்.

---

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

குறள் - 224

---

## 'செவ்வாழை' வெளியீட்டுக் குழு

திரு. தா. பரசுராமபிள்ளை (அதிபர்)

திரு. நா. கதிர்காமத்தம்பி (உப அதிபர்)

திரு. என். டபிள்யு. அருள்சீலன்
செல்வி. சீ. லோகேஸ்வரி
(இணை ஆசிரியர்கள்)

திருமதி. பவானி கனகசிங்கம்

திரு. மு. தவராசா

திரு. பா. கணேசமூர்த்தி

திரு. ந. பத்மநாதன்

திரு. க. கதிர்காமநாதன்

## முகாமைத்துவ குழு

திரு. தா. பரசுராமபிள்ளை - அதிபர்

திரு. நா. கதிர்காமத்தம்பி - உப அதிபர்

திருமதி. ப. கனகசிங்கம் - பகுதித் தலைவர்

திருமதி. ரா. செல்வராஜா - பகுதித் தலைவர்

திரு. மு. தவராஜா - பகுதித் தலைவர்

திருமதி. கி. மாரிமுத்து - பகுதித் தலைவர்

# "இறைவனின் ஆசீர்வாதம் பெற்ற எங்கள் இந்துக் கல்லூரி"

நா. கதிர்காமத்தம்பி
உப அதிபர்

"மீன் பாடும் தேன் நாடாம்" மட்டக் களப்பு மாநகருக்கு வடக்கே 35 கிலோ மீற்றர் தூரத்தில், வாழைச்சேனை என்ற அழகிய ஊர் அமைந்திருக்கின்றது. இந்த ஊரைக் கிராமம் என்று அழைப்பதா? இல்லை நகரம் என்று அழைப்பதா? என்ற சந்தேகம் எவருக்கும் ஏற்படாமல்லை. நகரத்தில் இருக்கும் வசதிகளையும் வளங்களையும் பெரும்பாலும் தன்னகத்தே கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் வாழையூர் கிராமத்திலே அமைந்திருக்கும் ஆறு கடல் வளங்களையும், ஆறும், கடலும் சங்கமமாகும் அற்புதக்காட்சியினையும் தனது வண்ணக்கோலங்களாக வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. வாழையூரில் வாழையடி வாழையாக வாழ்ந்துவரும் மக்கள் கூட்டம், வருவோரை வரவேற்று ஆதரவளிக்கும் பண்பினைக் கொண்டிருப்பதும்,பல்வேறு காரணங்களால் நாட்டில் எந்த மூலையில் இருந்தும் இங்கு வரும் மக்களை இரக்கமுடன் வரவேற்று இயன்றளவு ஆதரவு காட்டும் மனிதாபிமான பண்பினைக் கொண்டிருப்பதும் எமது வாழையூரின் சிறப்பம்சங்களாகும்:

இன்றைய காலகட்டத்திலே எமது வாழையூர்ப் பகுதித் தமிழ் மக்களுக்கு எவ்வளவோ உயிர் உடைமையிழப்புக்கள் ஏற்பட்டும், எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு, வஞ்சம் பாராட்டாது வாழ்ந்து வரும் மக்கள் கூட்டம் ஈ, எறும்பைக் கூடக் கொல்ல மனம் வராமல் வாழ்ந்து வரும் கல்வியறிவின் மகிமையும், கருணை நிறைந்த உள்ளம் கொண்ட மக்களையும் கொண்டிருக்கும் வாழையூரின் மத்தியிலே "என்ன நடந்தாலும் நேர்மையும், தர்மமும் இறுதியில் வெல்லும்" என்னும் தத்துவத்தைத் தாங்கித் தலை நிமிர்ந்து நிற்கும் "ஸ்ரீ கைலாயபிள்ளையார் ஆலயம்" அதன் ஆசியின் நிழலிலே அழகாக அமைந்திருக்கும் எமது இந்துக்கல்லூரியானது எந்த மாணவரையும் உயர்வு தாழ்வின்றி ஏற்று உத்தமனாக்குவேன்" என்ற சங்கற்பத்தோடு தைரியத்துடன், தன்னைத் தயாராக வைத்திருக்கின்றது.

"இந்துக்கல்லூரி" என்ற பெயர் எமது பாடசாலைக்குச் சூட்டப்பட வேண்டுமென்ற கருத்தை ஒரு பிரேரணையாக நான் இப்பாடசாலைப் பெற்றோர், நலன்விரும்பிகள் முன் வைத்த போது ஒரு சில நண்பர்களைத் தவிர எல்லோரும் அதை ஆதரித்து நின்றார்கள். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி கூறுகின்றேன். இப்பாடசாலைக்கு "இந்துக்கல்லூரி" என்ற பெயர் உத்தியோகபூர்வமாக வந்த பின்னரும் அது எல்லாச் சமய மக்களையும் மேலும் மிகுந்த அன்புடன் ஆதரித்து நின்றதைக் கண்ட நான், முன்பு குறிப்பிட்ட நண்பர்கள் கூட எனது கருத்தை மானசீகமாக ஏற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. அவர்களுக்கும் என் நன்றி.

அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலைக்கு ஆரம்பத்தில் இருந்த பெயர் "ஸ்ரீ கைலாய பிள்ளையார் சைவப்பிரகாச வித்தியாசாலை" என்பதாகும். அது பின்னர் "வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயம்" என்று அழைக்கப்பட்டு இப்போது "இந்துக்கல்லூரியாக" வளர்ச்சியடைந்துள்ளது. சைவப்பிரகாச வித்தியாசாலை இந்துக்கல்லூரி என்று அழைக்கப்படுவது சாலவும் பொருத்தமானது. என்பதை இப்பாடசாலை வரலாற்றையும், வளர்ச்சியையும் அறிந்த விஷய ஞானிகள் பூரணமாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

## கல்லூரி முகாமைத்துவம்

அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், ஒழுங்காற்றுப் பொறுப்பாளர்கள் முதலானோரைக் கொண்ட முகாமைத்துவக் குழு ஒன்று எமது கல்லூரியில் உண்டு. இது மிகவும் நிதானமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தலை போகின்ற பல பிரச்சினைகள் தலைப்பாகையோடு தீர்ந்து விடுகின்றன.

பல்வேறு கல்லூரி நிர்வாகப் பிரச்சினைகள், கல்லூரியினுள் ஊடுருவும் வெளிப்பிரச்சினைகள் எல்லாவற்றையும் சுமுகமாகத் தீர்ப்பதற்குச் சரியான நேரத்தில் முறையான அணுகு முறைகளுடன் தீர்மானமெடுத்துச் செயல்பட்டு வருவதால் இந்த முகாமைத்துவக் குழுவையுடைய இக்கல்லூரியை இறைவனின் ஆசீர்வாதம் பெற்றது என்று கூறுவதில் தவறில்லையல்லவா?

## கல்லூரி ஆசிரியர்கள்

விஞ்ஞானப்பட்டதாரிகள், கலைப்பட்டதாரிகள், வர்த்தகப்பட்டதாரிகள், விசேட பாடங்களில் பயிற்சி பெற்றவர்கள், பொதுப் பயிற்சி பெற்றவர்கள், உயர்தர வகுப்பு தகைமையுடைய ஆசிரியர்கள் என்று பல வண்ண மலர்களால் ஒரு நாரில் சீராக கோர்க்கப்பட்ட அழகான மாலை போன்று எமது ஆசிரிய குழாம் அமைந்திருக்கின்றது. தனிப்பட்ட அபிப்பிராய பேதமிருப்பினும் கூட ஒருவரை யொருவர் காணும் போது தலையைச் சாய்த்துப் புன்முறுவல் பூக்கும் பண்பு நிறைந்தவர்களாக எல்லோரும் காணப்படுவது ஒரு சிறப்பம்சம். மாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஒரு மலர் கூடச் சிலும்பாமல் சீராக அழகாக இருப்பது போல் எமது ஆசிரியர் குழாம் அமைந்திருப்பதும்'' செய்யும் தொழிலே தெய்வம் அதன் திறமைதான் நமது செல்வம்'' என்ற சிந்தனையோடு கற்பித்தல் வல்லுனர்களாக விளங்குவதும் எங்கள் இந்துக்கல்லூரிக்கு இறைவன் அளித்த ஆசீர்வாதம் என நான் கருதக் கூடாதா?

## கல்லூரிப் பணியாளர்கள்

எமது கல்லூரியின் தேவைக்கேற்ப பணியாளர்கள் நியமிக்கப்படாவிட்டாலும், இருக்கின்ற சில பணியாளர்கள் தாங்கள் உண்டு தங்கள் கடமையுண்டு எனப்பணியாற்றும் இயல்புடையவர்கள், எந்த நேரத்திலும் மாணவர்களுக்கோ, பெற்றோருக்கோ, ஆசிரியர்களுக்கோ என்ன ஆவணங்கள் தேவைப்படினும் இருபத்துநான்கு மணிநேரத்தையும் தங்கள் கடமை நேரம் எனக் கருதிப் பணியாற்றும் தன்மையைக் கொண்டவர்கள் இருப்பதனால் இக்கல்லூரி இறைவனருள் பெற்றிருப்பது என்பது மிகையல்ல அல்லவா?

## கல்லூரிப் பெற்றார்களும், நலன் விரும்பிகளும்

எமது கல்லூரியில்என்ன நடக்கிறதுஎன்று மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு பெரும் பாலான பெற்றார் நலன் விரும்பிகள் வாழ்கின்றபோது, சில முன்னோடிகள் வந்து கல்லூரித் தேவைகளை அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, பாடசாலை அதிபரோடுஒத்துழைத்துகல்லூரி வளர்ச்சிக்காக செயல்படுவது மிகத் தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. சில பெற்றார், நலன் விரும்பிகள் பாடசாலையில் அதிபர் ஆசிரியர்கள் கல்விச் செயற்பாடுகளில் பிழை இருக்க முடியாது என்று முழுமையான நம்பிக்கையுடன் இருந்து தங்கள் பிள்ளைகளின் பெறுபேறுகளில் மேன்மை கண்டு மகிழ்ச்சியடைபவர்களும் உண்டு.

எது எப்படியிருப்பினும் பாடசாலை நிர்வாகத்தில் அதிக தலையீடுகள் இல்லாமல் மிகவும் புரிந்துணர்வுடனும், ப[illegible]னும் நடந்து கொள்ளும் பெற்றாரையும், நலன் விரும்பிகளையும் எங்கள் கல்லூரி கொண்டிருப்பதனால், இதற்கு [illegible] ஆசீர்வாதம் என்றும் உண்டு என்று சொல்லுவதில் என்ன தவறிருக்க முடியும்.

## கல்லூரி பழைய மாணவர்கள்

எமதுகல்லூரியில் கல்விகற்றபழையமாணவர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறார்கள். மிக உன்னத நிலையிலுமிருக்கிறார்கள் இன்று எமது பகுதிக்கே உதவி அரச அதிபராக இருப்பவர் கூட எமது கல்லூரி பழையமாணவர் என்று சொல்லிக் கொள்வதில் எமது கல்லூரி மிகவும் பெருமைப்படுகிறது. எல்லாவற்றையும் விட சிறப்பம்சம் என்னவெனில் இங்கு கற்ற மாணவர்களில் பலர் இக் கல்லூரியிலே ஆசிரியர்களாகக் கடமையாற்றுகிறார்கள்எமதுபழைய மாணவர்கள் வானில் மின்னும் நட்சத்திரங்கள் போல் எல்லா இடங்களிலும் சிறு உத்தியோகத்தர் தொடக்கம் உயர் உத்தியோகங்களையும் வகித்து புகழுடன் வாழ்ந்து வருவது நாம் நம் கண்களால் நேரடியாகப் பார்த்து பெருமைப்படக் கூடிய காட்சிகள் அல்லவா?.

அதிகம் ஏன் இன்று இந்த மலர் உங்கள் கைகளில் நறுமணம் வீசுவதற்கு எமது பழைய மாணவர்களின் பங்களிப்புத்தான் அச்சாணி போன்றிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது. திருமணமானவர்களும், பிள்ளைகளைப் பெற்றவர்களும் கூட தமது ஆசிரியர்களைக் கண்டால் கனம் பண்ணும் பெரும்பாலான பழைய மாணவர்

களை நாம் இன்றும் என்றும் காணலாம், இப்படியான பழைய மாணவர்களைக் கொண்ட[illegible] கல்லூரி இறைவனின் ஆசியை என்றும் பெற்றிருக்கும் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்.

### கல்லூரி மாணவர்கள்

நான் இதுவரை குறிப்பிட்டவர்களை எல்லாம் உள்ளடக்கிய சிறப்பம்சமும், தனித்துவமும் கொண்டவர்களாக எமது இன்றைய கல்லூரி மாணவர்கள் திகழ்கிறார்கள். அன்பும் அறிவும், பண்பும் பணிவும், குழந்தைத் தனமும், குறும்புத்தனமும் கொண்ட மாணவர் களை எமது கல்லூரி கொண்டிருக்கின்றது. அன்றலர்ந்[illegible] புஸ்பங்கள் போல் என்றும் கல்லூரிக்[illegible] காட்சியளிக்கும் எங்கள் மாண வர் கூ[illegible]ம் ஒன்று கூடல் நேரங்களிலும் விசே[illegible] வைபவங்களின் போதும் வண்ண வ[illegible]ணப் பூக்கள் போன்று வளையவரும் மாணவ[illegible] என்றுமே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும்.

காலத்தின் கோலத்தினால் கடுமையான கஸ்டங்களை அனுபவித்த மாணவர்கள் கல்வி யில் பின்னடைவு ஏற்பட்டுக் கதிகலங்கிக் கவலை தோய்ந்து நிற்கும் காட்சிகள் மனதை உருக்கிப் பிழிபவையாகும். எதிர்காலம் இருள் சூழ்ந்ததா? அடுத்து எம் நிலை என்ன? என்ன வழிகளைக் கையாண்டால் நாம் வாழலாம், என்று சிந்தித்துச் செயல்பட முடியாத நிலை; தங்கள் வாழ்க்கையில் கல்வி கை தருமா? என்ற கவலை நிலைப்பாட்டுடன் பாடங்க ளில் மனதை லயிக்க விட்டு மனதை ஒரு நிலைப்படுத்திக் கல்வியில் கவனம் செலுத்தி கரை காண முடியாமல் தவிக்கும் மாணவர் நிலை, தமிழ் மக்களைச் சாறாகப் பிழிந்து நிற்கும் இந்த நிலைமை மாற வேண்டுமென இறைவனை வேண்டி நிற்போம்.

நான் எனது கட்டுரையில் கூறியவைகள் எல்லாம் நூற்றுக்கு நூறு வீதம் சரியானதா? என்று நீங்கள் சிந்திக்கலாம். எது சரி, எது பிழை என்று தீர்மானிப்பதற்கு உலகம் ஏக மனதாக ஏற்றுக் கொண்டிருக்கும் கருத்துக் களையுடைய "திருக்குறள்" நூலில் இருந்து ஒரு குறளைப் பார்ப்போம்.

"குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"

இக்குறளின் கருத்தைக் கொண்டு எனது ஆக்கத்தின் கருத்துக்களை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன். இந்துக் கல்லூரி நீடூழி வாழவும் மேலும் வளர்ச்சி யடையவும் இறைவனின் ஆசியை என்றும் வேண்டி நிற்போம்.

## உங்கள் அறிவுக்கு

### புதிர்

கீழேயுள்ள ஏழு சொற்களிலும் இருந்து ஒவ்வொரு எழுத்தை தெரிந்தெடுத்து சேர்த்துப் பாருங்கள். அப்போது ஒரு தமிழ்ப் புலவர் கிடைப்பார். அவரின் பெயர் என்ன?

சொற்கள்:

(1) தமிழர் (2) ஞானம் (3) ஆந்தை
(4) புலி (5) வில் (6) சல்லாரி (7) நீதவான்

முயற்சி செய்து பாருங்கள் ஏழு எழுத்தில் ஒரு பெயர் உருவாகும்.

விடை

[illegible]

தொகுப்பு:
ஸ்ரீ எழிலன்.

# பொறுக்கு மணிகள்

## மனம்

திருமதி. ப. கனகசிங்கம்

- சிலந்தி தனது வாய் நூலிலிருந்து வலை கட்டுகிறது. அதற்குள்ளே இருந்து அதன் இரையையும் தேடிக்கொண்டு அமைதியாக வாழ்கிறது. பட்டுப் பூச்சியும் தனது வாய் நூலிலிருந்தே தன்னைச் சுற்றிக் கூண்டு அமைத்துக் கொள்கிறது. அந்தக் கூட்டுக்குள்ளேயே சிறைப்பட்டு உயிர் விடுகிறது. அதைப்போல நமக்கு வாழ்வைத் தருவதும் அழிவைத் தருவதும் மனம் தான். நம் வசம் மனம் இருந்தால் சிலந்தியைப் போல் வாழலாம். மனம் விரும்பியவசம் நாம் இருந்தால் பட்டுப்பூச்சியைப் போல அழியலாம். மனம் வைத்தால் மலையை மட்டுமல்ல, மகாதேவனையே அசைத்து விடலாம். மகத்தான சாதனைகளைச் செய்யவல்ல மாண்புடையது மனம்.

- யோசிப்பதானால் நிதானமாக யோசியுங்கள்.
  செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள்.
  விட்டுக் கொடுப்பதானால் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுங்கள்.
  எதிர்ப்பதானால் திடமாக எதிருங்கள்.

  கோல்டன்

- எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும், சிங்கத்தின் நடையும், யானையின் அறிவும், புலியின் வீரமும், புறாவின் ஒழுக்கமும், மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை.

- சுறுசுறுப்பாய் இரு; ஆனால் படபடப்பாய் இராதே.
  பொறுமையாய் இரு; ஆனால் சோம்பேறியாய் இராதே.
  வீரனாய் இரு; ஆனால் போக்கிரியாய் இராதே.
  சிக்கனமாய் இரு; ஆனால் கருமியாய் இராதே.
  இரக்கம் காட்டு; ஆனால் ஏமாந்து போகாதே.

- உலகிலேயே தன் உற்றாரையும், உறவினரையும் துன்புறுத்துவதில் உண்மையான ஆனந்தம் காணும் பிராணி மனிதன் ஒருவன் தான்.

  மகாத்மா காந்தி

---

வாழ்க்கையில் உயர்ந்து முன்னேறிய பெரியவர்களின் அடிச்சுவட்டைப் பின் பற்றி நட. நீ எளிதாக முன்னேறி விடலாம்.

தொகுப்பு:
றெஜி பிரேமினி
ஆண்டு 11 சீ

# சமதர்ம வாதி பாரதி



விளரும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள் 'ஏள்மைக்கும் கல்வி ஏம புடைத்து' என்றார் வள்ளுவர். ஆற்றலும், கலைத்திறனும் சிலருக்கு கூடப் பிறந்த கொடையாயிருக்குமோ?

ஆம் பாரதிக்கு இது சாலவும் பொருந்தும்.

பாரதிக்கு உரிய தனிச் சிறப்பு என்னவெனில் பாரதிக்கு பட்டதை யெல்லாம் தெளிவாக மற்றவர் மனதில் பதியும் படி சொல்லி இருப்பது தான். கவினயம் குலையாமல் கருத்து செறிவோடு உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் கவி சமைப்பதில் தன்முத்திரையைப் பொறித்தவர் பாரதி.

பார தியைப் போல பாமர மக்களை அடிமை தளையில் அகப்பட்டு அல்லல் பட்டவர்களை ...யாந்திட்ட கவிஞர் யாரும் இல்லை காலத்துக்கு ஏற்றமாற்றத்தோடு சமுதாய புரட்சி... விடுதலை வேட்கையை மக்கள் உணர்வுகளை வித்திட்டு ஊன்றியவர் பாரதி. ப..தி காலத்தில் பல பாரதி இருந்தனர். எனினும் பாரதி என்ற பட்டத்தைத் தன் பெயராக நிலை நாட்டியவர் 'சுப்பு' எனப்படும் சுப்பிரமணியனே, சுப்பையா என செல்ல ம.. அழைககபபடும சுப்பிரமணியன் 1882 டிசம்பர் 11 ல் சின்னச்சாமி ஐயருக்கும், லக்சுமி அம்மாளுக்கும் செல்லப்பிள்ளையாகப் பிறந்தார். 11 ம் வயதில் சமஸ்தான புலவர்களால் கலைமகள் என்ற கருத்துடைய 'பாரதி' என்னும் பெயர் சூட்டப் பெற்றார்.

'சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னில் செழித்திடும் வையக
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்'

என்று சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், தொழில் மகிமையையும் உணர்த்திய பாரதி வெறும் வாய்ச் சொல்லோடு நின்று விடவில்லை. தான் அணிந்து இருந்த பூ நூலை நீக்கி விட்டு ஆதித் திராவிடன் எனக் கேலி செய்யப்பட்ட ஒரு நண்பனுக்கு அணிவித்து மகிழ்ந்த புரட்சியாளன் மகாகவியே.

வெவ்வேறு கால கட்டங்களில் சுதேச மித்திரன், இந்திய தேச பக்தன் என்ற பத்திரிகைகளில் ஆசிரிய பீடங்களை அலங்கரித்த பாரதியார் 1908 ம் ஆண்டில் இந்தியா என்ற பத்திரிகை விவகாரத்தினால் அரசாங்கம் பிறப்பித்த பிடி விறாந்துக்குத் தப்பி புதுச்சேரிக்குச் சென்று மறைந்து வாழ்ந்தார். 1904 ம் ஆண்டு மதுரையில் இருந்த போது சமஸ்தான பகுதிகளில் உயர்தர கலாசாலையில் சில காலம் தமிழ் ஆசிரியராகத் தொண்டாற்றினார்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மை திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ - கிளியே
வாய் சொல்லில் வீரரடி என்றும்
தேவியார் மானம் என்றும்

நாவினாற் சொல்வதெல்லாம்! கிளியே
நம்புத லற்றா ரடீ! என்றும்
சிந்தையில் கள் விரும்பிச்
சிவ சிவ வென்பது போல்
வந்தேமாதர மென்பார் - கிளியே
மனதிலதனைக் கொள்வார்.

என்று பாடி அவர் வாழ்ந்த காலத்து மக்கள் சிலரைக் கிண்டல் செய்துள்ளார். எனவே இங்கே இவர் கிண்டாற் பேர்வழியாகக் காட்சியளிக்கின்றார்.

குடு குடு குடு குடு குடு குடு
நல் காலம் வருகுது நல்ல காலம் வருகுது
சாதிகள் சேருது சண்டைகள் தொலையுது

என்று பாடி குடு குடுப்பைக் காரனாகின்றார். இந்த குடுகுடுப்பைக்காரன் பேராசைக் காரன் ஆவதை.

'எனக்கு வேண்டும் வரங்கை இசைப்பேன்
கேளாய் கணபதி கனக்கும் செல்வம்
இவையுந்தர நீ கடவாய்' என்றும்

'காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும்

என்று ஆரம்பித்து அந்தக் காணி நிலத்தினிலே ஒரு மாளிகை பத்து பன்னிரெண்டு தென்னை மரங்கள்

என்று இன்னும் என்ன வெல்லாமோ வேண்டும் என்று பாடும் பாட்டிலும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

பேராசை காரனாக இருந்த சுப்பிரமணிய பாரதியார் ஒரு சமாதான நீதிவானாக மாறுவதையும் நாம் காணலாம்.

யாரும் பணிந்திடும் தெய்வம் பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று
இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்.

என்றும்

ஒன்று பட்டால் ஒன்று வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்றும் கூறுகின்றார்.

அரசனாக, கோழையாக, கிண்டல் பேர்வழியாக குடு குடுப்பைக்காரராகப், பேராசைக் காரராகச், சமாதான நீதிவானாகத் தோற்றமளித்த சுப்பிரமணிய பாரதியைப் பெண்களின் காவலனாகக் காண்கிறேன்.

'காவென்று கத்திடும் காக்கை
தென்னை மரக்கிளை மீதில் ஆங்கோர்
செல்லப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ் சிறிய குருவியிது - ஜிவ் என்று
விண்ணடை யூசலீட்டேகும்
மன்னப் பருந்து ஓரி ரெண்டு
மெல்ல வட்டமிட்டுப் பின்
நெடுந்தொலை போகும்.

என்ற பாடலின் மூலம் இவர் ஒரு இயற்கை ரசிகனாகக் காணப்படுகின்றார்:

செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று நாட்டுப் பற்று நிறைந்த இவர், இப்பாடலின் தமிழ் மொழியையும் தனது தந்தையையும் கௌரவித்துள்ளார். தாய்நாடு என்று கூறும் வழக்கு இருந்த போதிலும் தந்தையார் நாடு என்று பாடி ஒரு புதுமையைத் தோற்றியுள்ளார். அன்பு, தியாகம், பற்று கொண்டவராகக் கூவித்திரிந்த பூங்குயில் தனது 39 வயதில் இவ்வுலகை விட்டு பறந்து விட்டது. பராதி என்ற பெயர் இன்று நூற்றாண்டு விழா காண்பதில் தமிழ் உலகுக்கே பெருமை எனலாம்.

முற்றும்

க. ருத்திரா.
(13ம் ஆண்டு வர்த்தகம்)

# இன்றைய உலகில் சமாதானத்தின் அவசியம்

ஓவியதர்மா - தர்மேந்திரா
ஆண்டு - *11* H

இன்றைய உலகம் 'சேயை இழந்த தாய்' தவிப்பது போன்று அமைதி என்ற தன்மையை இழந்து அமைதியற்றுக் காணப்படுகின்றது. குழந்தை கையில் கத்தியைக் கொடுத்தால் அது விஞ்ஞானி போன்று பல விதமான பரிசோதனைகளிலும் ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுகின்றது. இறுதியில் தன்னைத் தான் காயப்படுத்திக் கதறி அழுகின்றது. இதே நிலைதான் இவ்வுலக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனக் கூறுவதில் எவ்வித தவறும் இல்லை. எண் திசைகளிலிருந்து போருக்கான அறை கூவல்கள், அணுக்குண்டுகளினதும், ஏவுகணைகளினதும், பீரங்கிகளினதும் சவால்கள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து விட்டது. மக்களிடையில் அன்பு, அகிம்சை, சத்தியம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பன மறைந்தொழிய போட்டி, பூசல், மமதை, பொறாமை, மனிதனை மனிதன் மதியாபாங்கு என்பனவே மிகவும் மலிந்து காணப்படுகின்றன.

இவை காரணமாக போர் எங்கும் எந் நேரமும் நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது. மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு இன்று வழி வகுக்கும் இந்த உலகம் 'பேய்க்கு பணிந்து தாயை விற்பது' போல தமது அற்புதக் கண்டுபிடிப்பை மனித குலத்தின் வளர்ச்சிக்கின்றி அழிவிற்கே பயன்படுத்துகின்றது. இவ்வாறு ஏற்பட்ட விளைவுகளோ எண்ணில் அடங்காதவை. அவற்றை எல்லாம் குறித்து நிற்பதாக அமைவது முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களாகும். இதிலும் உலக வரலாற்று ஏடுகளில் இரத்தக்கறை படிந்த நிகழ்ச்சியாக அமைவது இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் பல கோடி மக்கள் இரத்தம் சிந்தியமையே ஆகும். போரினால் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும், அழிவுமே தான் நிகழ்கின்றனவே தவிர எதுவித நன்மையும் இல்லை. எனவே இப் பயங்கரம் தடுக்கப்படாவிடின் நாளைய உலகம் வெறிச்சோடிக் காணப்படும். ஆகவே இன்றைய உலகில் சமாதானத்தை நிலைநாட்டுதல் மிகவும் அவசியமாகிறது.

பல அழிவுகளைச் சந்திக்க இவ்வுலகம் இரண்டாம் மகாயுத்தத்திற்குப் பின் சற்று விழித்தெழுந்து நாடுகளுக்கிடையே ஓர் கூட்டிணைவு இல்லை என்பதை உலக நாடுகள் கண்டு கொண்டன. இதனால் உலக நாடுகளுக்கிடையே ஓர் கூட்டிணைவு கொண்ட அமையமாக ''ஐக்கிய நாடுகள் தாபனம்'' உதயமாகியது. இத்தாபனம் ஆயுதப்பரிகரணம், நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட இடையறாது செயற்பட்டது. இதன் விளைவாக அமெரிக்க ரஷ்ய வல்லரசுகளிடையே ஆயுதக் குறைப்பு ஏற்பட்டது. இவ்வாறு சமாதானத்தைப் பேணிக்காக்க இத்தாபனம் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பெரும்பாலானவை தோல்வியை நோக்கியே சென்றன. காரணம் மனிதனது தீய செயற்பாடாகிய மின்னோட்டத்தை நிறுத்த முடியவில்லை.

எனவே பூமாதேவி அமைதி மெத்தையில் துயில வேண்டுமாயின் ஆறறிவு படைத்த மனிதராகிய நாமே சுயமாக சிந்தித்து தொழிற்பட வேண்டும். அன்பென்னும் அருமருந்தை மக்களிடையே பெருக்கி, விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நிலை நாட்ட வேண்டும். அன்பு வளர, ஒற்றுமை நிலைத்தோங்க, சமாதானமும் சக வாழ்வும், சமத்துவமும் இப்பாரினிலே நிலவும். இதைவிட நாம் அனுபவிக்கக் கூடிய இன்பம் பிறிதொன்றுமில்லை.

---

''மேன்மை கொள் சமாதானம் விளங்குக
உலகமெலாம்''

---

மறைந்த அதிபர் திரு. எஸ். இளையதம்பி அவர்களின் நினைவாக

# மனத்திலே வாழும் மன்னவன்

எஸ். கே. தயாளகுணசீலன்
(பழைய மாணவன்)

சிந்தனைக்கு உறைவிடமாம் செழுங்கலைக்கு!
செப்பனவே பல பொருளும் பெற்ற கோமான்!
வந்தனை செய் பெரியவர்கள் வாழ்த்த நின்று
வற்றாத ஊற்றினைப்போல் அறிவு கொண்டோன்!
நிந்தனை செய்தவர்களுக்கும் நிகராய் கல்வி!
நெறியினிலே தலை நிமிர்ந்து நின்ற பூமான்!
சுந்தரப் பூந் தமிழ் முனிவன் விபுலாநந்தன்,
தூக்கியறிவ முதூட்டி வளர்த்த கோமான்!

வித்தியாசாலையிதனை வியக்கும் வண்ணம்
விற்பனர்கள் பலரெமக்கு கல்வியூட்ட
சத்தான திட்டங்கள் பலவும் செய்து,
சாதனைகள் புரிந்திட்ட தகைமையாளன்!
முத்தான பல கல்வி ரத்தினங்கள்
முளைப்பதற்கும் இவன்தானே முனைவனானான்!
எத்தனைதான் சொன்னாலும் எஸ். இளையதம்பி,
அதிபரென்றால் அறிவுலக வேந்தனன்றோ?

கிழக்கினிலே கடலிரையும் வடவூர்ப்பக்கம்,
குளுகுளென்று நீராற்று வாவியோடும்
பழக்குலையும் பாலமுதும் பரவ நிற்கும்
பண்பாடு காத்து வரும் ஊராம் மக்கள்!
மழையிருளைக் கண்டதும் மனதில் என்றும்
மனத்துயராம் இருளறியா வாழைச்சேனை
இளையதம்பி பெரியவனும் அதிபனாக,
இங்கு வந்தான் இதுவுமொரு சிறப்பாம் என்பேன்!

அதிபரென நீ வாழ்ந்தாய் அன்னாய் உன்னை
அடிதொழுதே நான் வாழக் கொடுக்கவில்லை
மதிதுடைக்கா இருளைப் போல் மன்னவர்கள்,
மற்றவர்கள் குறை சாற்றும் இந்தக்காலம்,
விதிபடைத்த விளையாட்டில் ஐயா, நாங்கள்
வினைகளுக்கு மறைவு தேடி வாழும் காலம்
சதி நாசம் உன்னுயிர்க்கு உலை வைத்தது,
சற்குருவே நீ மறைந்தும் மறையா வேந்தன்!

# ஞாபக மறதி உள்ள ஒருவரின் வேடிக்கையான செயல்

க. மங்களா
ஆண்டு - 11 ஆர்

காலை ஆறு மணி. கிணற்றடியில் தண்ணீரை அள்ளி உடம்பிலே ஊற்றிக்கொண்டே இருந்த மணி தன் மனைவி மல்லிகாவின் சத்தம் கேட்டுத் திரும்பினான். ''பல் விளக்காமல் குளிக்கின்றீர்களா? உங்களுக்கு எப்பவுமே மறதிதான்'' என்று சத்தம் கேட்டதும் தான் உடனே குசினிக் கட்டுக்கு விரைந்தான். அங்கு அவன் எடுத்து வைத்த பல் தூரிகையும் பல்பசையும் அவனைப் பார்த்து சிரித்தது. அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது பல் விளக்கவில்லை என்று. பல் துலக்கி குளித்து விட்டு வந்ததும் மனைவி காலைச் சாப்பாட்டை கொடுத்து விட்டு, மத்தியானச் சாப்பாடாக ஒரு பார்சலையும் கொடுத்து விட்டு, ஏதோ அவசர வேலையாக சமயலறைப் பக்கம் நுழைந்தாள். மணி சப்பாத்து, கழுத்துப்பட்டி, கோட் எல்லாம் அணிந்து சாப்பிட்டு விட்டு பார்சலுடன் காரியாலயம் நோக்கி விரைந்தான்.

வீதியால் செல்லும் போது எல்லோரும் தன்னைப் பார்த்து ஏதோ கதைப்பதும் சிரிப்பதுமாக நின்றனர். பதிலுக்கு மணியும் அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டு காரியாலயத்தை அடைந்தவனைப் பார்த்து காலை வணக்கம் கூறிய ரவி வாயில் கையை வைத்து வீழ்ந்து வீழ்ந்து சிரித்தான். மணி அவனை கேள்விக் குறியாய்ப் பார்க்க இது என்ன கோலம் என்று காட்டியதும் தான் பார்த்தான் மணி. தான் கோட்டும், கழுத்துப்பட்டியும் சப்பாத்தும் அணிந்து கொண்டு மடித்துக்கட்டிய சறத்துடன் காரியாலயத்திற்கு வந்திருப்பதை உணர்ந்தான். வெட்கமடைந்த மணி கையில் இருந்த பார்சலுடன் தலைதெறிக்க ஓடினான்.

ஓடி வந்த மணி ரதி வீட்டின் படலையைத் திறந்து கொண்டு மனைவி பார்த்தால் திட்டுவாள் என்ற எண்ணத்தில் பூனை போல மெதுவாக ஒட்டி ஒட்டிப் போய் சாறத்தை மாற்றிக் கொண்டு வருவோம் என்ற எண்ணத்தில் அறையினுள் நுழைந்தான். யாரோ கள்வன் கள்வன் என்று கத்தும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சனக் கூட்டம் நிறைந்தது. சிலர் அடித்து அவனை அப்படியே மரத்தில் கட்டி வைத்தனர். அப்போது தான் பார்த்தான். தன் மனைவி மல்லிகா பக்கத்து வீட்டில் இருந்து கதறி ஓடி வருவது தெரிந்தது. உடனே தான் தன்னுடைய வீடு என்று பக்கத்து வீட்டில் நுழைந்ததை உணர்ந்தான். தன்னை மன்னித்துக் கொள்ளும் படி மணி அழுதான். பின் வீட்டுக்காரன் சிறிது நேரத்தின் பின் இப்படியெல்லாம் இனிச் செய்யாதே என்று கூறிப் போக விட்டான்.

எவ்வளவு புத்திமதிகளைக்கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்ற மல்லிகா மணிக்குச் சாப்பாடு பரிமாறினாள். நல்ல பசியால் சாப்பிட்டுக் கொண்டிருந்த மணி வானொலியில் அவனுக்கு பிடித்த பாடல் போகவே வானொலியைத் திருப்பச் சென்ற அவன் திரும்ப வந்து சாப்பாட்டைச் சாப்பிடத் தொடங்கினான். அங்கு வந்த மல்லிகா சாப்பிட்ட மணியின் கையைப் பிடித்துக் கத்தினாள். ''ஐயோ'' நாய்க்கு வைக்க கொண்டு வந்த சாப்பாட்டைச் சாப்பிடுறீர்களே உங்கள் சாப்பாடு எங்கே? என்று கேட்டாள். உடனே சாப்பாட்டை உதறி எழுந்த மணி இதில் தான் வைத்தேன் என்று கூறினான். இருவரும் தேடினர் காணவில்லை. வானொலியும் இடைவிடாது பாடிக் கொண்டு இருந்தது. மனைவி கோபத்தில் வானொலியை மூடச் சென்றாள். மணியின் சாப்பாடு அங்கு இருந்தது. மல்லிகா மணியைத் திட்டினாள். இனி மேல் இப்படியொல்லாம் நடக்காது என்று மணி சமாதானம் கூறினான்.

பின்பு மாலை ஆறு மணிக்கு கோயில் திருவிழாவுக்கு போகவென்று கேட்ட மல்லிகாவை கூட்டிச் சென்றான். போகும் வழியில் ஏதேதோ எல்லாம் தங்களை மறந்து

கதைத்துக் கொண்டே போனார்கள். சனக் கூட்டம் நிறைந்த அந்த இடத்துக்கு நெருங்கியதும் "இது என்ன கோயில் என்று சினிமா கொட்டிலுக்கா...'' என்று மனைவிகத்தினாள். அப்போது தான் தாம் வந்தது கோயில் அல்ல சினிமா கொட்டில் என்று உணர்ந்த மணி அதற்கேன் நடுறோட்டில் வைத்து கத்துகிறாய் எல்லோரும் சிரிக்கப் போகிறார்கள். ஒரு படம் பார்த்து விட்டுப்போனால் போச்சு என்றான். மல்லிகாவுக்கு ஆத்திரம் வந்தது; இருந்தாலும் அடக்கிக் கொண்டு கணவன் கட்டளைக்கு இசைந்தாள். இருவரும் சீட்டு வாங்கி உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர். படம் பார்த்துக் கொண்டிருந்த மணியும் மனைவியும் படத்தை ரசித்தனர். இடைவேளை வந்தது. சிலர் வெளியில் எழும்பிச் சென்றனர்; சிலர் உள்ளே அப்படியே இருந்தனர்.

அப்போது மல்லிகா மணியைத் தட்டி இடைவேளை ஏதாச்சும் வாங்கித் தாருங்கள் என்றாள். அப்போது தான் இடைவேளை என்று அறிந்த மணி கடலை வாங்கி வருகிறேன் இருந்து கொள் என்று கூறி விட்டு வெளியே சென்றான். சிறிது நேரத்தில் கடலையுடன் சென்று மல்லிகாவுக்குப் பக்கத்தில் இருந்து இந்தா அம்மா கடலை சாப்பிடு என்று அவள் தோளின் மேல் கை வைத்தான். அவ்வளவுதான் பளீரென்று ஒன்று விழுந்தது அவன் கன்னத்தில். துடித்துக் கொண்டு எழுந்தான். அப்போது தான் உணர்ந்தான் அது தன் சம்சாரம் மல்லிகா அல்ல (மின் சாரம்) கமலா என்று.

# கோலங்கள்

— மணிக்கவிதை —

மனைகள் தோறும்
மாக்கோலம்
ஆலயங்கள் தோறும்
விழாக் கோலம்
மங்கையர்கள் மனதில்
மணக்கோலம்
நாட்டில் நடப்பது
போர்க் கோலம்
தெருக்கள் தோறும்
படைக் கோலம்
இதனால் நடுங்குவது
பூலோகம்.

ஆ. திருநானந்தி
ஆண்டு 11 வி

## சமாதானத்துக்கு தூது

ஏய், சமாதானம்.
எங்கே ஒழிந்து விட்டாய்!
இல்லை, இல்லை
மறைந்து விட்டாய்
உன் எதிரிக்கு.
இங்கு ரெத்த பூசை நடப்பதை
காணச் சகிக்காமல்தான்.
உலக[illegible]தை விட்டே
ஓடி[illegible]டாயோ!
க[illegible]ணீருக்கும்
செந்நீருக்கும்
ர[illegible]பலிக்கும்
காத்துக்கிடக்கிறது
எங்கள் நிலம்.
அந்த நிலம்
உன்னைத் தேடி
தூது வருகிறதென்றால் —
பறவாயில்லை;
காலம் பதில் தந்தால்
இன்னுமொரு தரம் வந்து போ.

## கனவாகும் ஆசை

குழந்தைப் பருவத்திலே
கொடுக்கப்பட்ட சுதந்திரங்கள்
குமரிப் பருவத்தில்
அடக்கப்படும் மாய மென்ன

பள்ளிப் பருவத்திலே
பருவத்தின் துடிப்பினிலே
இதயத்திலெழுந்த வாசை
கனவாகி விடுவதென்ன

கன்னிப் பருவம் தனை
விலை பேசும் சந்தையிலே
இன்னொருவன் முன்னால்
விலை மதித்து நிற்பதென்ன

மதிக்கப்பட்ட விலையினிலே
மண வாழ்க்கை தடைப்படவே
கன்னியவள் கயல் விழியில்
கண்ணீரின் கோலமென்ன?

வாழையூர்: சி. லோகேஸ்வரி

---

மற்றவர்கள் உன்னிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறாயா? நீ மற்றவர்களிடம் பணிவாக நட. அவர்கள் தாமாகவே உன்னிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்.

மனிதத் தன்மையுடைய உண்மையான மனிதனாக வாழ ஆசைப்படுகின்றாயா? அதற்கு ஒரே மார்க்கம் இறைவனிடம் பயமும், பக்தியும் கொள்வதுதான்.

தன்னலமும் அளவு கடந்த பேராசையும்தான் துன்பத்திற்கு அஸ்திவாரமாக அமைகின்றன.

சிறுகதை

# போட்டிகளும் புரிந்துணர்வும்

திருமதி. ராஜலோகினி செல்வராஜா
இந்துக் கல்லூரி
வாழைச்சேனை.

பிரியதர்ஷினி ரீச்சர் மாணவர்களை ஒழுங்காக உட்காருமாறு பணித்துவிட்டு மாணவர்களின் முகங்களை ஒவ்வொன்றாக உற்றுப் பார்க்கின்றாள். மலர்களிலே கரு வண்டு அமர்ந்திருப்பது போல அந்த மதி முகங்களிலே கண்கள் அலைபாய்வதை என்றுமே ரசிக்கத் தவறியவளில்லை அவள். போட்டிக்குத் தயாரான அவர்களைப் பார்க்கும் போது ஏதோ ஒன்று மனதிலே கனப்பதாக அவள் உணர்கின்றாள். எத்தனை இரவுகள் பகல்களாக மனனஞ் செய்திருப்பார்கள் இவர்கள். இத்தனை பேரிலும் தெரிவு செய்யப்பட வேண்டியது ஒரு மாணவனோ ஒரு மாணவியோ தான்.

பாடசாலை மட்டத்திலான தமிழ்த் தின விழா அன்று நடைபெறப் போகின்றது. மத்தியஸ்தம் வகிப்பவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து கொள்கின்றார்கள். போட்டி தொடங்குகின்றது. முதலாம் பிரிவைச் சேர்ந்த அந்தச் சிறிய மாணவ மாணவியர் தத்தம் திறமைகளைக் காட்டிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவர் முகத்திலும்தான் எத்தனை விதமான பாவங்கள். ஒவ்வொருவரிடமும் திறமைகள் மறைந்து காணப்படுகின்றன. அதை வெளிக் கொணரவும், வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைச் சிறுவயதிலிருந்தே வளர்க்கவும்தானே இப்போட்டிகள் ஆனால் இதை எத்தனை பெற்றோர்கள் உணர்கின்றார்கள்?

பிரியதர்ஷினி கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து போகின்றாள்.

போனவருடம், பாடசாலை மட்டத்திலான தமிழ்த்தினவிழா இரண்டு நாட்களுக்கு முன்பதாகத்தான் நடந்து முடிந்திருந்தது. வகுப்பில் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தவளை அதிபர் அழைப்பதாக ஒரு மாணவி வந்து கூறவே, அந்தப் பாடவேளை முடிந்ததும் அதிபரின் காரியாலயம் நோக்கி நடைபோடுகின்றாள் பிரியதர்ஷினி. ''மிஸ், இது உங்கள் வகுப்பில் படிக்கும் லக்சுமியின் தந்தை மிஸ்டர் நரேந்திரன். இவர் தமிழ்த்தின விழா பற்றி உங்களுடன் ஏதோ பேச வேண்டுமாம்'' அதிபர் கூறி முடித்துவிட்டு நரேந்திரனின் முகத்தைப் பார்க்கின்றார். ''என்ன விடயம்,'' என்பது போல நரேந்திரனை ஏறிட்டுப் பார்த்த பிரியதர்ஷினியை எரித்து விடுபவர் போலப் பார்க்கின்றார் நரேந்திரன். ''மிஸ் உங்களுக்கு வேண்டுமானால் இது விளையாட்டாக இருக்கலாம். எனக்கு என்பிள்ளை பெரிது. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு. எத்தனை நாட்கள் ரீயூசன் வகுப்புக்களை விட்டு விட்டு இவற்றை என் பிள்ளை பாடமாக்கியது தெரியுமா? அந்த நான்கு தலைப்பிலும் அமைந்த பேச்சுக்களை என் பிள்ளை, அதுவும் பத்து வயதுக் குழந்தை இரவு பகலாகக் கண்ணிமைக்காமல் மனனஞ் செய்தது எனக்குத்தான் தெரியும். அதைக் கொத்தணி மட்டத்திலான போட்டிக்கு எடுக்காமல் தள்ளிட்டீங்களே? யாரோ ஒரு ஜனனியாம். அந்தச் சிறுமிக்குத்தான் எல்லாவற்றிலும் முதலிடம் கொடுக்கிறீர்களாமே?'' சரமாரியாக வந்து விழுந்த கணைகளைத் தாங்க முடியாமல் பிரியதர்ஷினி விக்கித்துப் போகின்றாள்.

சிவந்த அழகான பிரியதர்ஷியின் முகம் பொய்யான குற்றச் சாட்டுக்களைக் கேட்டு கோபத்தினால் இன்னும் சிவந்து போகின்றது. திடீரென ஏற்பட்ட படபடப்பிலும், கோபத்திலும் கண்களில் நீர்துளிர்க்கப் பார்க்கின்றது.

''இந்த விழாவை நடாத்த நான் எத்தனை பாடுபட்டிருப்பேன். எத்தனை மாணவர் வகுப்பில் இருக்கிறார்களோ அத்தனை பேரையும் வைத்து இப்படித்தான் கட்டுரை

எழுத வேண்டும், இப்படித்தான் பேச வேண்டும் என்று எவ்வளவு காலமாகப் பயிற்றுவித்திருப்பேன். வகுப்பிலுள்ள அத்தனை பேரும் பங்குபற்ற வேண்டும் என்பதற்காகத் தானே போட்டிகள். பாடசாலை மட்டத்திலான போட்டிகள் முடியும் வரை வீடு செல்வதே நான் ஆறு மணிக்குத்தானே. ஜனனி, எல்லாவற்றிலும் கெட்டிகாரக் குழந்தை. பட்பட்டென்று எதையும் பிடித்து விடும் ஆற்றல் அவளுக்கு இருப்பது உண்மை தான். இருந்தாலும் மற்றவர்களிடத்தும் திறமையை வளர்க்க நான் எவ்வளவு பாடு பட்டிருப்பேன்? இந்த நரேந்திரனின் சின்ன லக்சுமியைப் பக்கத்தில் இருத்தியல்லவா கட்டுரை எழுதச் சொல்லிக் கொடுப்பேன்; பேசப் பயிற்றுவித்திருப்பேன். அப்படிப்பட்ட என்மீது இந்தக் குற்றச்சாட்டு?''

மனதிற்குள் நினைத்துக் கொண்ட பிரியதர்ஷினி ரீச்சர் பொங்கியெழுந்த கோபத்தையும், வேதனையையும் கட்டுப்படுத்திக் கொண்டாள். ''நான் ஒரு ஆசிரியை. மற்றவர்கட்கு வழிகாட்ட வேண்டிய நானே கோபப்படலாமா? வேதனைப்படலாமா? தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவள் அவரை நிமிர்ந்து பார்க்கின்றாள். ''இந்தப் போட்டியில் உங்கள் மகள் தெரிவு செய்யப் படவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும், உங்கள் மகள், மனனம் செய்த பேச்சுக்களும், எழுதிய கட்டுரைகளும் அவளுடைய திறமையையும், அறிவையும், ஆளுமையையும் மென்மேலும் வளர்க்குமே தவிரக் குறைத்து விடாது. போட்டிகள் மாணவர்களிடையே ஆளுமையைப் பலப்படுத்தி, வெற்றி தோல்விகளைத் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவத்தை வளர்க்கவேயன்றிப் பொறாமையை ஏற்படுத்தவோ, மனத்தாக்கத்தை ஏற்படுத்தவோ அல்ல'

பிரியதர்ஷினி ரீச்சரின் பேச்சு நரேந்திரனுக்குச் சமாதானத்தை எந்த வகையிலும் ஏற்படுத்தவில்லை என்பது அவரின் முகபாவத்திலிருந்தே அவளால் ஊகித்துக் கொள்ள முடிகின்றது. ஆனாலும் வெகு சீக்கிரமே அவரைச் சந்தித்து உண்மை நிலையை ஒப்புக் கொள்ள வைப்போம் என்று பிரியதர்ஷினி கனவிலுமே நினைக்கவில்லை.

நரேந்திரன் பாடசாலைக்கு வந்து போய் ஒரு மாதம் கூட இருக்காது. அதற்கிடையில் பாடசாலையில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி தொடங்கி விட்டது. விளையாட்டுப் போட்டி மும்முரத்தில் பிரியதர்ஷினி ரீச்சருக்கு நரேந்திரனால் ஏற்பட்ட மனவேதனை மாறிவிட்டிருந்தது என்றே சொல்லலாம்.

அன்று விளையாட்டுப் போட்டி இறுதி நாள். நரேந்திரனின் அன்பு மகள் லக்சுமியும் பிரியதர்ஷினி ரீச்சரின் இல்லம் தான். சிவப்பு நிறச் சேலையில் அழகிய தேவதை போல அந்தக் கொளுத்தும் மைதானத்தில் நின்றிருந்த பிரியதர்ஷினி தற்செயலாக நிமிர்ந்து பார்த்தவள் அந்தச் சிரிப்புக்குச் சொந்தக்காரன் நரேந்திரனே என்பதை அடையாளம் கண்டு கொண்டு விடுகிறாள்.

ஒவ்வொரு போட்டியிலும் முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் தமது அன்புச் செல்வம் லக்சுமியை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர் நரேந்திரன் தம்பதியினர். லக்சுமியோடு ஓட்டப் பந்தயத்தில் கடைசியாக வந்து கொண்டிருக்கிறாள் ஜனனி.

'பதினொரு வயதுக்குட்பட்ட மாணவிகளிலே வெற்றி வீராங்கனையாகத் திகழ்பவள் செல்வி. லக்சுமி நரேந்திரன்' அறிவிப்பாளர் தனக்கேயுரித்தான கம்பீரத் தொனியில் கூறி முடித்ததும் கரகோஷம் வானை முட்டுகின்றது. தாய் தந்தையருக்கிடையில் வெற்றிப் பூரிப்புடன் நின்றிருக்கும் லக்சுமியை நோக்கி நடந்து அவளின் பிஞ்சுக் கையைப் பற்றி குலுக்குகின்றாள் ரீச்சர். 'மிஸ்டர் நரேந்திரன் எல்லாக் குழந்தைகளுமே ஒரு துறையில் ஆளுமையுடையவங்க தான். நீங்க குற்றஞ் சாட்டிய அதே ஜனனிதான் லக்சுமி கலந்து கொண்ட ஒவ்வொரு போட்டியிலுமே தோற்றுப் போனவள். பெற்றோர் என்னும் வகையில் இப்போதாவது இதை நீங்கள் புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன்.'

'ஐயாம் வெரி சொறி ரீச்சர்' 'என்னை மன்னித்து விடுங்கள்.' நரேந்திரன் எல்லாம் புரிந்து கொண்ட பாவனையில் தான் அன்று உணர்ச்சி வசப்பட்டுப் போனதற்கு மன்னிப்புக் கோருகின்றான். 'இற்ஸ் ஓல் றைட் மிஸ்டர் நரேந்திரன். நீங்கள் புரிந்து கொண்டதே போதும்' மீண்டும் ஒருமுறை லக்சுமியின் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டுக் கம்பீரமாகத் தன் இல்லத்தை நோக்கி நடக்கும் பிரியதர்ஷினி ரீச்சரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர் நரேந்திரன் தம்பதியினர்.

பலத்த கைதட்டல் ஒலி பிரியதர்ஷினி யின் சிந்தனையைக் கலைக்கின்றது. பாட சாலை மட்டத்திலான போட்டி முடிவுகளை அதிபர் ஒவ்வொன்றாக வாசிக்கின்றார். முத லாம் பிரிவு செல்வி ஜனனி சொரூபராஜா, இரண்டாம் பிரிவு செல்வன் செவ்வேள் சுகு மாரன், மூன்றாம் பிரிவு தமயந்தி நடராஜா அறிவிப்புக்கள் தொடர்ந்து கொண்டே போகின்றன. பிரியதர்ஷினி ரீச்சர் நெற்றி யில் விழுந்த சுருள்கற்றைகளை ஒதுக்கி விட்டுக் கொண்டு, மெதுவாக எழுந்து பங்கு பற்றியோர் பக்கம் செல்கின்றாள், போட்டி யில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்தவல்ல; போட்டியில் பங்கு பற்றியவர்களை வாழ்த்தி உற்சாகப்படுத்த.

(யாவும் கற்பனையே)

# ஒரு கவிஞனின் கவலை

காலமெல்லாம் எழுதியதை கையிலேந்தி
கால் நடையாய் நானலைந்து
களைத்துப் போனேன்
கண்டவரோ எது கவிதை என்று கேட்டார்
காதலில்லை வேண்டாமென்று
தூக்கிப் போட்டார்.

கும்பரசம் இருந்தால் தான் காசுசேரும்
கண்டறியா தத்துவமா? - சோறு போடும்
கடுகடுத்து சுடும் சொல்லால் கதவைமூடும்
கடும் மதிப்புக் காரரினால் கண்கள் மூடும்.
கவியரசர் கல்லறையை நின்று நோக்கு
கவிமனமோ சாக்காட்டில் இன்று வேகும்.

காதலினைப் பாடுவதற்காக கவிஞன் என்பேன்
கற்பனையில் தீக்குளித்து பிறந்து வந்தேன்.
கன்னிரசம் பெறுவதற்கா கவிதை நூல்கள்?
கவலை முகம் உய்வதற்கா கவியின் வேல்கள்?
கண்ணிரெண்டில் நீர்வடிய கவலை கொண்டேன்
கடும் வறுமை என்றாலும் பாட மாட்டேன்.

மனோகரன் துஷ்யந்தி
13 - கலைப்பிரிவு

விமர்சனக் கட்டுரை

# இன்பமும் துன்பமும் இரண்டு பாடல்களில் ஆய்வு

க. தயாழகுணசேகரன்
ஆண்டு 11 C

---

(க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் என்பதால் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. தமிழ் பயிலுவோருக்கு விமர்சனம் எழுதுவது இன்றியமையாத ஓர் அம்சமாக உள்ளது. விமர்சனக் கட்டுரை என்ற கண்ணோட்டத்தில் இதனைப் படிக்குமாறு வேண்டுகிறோம்:
- ஆசிரியர் குழு)

## இ ன் ப ம்

பாடலுக்கான அடித்தளம்:

சிறு வயதில் பெற்றோரை இழந்த அண்ணன் தன் ஒரே அன்புத் தங்கையைப் பாசத்துடன் வளர்த்து அவள் பருவமடைந்த பின் அவள் விரும்பியவனை மணமுடித்துக் கொடுத்துவிட்டு தொழிலின்நிமித்தம் வேறூர் செல்கிறான். விதியின் விளையாட்டால் தங்கை கணவனையும் மழலை பேசும் மகனையும் பிரிகிறாள். வெளியூர் சென்ற அண்ணன் வீடு திரும்பும் வழியில் அழுது கொண்டு நின்ற சிறு பிள்ளை ஒன்றைத் தூக்கி அவனை அரவணைத்து ஆறுதல் படுத்துகிறான். அப்பிள்ளை தனது சொந்த மருமகன் என்பதை அவன் அறியான். தன் மருமகன் இப்படித் தானிருப்பானென்ற மகிழ்ச்சியில் அந்த அண்ணன் பாடும் பாடல் இது.

காலம் சென்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் இயற்றிய பாடல் இது. மறைந்த இசை மேதை ஜீ. ராமநாதன் அவர்கள் இசையில் உணர்ச்சிப் பாடகர் ரீ. எம். சௌந்தரராஜன் அவர்கள் தமது கம்பீரத் தொனியில் பாடிய பாடலிது. இப்பாடல் காட்சியிலே மறைந்த தமிழக முதல்வர் எம். ஜீ. இராமச்சந்திரன் அவர்கள் அற்புதமாக நடித்துள்ளார்.

இனி இப்பாடல் வரிகளிலே கவிஞர் சொல்லி வைத்த அரிய கருத்துக்களைப் பார்ப்போம். பாடல் இப்படி ஆரம்பமாகிறது.

*சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா*
*நான் சொல்லப் போற வார்த்தையை நல்லா எண்ணிப் பாரடா!*

மனித வளர்ச்சி பற்றிப் புலவர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

*ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதான்டா வளர்ச்சி*
*உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி!*

தாய்க்குப் பிள்ளை கொடுக்கக் கூடிய மகிழ்ச்சி எது என்பதைப் புலவர் சொல்லிக் காட்டுகிறார். அது மட்டுமா?

*ஒவ்வொரு நாளும் கூறும் காலம் தரும் பயிற்சி*
*உன் நரம்போடுதான் பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி*
*மனிதனாக வாழ வேண்டும் மனதில் வையடா*
*வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையடா*
*தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா*
*தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!*

இவ்வரிகள் நாளைய உலகின் மன்னர்களான இன்றைய சிறுவர்களுக்கு தன்மானத்தையும், மனிதத் தன்மையையும் ஊட்டவில்லையா? ''நாளை நமதே'' என்ற நம்பிக்கை ஒளியை அவர்களுக்குக் காட்டவில்லையா? கொடுமையைக் கண்டு பொறுக்கக் கூடாது என்று அர்த்தமற்ற பழைய மூட நம்பிக்கைகள் தேவையில்லை என்றும் புலவர் சாடுகிறார். இச்சாடல் வரிகள் சௌந்தரராஜன் அவர்களின் உயிர்த்துடிப்பான இனிய குரலில் இன்னும் மெருகூட்டப்படுகிறது.

விளையாட்டுப் பிள்ளைகளின் பிறப்புரிமை, பத்தாம் பசலிக் கதைகள் சொல்லிப் பிள்ளைகளின் விளையாட்டு ஆர்வத்தையும் அவர்களின் வீர உணர்வையும் மழுங்கடிப்பது மகா பாவம். இப்படியானவர்களைக் கவிஞர் ''வீணர்கள்'' எனக் கிண்டல் செய்கிறார். இதோ அப்பாடல் வரிகள்.

வேப்ப மர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதின்னு
விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க
உன் வீரத்தை முளையிலேயே கிள்ளி வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தையினை
வேடிக்கையாகக் கூட நம்பிவிடாதே
நீ வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்து வெம்பி விடாதே!

எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிமையான, இனிய, அன்றாடம் பாமர மக்கள் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்களைக் கொண்டு கவிதை வரம்பு மீறாமல் இப்பாடலை இயற்றியுள்ளார் கவிஞர். எளிய தமிழ் நடையில் அரிய வாழ்க்கைத் தத்துவங்களையும்உண்மைகளையும் கவிதையில் வடிக்குமாற்றல் கல்யாணசுந்தரம் அவர்களுக்கு இறைவன் கொடுத்த வரமாகும்.

### நூன்பம்

பாடலுக்கான அடித்தளம்:

அவள் ஓர் அனாதை; ஏழையும் கூட. ஆனால் சிறந்த நடனப் பெண். செல்வந்தர் ஒருவரின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலை செய்கிறாள். அச்செல்வந்தரின் மகன் சிறந்த கலாரசிகன். அவளுடைய நடனக் கலையை நேசித்து போற்றுகிறான். ஆனால் அப்பேதை அவன் தன்னையே நேசிப்பதாகக் கருதி அவன் மேல் காதல் கொள்கிறாள் அது ஒருதலைக் காதல். ஆனால் தன் உயிரினுமினிய தோழியை அவன் காதலிப்பதையறிந்து அப்பெண் மனமுடைந்து போகிறாள். சாதாரண பெண்ணைப் போல் தோழி மேல் பொறாமையோ ஆத்திரமோ கொள்ளாமல், தன் ஒருதலைக் காதலுக்குத் தன் மனதிலேயே சமாதி கட்டுகிறாள். உளமார நேசித்த காதலன் கிடையாமற் போனதால் உடலால் மட்டும் இன்னொருவனுக்கு மனைவியாக வாழ அவள் விரும்பவில்லை. மோதிரத்தில் இருந்த வைரக் கல்லைப் பொடி செய்து விழுங்கி விட்டுத் தன் காதலனும் தோழியும் கணவன் மனைவியாக வீற்றிருக்க வாழ்வில் கடைசித் தடவையாகக் காலில் சலங்கையுடன் மேடையேறுகிறாள். பாடல் முடிய அவள் உயிரும் உடலை விட்டுப் பிரிகிறது.

பாடலுக்கான விளக்கம்

காதலென்றால் என்ன? இரு உள்ளங்களின் சங்கமம்; இரு உடல்களின் சங்கமம்; உயிரினங்களுக்கு இயல்பாகவே ஏற்படும் ஓர் உணர்வு- இப்படிப் பலவிதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. இப்பாடலிலே கவிஞர் புதுமையான ஆனால் அர்த்த புஷ்டியுள்ள வரைவிலக்கணம் கூறியுள்ளார். இப்பாடலின் ஆரம்ப வரிகள் இப்படி அமைகின்றன.

நிலையாக என் நெஞ்சில் ஒளிவீசும் தீபம்
நீயே எந்நாளும் என் காதல் தெய்வம்!

காதலன் மேல் அப்பெண் கொண்டுள்ள காதல் எவ்வளவு ஆழமானது! உயிருடன் இருக்கும் வரை அவள் காதலன் மட்டுமே அவள் நெஞ்சில் இருப்பான். அவள் இறந்த பின் நெருப்புக்கூட அவள் நெஞ்சை நெருங்க முடியாது என்று கூறுகிறாள். கவிஞரின் கற்பனை எவ்வளவு ஆழமானது!

நிலைமாறியே நான் பிரிந்தேகலாம்
என் நேசக் காதல் ஆசை யாவும் கனவாகலாம்
எத்தனை ஜென்மம் நானெடுத்தாலும்
இனித்திடும் உந்தன் எண்ணம் நீங்குமா?
தீ இந்த உடல் கூட்டை எரித்தாலும்
அது நீ இருக்கும் என் நெஞ்சை நெருங்காது!

தன்னலம் அறவேயற்ற உண்மையான தியாகத்திற்கு ஈடு இணை உண்டோ? தியாகமே மிகச் சிறந்த இன்பம். இதை உணர்த்தும் வரிகள்,

காதலர் ஒன்று சேர்ந்தாலேயல்லாது வாழ்விலே
இன்பம் நேராது என்பதும் இல்லையே
உள்ளம் கொள்ளை கொண்ட அன்பர் நல்வாழ்வை நாடும்
உண்மையான தியாகத்தாலும் பேரின்பம் நேரும்!

கவிஞரின் உணர்ச்சி பூர்வமான இப்பாடலுக்கு இசையமைப்பாளர் மிகப் பொருத்தமான

இசை வடிவம் கொடுக்க திருமதி. பி. சுசீலா அவர்கள் பாடலுக்கான சூழ்நிலையை நன்குணர்ந்து கேட்போர் நெஞ்சம் உருகும் வண்ணம் இப்பாடலைப் பாடியுள்ளார். என்றுமே நெஞ்சை விட்டகலாப் பாடல் இது.

கற்பனை வளமும், கருத்தாழமும் கொண்ட கவிஞரும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மெட்டமைத்து இசை வடிவம் கொடுக்கும் இசையமைப்பாளரும், குரலில் உணர்ச்சி கொப்பளிக்கப் பாடும் பாடகரும், பாடலுக்கேற்ற அபிநயத்துடன் தத்ரூபமாக நடிக்கும் நடிகரும் சம்பந்தப்பட்ட காட்சியை மிகைப்படுத்தாமல் இயல்பாக அமைத்து வழங்கக் கூடிய இயக்குநரும் சேர்ந்தால் பாடல் காலத்தால் அழியாத காவியமாகிவிடும் என்பதற்கு இப்பாடல் மிகச் சிறந்த உதாரணமாகும்.

# இமயப்பறவையே எழு

*அக நானூறாக அடங்கியது*
*போதும்!*
*புற நானூறாக புறப்பட்டு*
*வா பெண்ணே!*
*இமயப் பறவையே*
*எழு எழு!*
*எத்தனை ஆண்டு காலம் - நீ*
*உறங்கிக் கிடப்பாய்!*

*உதட்டுக்கு சாயம் பூசுவதும்*
*ஆண்களை ஒதுக்குவதும்*
*பிசாசு போல் தலையைப்*
*பிய்த்து விட்டு*
*கொள்வதுந்தான்*
*பெண்ணுரிமை என்றால்*
*நம் ஈழத்தில் எப்படி*
*விழிப்புணர்ச்சி தோன்றும்!*

*நேராகப் பார்த்து நேராக நடக்கத்*
*தொடங்கு*
*மலரென்றும் நிலவென்றும்*
*உன்னை வர்ணித்து அலுத்தவர்கள்*
*மலைத்துப் போய் நிற்கட்டும்!*
*நீ ஒற்றைச் சூரியனாய்*
*ஒரு பயணத்தை தொடங்கு*
*இப்பொழுது திரும்பிப் பார்*
*உன்பின்னால் எத்தனை*
*விளக்குகள் வீதி உலா*
*வருகின்றன!*

சி. பிரதீபன்
*12 வர்த்தகம்*

# எலும்புகள் எளிதில் சிதைவதில்லை ஏன்?

செல்வி. தயானி நடேசன்
ஆண்டு 11 V

**எலும்புகள் எளிதில் சிதைவதில்லை ஏன்?**

இறந்த உடல்கள் மண்ணில் புதைக்கப் படும் போது, அவ் உடலில் பல மாற்றங்கள் ஏற்படும் தசை பகுதிகள் மண்ணில் உள்ள இரசாயணப் பொருட்களால் அழியும் எலும் புக் கூடுகள் மட்டும் சிதையாமல் மிஞ்சும். அதிலும் லேசான சிறிய எலும்புகள் சிதை யாது. எலும்புகள் பொஸ்பரஸ், கல்சியம் போன்ற இரசாயணப் பொருட்களால் ஆனது. கல்சியம் எலும்புகளுக்கு உறுதியை அளிக்கி றது. அதனால்தான் அவை எளிதில் சிதை வதில்லை.

**பற்கள் விழுவது ஏன்?**

பற்களும், எலும்புகளுடன் சேர்ந்தவை தான். எலும்புகளைவிட பற்கள் உறுதியா னவை. ஆனாலும் சில மனிதர்களுக்கு பற் களின் உறுதித் தன்மை போய் பற்கள் விழுந்து விடுகின்றன. பற்களைச் சுத்தமாகப் பராமரிக் காவிட்டால் அவற்றின் இடைவெளிகளில் உணவுப் பொருட்கள் தங்கி அவை நச்சுக் கிருமிகளை உருவாக்கி பற்களை அழித்து விடும். விபத்துக்கள், பிறருடன் சண்டையி டுதல் ஆகியவற்றாலும் பற்கள் விழும்.

**மனிதன் இருகாலில் நடப்பது ஏன்?**

இருகாலில் நடப்பது அதிசயமானதல்ல. ஆனால் குரங்கில் இருந்து படிப்படியாக மனித உருவம் வந்ததாகக் கூறப்படுகிறது. அப்படிப் பார்த்தால் கற்கால மனிதனின் முழு முயற்சியே இன்று மனிதன் கைகளை வீசிக் கொண்டு இரு காலால் வேகமாக நடை போடுவதற்கு வழிவகுத்துள்ளது. அவ்வாறு நடப்பதற்கு மிகுந்த திறன் வேண் டும். தளர்நடை போடத்துவங்கும் குழந்தைக்கு அந்த வயதிலேயே நேராக நிமிர்ந்து நடப்ப தற்கேற்ற மனத்திடம் வந்து விடுகின்றது. மனித குரங்குகள் எனப்படும் கொரில்லாக் கள் உடல் அமைப்பை ஒத்துள்ளன. ஆனா லும் அவை கூட இருகாலால் நடக்கும் போது வேகமாக மனிதர்களைப் போல தள் ளாடாமல் நடப்பதில்லை.

கொரில்லா குரங்குகளின் பாத அமைப் பும், மனிதனின் பாத அமைப்பும் வேறுபட் டவை. மனிதனின் பாதங்கள் தட்டையா னது. கொரில்லாவின் பாதம் சற்றே குழிவா னது. கொரில்லாவின் கால் விரல்கள் வளைந் தாற் போல் இருக்கும். அதன் காற் பெரு விரலை மற்ற விரல்களில் இருந்து பிரித்து கொள்ள முடியும். வளைவான மரக்கிளை களைப் பற்றிக் கொள்ள உதவியாக இந்த அமைப்பு உள்ளது. மனிதனுக்கு மரக்கிளை களில் ஏறவேண்டிய அவசியம் இல்லை. கொரில்லாக்கள் காடுகளில் வாழுகின்றன. மரக்கிளைகளில் தாவுவதற்கு வசதியாக அதன் கால்கள் அமைந்துள்ளன.

---

ஆழ்ந்த அன்பிலே தான் உயர்ந்த உண்மை மலர்கின்றது. அன்பு புறக் கணிக்கப்படும் போது உண்மை தானாகவே ஓடி ஒளிந்து விடுகிறது.

கடுமையாக உழைக்கத் தயாராக இருக்கும் எந்த மனிதனும் வாழ்க்கை யில் சந்தோஷமாக வாழ்வான்.

சி. றெஜிப்பிறேமினி

---

# உழைப்பும் கலையும்

**M. இந்திராதேவி**
ஆசிரியை

**ஆ**திகால மனிதன் மிருகங்களில் இருந்து பெரிதும் வேறுபடாதவன். அவன் கூட்டாக வாழ்ந்தான். கூட்டாகவே உழைத்தான். கூட்டாக உண்டான். இவ்வாறே மகிழ்ந்தான். ஏன் துன்பத்தையும் அவ்வாறே அனுபவித்தான். இந்த கூட்டு வாழ்வின் கூட்டு உழைப்பின் வெற்றியே அவனிடம் அகமகிழ்வை உண்டாக்கியது எனலாம். இந்த அகமகிழ்வில் பிறந்தவையே ஆட்டமும், பாட்டுமாகும்.

இவை மேலும் ஆய்வோமாயின் வேட்டையாடிய மனிதன் வேட்டை கிடைத்த மகிழ்ச்சியில் வேட்டைப் பொருளை தீயில் இட்டு அவனின் இயல்பான எழுச்சிக்கு இணங்க அப்பொருளை சுற்றிநின்று குரல்களை எழுப்பியும் தன் அங்கங்களை அசைத்தும், துள்ளலும் குறிப்புமே பிற்கால பாட்டும் கூத்தும் ஆயிற்று. ஆக கலையும் உழைப்பும் கலந்தே தோன்றினவாகும்.

உழைப்பில் இருந்தே கலை பிறக்கின்றது. அதாவது கூட்டு உழைப்பில் இருந்து கூட்டுக் கலைகள் பிறக்கின்றன. இவையே ஆதிக் கலைகளில் காணப்படும் கூட்டுத் தன்மைக்கு காரணம் எனலாம். அதுமட்டுமா இன்றும் நாகரீகங்கள் சரிவர எட்டாத சமூகங்களில் பல்வேறு தொழில்களின் போதும் உழைப்பாளர்கள் கூட்டுக்கலைகளில் ஈடுபடுவதை நாம் காண முடிகிறது.

வயலில் இறங்கி அரிவி வெட்டுகிறான். அவ்வேளை அருவி வெட்டுப்பாடல் பெண்கள் பலர் சேர்ந்து நெல்லிடிப்பர் அப்போது நெல் இடிக்கும் பாடல் போன்ற இன்னோரன்ன பாடல்வகைகள் தமிழர் மத்தியில் உள்ள நாட்டார் தொழில்ப் பாடல்கள் கூட்டு உழைப்பினின்றும் உதித்தவையே. மனிதனது அனுபவங்கள் இருவகையாய் வெளிப்படும் வேளை அவை அவனது புறத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி துறையிலான முயற்சிகளாகவும் அவனது அகத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கலைத் துறையிலான முயற்சிகளாகவும் அமைந்தன.

புற உலகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மனித முயற்சிகளின் வளர்ச்சி நியதிகளுக்கு ஏற்ப அவனின் அகத்தேவைகள் பூர்த்தி செய்யும் கலை முயற்சிகளின் தன்மையும் வளர்ச்சியடைகின்றன. எடுத்துக்காட்டாக நிலமானிய சமூகத்தின் கலை வடிவங்களும் அவற்றின் தன்மைகளும் முதலாளித்துவ சமுதாயத்தின் வேறுவிதமான தன்மையையும் வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றதை கூறலாம். உதாரணமாக நிலமானிய சமுதாயத்தில் நாவல் சிறுகதை போன்ற இலக்கிய உரை நடைகள் பெற்றிருந்தன. இவை தோன்றுவதற்கான அடிப்படைக் காரணி அச்சுக்கலையின் தோற்றமும் வளர்ச்சியுமே. அச்சுக்கலையின் கண்டுபிடிப்பு என்ற உழைப்பே நாவல் சிறுகதை போன்றவை தோன்ற ஆதாரமாகின.

மனிதனின் அகத்தேவை புறத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கலைகளான முறையே பயன்படுகலைகள் நுண்கலைகள் என்பனவாகும். இவற்றின் பயன்படுகலைகள் அன்றாடம் நாம் பயன்படுத்தும் நுகர்வு பண்டங்களோடு தொடர்பாக அமைய நுண் கலைகள் மனித உணர்வுகளோடு தொடர்பானதாகும்.

எனவே மின்சாரக் கண்டுபிடிப்பு வானொலி தொலைக்காட்சி இன்னும் எத்தனையோ கண்டுபிடிப்புக்கள் கணனிகளின் கண்டுபிடிப்பு ஆகிய உழைப்புக்கள் யாவும் கலைத்துறையில் பல மாற்றங்களும் புதியனவும் வந்து சேரக்காலாகின. மின்சாரத்தால் இயக்கப்படும் இசைக்கருவிகள், கணனி அமைப்புக் கொண்ட இசைக்கருவிகள், வானொலி தொலைக்காட்சி நாடகங்கள் போன்றனவும் சினிமாத்துறையும் கூட மனித உழைப்பின் வெளிப்பாடேயாம். இவ்வாறெல்லாம் எக்கலையை நோக்கினும் அக்கலைகள் யாவும் உழைப்பின் வடிவமே உழைப்பும் கலையும் ஒன்றில் இருந்து ஒன்று வேறானவை அல்ல. இவ்வாறான கலைகளின் தோற்றத்துக்கும் அதன இடையறாத வளர்ச்சிக்கும் மனித உழைப்பே அடி ஆதாரமாகும்.

# கொலை கொலை கொலை

செல்வி. சின்னத்தம்பி ஸோபா
12 கலை
வாழைச்சேனை

தைப்பொங்கலுக்கு சில தினங்களுக்கு முன் நாள் இரவு சுமார் பன்னிரண்டு மணி இருக்கும் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அவ்வேளையில் சன நடமாட்டமே இருப்பதில்லை. ஏனெனில் வீதியில் இரவில் அதிரடிப்படையினர் மட்டுமே சுற்றித் திரிவார்கள். மோகன் அவ்வேளையில் தான் இரவு ஷிப்ட் முடிந்து தொழிற்சாலையில் இருந்து வந்தான் வெளியிலே வந்த மோகன் தன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அவன் செல்லும் வழியில் ஒரு வீட்டில் மட்டும் வெளிச்சம் கதவின் இடைவெளியில் தெரிந்தது. அத்துடன் இன்னும் சிலர் பரபரப்புடன் பேசும் சத்தமும் கேட்டது. உடனே மோகன் கதவின் அருகே சென்றான். மெதுவாக அங்கு ஓர் குரல் ''முதலில்நீர் கழுத்தையும் கையையும் வெட்டு மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றது. மோகன் திடுக்கிட்டான். ஆத்திரம் பொங்கியது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கதவை உடைத்து குறுக்கிடலாம் என்று நினைத்தான். ஆனால் அவனது கோழை மனம் பின் வாங்கியது.

மேலும் அவனது சட்டைப்பையில் தைப் பொங்கல் போனஸ் பணம் இருந்தமையாலும் பயம் மேலிட்டு இதயத் துடிப்பு அதிகரித்தது கால்கள் நடுங்கின. மயிர்கள் சிலிர்த்தன. வியர்வை கொட்டியது. தன் வீட்டுக்குச் சென்று விடலாம் எனவும் அவனது கோழை மனம் எண்ணியது. ஆனால் பிறர் நலத்தில் அக்கறை கொண்ட அவன் நெஞ்சம் அதைத் தடுத்தது. ஒரு கணம் யோசித்தான். திடீரென அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

விரைந்து ஓடினான் காவல் நிலையத்திற்கு ''நீ கழுத்தையும் கையையும் வெட்டு மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்ற குரல் அவனது காதுகளில் மீண்டும், மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. காவல் நிலையத்திற்கு அந்நேரத்தில் சென்றால் பொலிஸ்காரர்கள் சுடுவார்கள் என்ற பயமும் அவனை வாட்டியது. கையை உயர்த்திய படி காவல் நிலையத்திற்கு முன்னால் இருக்கும் பொலிஸ்காரரிடம் அனுமதியைப் பெற்று உள்ளே சென்றான்.

ஏதோ அவனின் நல்ல காலம் பொலிசார் அவனைச் சுடவில்லை. இல்லாவிட்டால் அவன் பொங்கலை யமலோகத்தில் தான் கொண்டாடியிருப்பான். இன்ஸ்பெக்டர் அமர்ந்து இருந்தார். நடந்தவற்றைப் பயத்துடன் அவரிடம் கூறினான். கண்ணிவெடிக்குப் பயந்த இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் கால் நடையாகவே ஸ்தலத்திற்கு விரைந்து சென்றனர். கொலை நடக்கும் இடம் நோக்கி நெருங்கிச் சென்றனர்.

வெளிச்சம் அக்கதவின் இடுக்கினூடே நன்கு பிரகாசமாய் தெரிந்தது. சிறிது நேரம் நின்று கவனித்தனர். ஒரு குரல் ''உம் கை என்னாச்சு இடுப்பு கொஞ்சம் பெரிதாகத் தெரிகிறது. கையையும் இன்னும் கொஞ்சம் வெட்டு'' அதே குரல். இன்ஸ்பெக்டருக்கு ஆத்திரம் பொங்கியது. கோபத்துடன் உள்ளேயாரடா? கதவைத் திறங்கடா? என ஓங்கி கதவில் குத்தினார்.

திடீர் அதட்டல் சத்தத்தினால் உள்ளே நிசப்தம் நிலவியது. இந்நேரத்தில் அதிரடியோ எனப்பயந்து நடு நடுங்கினர், உள்ளே நின்றவர்கள். வெளியில் நின்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு நிமிடத்தில் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்து சென்றனர். அந்தோ பரிதாபம் துணி தைப்போர் இருவர் கையில் கத்தரிக்கோலும் துணியுமாக நடு நடுங்கிக் கொண்டு நின்றனர்.

-முற்றும்-

# அவளுக்கு கிடைத்த வாழ்வு

தர்மலிங்கம் - சுரேஷ்
12 விஞ்ஞானப் பிரிவு

பொழுது புலர்ந்து வெகுநேரம் ஆகி விட்டது. பகலவனின் இளம் சூட்டுக் கதிர்கள் யன்னலின் ஊடாக கட்டிலில் படுத்திருக்கும் காயத்திரி மேல் படர்ந்தன. அதையும் பொருட்படுத்தாமல் அவள் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அடுத்த அறையில் மணியோசையுடன் கணீர் என்ற குரலில் தோத்திரப்பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அக்குரலுக்குரியவர்தான் வைத்தியர் குமரேசன், அவளுடைய அப்பா. அவர் நாள் தவறாமல் காலையில் எழுந்து தோத்திரம் பாடி இறைவனைத் தியானம் பண்ணுவார். அவ்வளவு பக்தி கொண்டவர். அவரின் குணத்திற்கு ஏற்றாற்போல் மனைவி கண்ணம்மாள் அன்பும் பண்பும் நிறைந்த குடும்பப் பெண்ணாவாள்.

'காயத்திரீ!... மகள் காயத்திரி!!' ... என்று வாஞ்சையுடன் மகளை அழைத்தவாறே சமையலறையிலிருந்து மகளின் அறையை நோக்கி வந்தாள் கண்ணம்மாள் தாயின் குரலைக் கேட்டு வேண்டா வெறுப்புடன் எழுந்து 'என்னம்மா நீங்க கொஞ்சம் கூட தூங்க விடாம' .. என்று சிறுமியைப் போல் சிணுங்கிக் கொண்டே குளியலறைப் பக்கம் சென்றாள். காயத்திரி அவள் பெற்றோரின் ஒரே செல்ல மகள். அளவு மீறிய பாசம் ஆபத்தானது என்பதைப் பெற்றோர் அறியவில்லை.

காயத்திரி சிறு வயது முதல் படிப்பிலேயே ஆர்வம் உடையவளாய் படித்து பட்டமும் பெற்று தற்போது ஒரு கம்பனியில் தலைமைக் கணக்காய்வாளராகவும் வேலை பார்த்துக் கொண்டு இருந்தாள். இத்தனைக்கும் அவளை தகப்பன் குமரேசன் ஒரு நாளேனும் திட்டியதோ அடித்ததோ கிடையாது. அதனாலேயோ என்னமோ காயத்திரியிடம் எதற்குமே அடங்காத தன்மையொன்று நிழல் போல் இருந்து வந்தது.

வழமைபோல் காயத்திரி தன் காரில் அலுவலகம் சென்றாள். அவளின் காரைக் கண்ட காவலாளி எழுந்து மரியாதை காட்டினான். அதை அலட்சியம் செய்தவளாய் காயத்திரி அலுவலகத்துள்ளே பிரவேசித்ததும் அவளின் கீழ் வேலை பார்க்கும் அனைவரும் கிழவன் தொடக்கம் காளை வரை ''குட் மோணிங் மேடம்'' என்று ஒருவித மரியாதையுடன் காலை வணக்கம் தெரிவித்தனர். அவள் அதற்கு ஒரு அதிகாரப் பார்வையுடன் தலையாட்டியபடியே தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்தாள். அவளுடைய கண்கள் அப்போது எதிர் அறையில் யாரையோ தேடிக் கொண்டிருந்தன. சிறிது நேரத்தின் பின் ஓர் வாட்டசாட்டமான இருபத்தாறு வயது மதிக்கத்தக்க இளைஞன் வந்தான். அவனைக் கண்டதும் காயத்திரி முக மலர்ச்சியுடன் ''குட் மோணிங் மாதவன். இன்று என்ன இவ்வளவு லேட்'' என்று வினவினாள்.

மாதவன் அவ்வலுவலகத்தின் முகாமையாளர். அவன் ஒரு பெரிய தொழிலதிபரின் மகன். விதவிதமான உடையணிந்து கொண்டு கோலோன் வாசனையுடன் எப்போதும் கண்ணிலே ஓர் கறுப்புக் கண்ணாடியுடன் நாகரீக மனிதனாகவே அவன் காட்சியளிப்பான். அதனால்தானே காயத்திரியும் அவனை விரும்புகிறாள். காயத்திரியும் மாதவனும்ஒருத்தரையொருத்தர் காதலிக்கின்றனர். இவ்விசயம் காயத்திரியின் தந்தை குமரேசனுக்கோ தாய் கண்ணம்மாளுக்கோ அறவே தெரியாது.

காலங்கள் கடந்தன. மாதவன் காயத்திரி காதலும் பெற்றோருக்குத் தெரியாமல் வளர்ந்து கொண்டே வந்தது. ஒருநாள் குமரேசன் தன் மகளை அழைத்து ''காயத்திரி நாளைக்கு எங்க வீட்டுல ஒரு விஷேசம் இருக்கிறதால அலுவலகத்துக்கு லீவு போட்டுவிடு' என்று கூறினார். அவள் 'என்ன விஷே

சம் அப்பா'' என்று எவ்வளவோ கேட்டும் அவர் சொல்லவில்லை. தகப்பன் வேண்டு கோளுக்கிணங்க காயத்திரி மறுநாள் அலு வலகம் செல்லவில்லை.

அன்று அதிகாலையிலே எழுந்து கண்ணம் மாள் மகளை எழுப்பி அவளை நீராடவைத்து அலங்கரித்தாள். 'காயத்திரி உன்னை இண் டைக்கு பொண்ணு பார்க்க வாறாங்க' என்று சொன்னாள். இதனைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த காயத்திரி தன் நிலையைச் சொல் லவும் முடியாமல் மறைக்கவும் முடியாமல் தவித்தாள். பின் மனதுக்குள் ஒரு திடமான முடிவுடன் சந்தோசப் படுபவள் போல் நடித் தாள்.

காலை 7 மணிக்கெல்லாம் வீட்டின்முன் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஓர் வயோதிபரும் அவரின் மனைவியும் இளைஞன் ஒருவனும் இன்னும் சிலரும் இறங்கினர். அவர்கள் வந்து சிறிது நேரம் பேசிவிட்டு காயத்திரியைத் தங்களுக்கு மிகவும் பிடித்துள் ளதாகக் கூறினர். ஆனால் காயத்திரியோ தனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை என்றுகூறினாள். அதற்கு அவள் தகப்பனிடம் கூறிய காரணம் ''அப்பா நான் படித்த படிப்பென்ன? நான் பார்க்கும் உத்தியோகம் என்ன? அப்படிப்பட்ட எனக்கு கேவலம் வாத்தியார் தொழில் பார்ப்பவரா மாப் பிள்ளையா வருவது? இது உங்களுக்கு அசிங் கமில்லையா அப்பா'' என்று கூறினாள்.

மகள் இவ்வாறு நடப்பாள் என்று சற் றும் எதிர்பாராத குமரேசனும் கண்ணம் மாளும் மிகவும் மனம் வருந்தினர். அப் பொழுதுதான் புரிந்தது தன் மகளுக்கு அத் தனை சுதந்திரம் கொடுத்தது பெரும் தவறு என்று.அதன்பிறகு எத்தனையோ பேர் பெண் பார்க்க வந்தும் அத்தனை பேரையும் ஒவ் வொரு காரணம் காட்டி தட்டிக் கழித்துக் கொண்டே வந்தாள். அப்போதெல்லாம் அவள் மனதில் மாதவன் தான் என் மாப் பிள்ளை என்ற எண்ணம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தது.

காயத்திரி தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். என்னவானாலும் தன் தகப் பனிடம் தங்கள் காதல் விவகாரத்தைச் சொல்லி விடுவது என்று. அன்று அலுவலகம் சென்று வந்தவள் குமரேசன் மொட்டை மாடியில் தனியாக இருப்பதைக் கண்டாள்.

இது தான் சிறந்த சந்தர்ப்பம் என்று தகப் பனிடம் சென்று சிறிது பயத்துடன் தன் காதலைப் பற்றிச் சொன்னாள். அத்துடன் ''அப்பா நீங்க எனக்கு மாதவனைக் கல்யா ணம் முடிச்சு வைக்காட்டி எண்ட பிணம் தான் உங்களுக்குக் கிடைக்கும்'' என்றாள். மகளின் பேச்சைக் கேட்ட குமரேசனுக்கு ஆத் திரம் பொங்கிக் கொண்டு வந்தது. அவர் ''நீ அவன நல்லவன் என்று எப்படிச் சொல் லுவாய்? நம்மள விடப்பெரிய பணக்காரன். ஏன் அவன் உன்னை விரும்புகிறான்? நல்ல காசு ..பணம் உள்ள பெண்ணைத்தானே எந்த ஆண்பிள்ளையும் விரும்புவான்? இவன் உன்னை ஏமாத்த மாட்டான் என்று என்ன நிச்சயம்?'' என்று மகளைக் கேட்டார். அதற்கு அவள் ''என்ன என்றாலும் வாழப் போறவள் நான் தானே! அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியது நான்தான்'' என்று வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போன்று அவரின் மனதை நோகடித்தாள். இருந்தும் மனைவியின் வேண்டுகோளினாலும் மகளின் பிடிவாதத்தாலும் வேண்டா வெறுப்புடன் சம்மதித்தார்.

திருமணம் மாதவனுக்கும், காயத்திரிக் கும் சிறப்பாக நடைபெற்றது. திருமணத் தின் பின் இருவரும் பெற்றோரிடம் இருந்து தனிக் குடித்தனம் சென்றனர். அதன் பின் னர் தான் மாதவனின் சுயரூபம் காயத்தி ரிக்குத் தெரிந்தது. காலையில் அலுவலகம் சென்றால் அவன் இரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறகுதான் வீடு வந்து சேருவான். வரும் போது தள்ளாடிக் கொண்டே வரு வான். ஏதும் காயத்திரி கேட்டால் அவளைக் கண்டபடி அடிப்பான். தேவை அற்ற விசயத் துக்கு எல்லாம் அவளைத் திட்டுவான்.

ஒரு நாள் அலுவலகம் சென்று விட்டான். மதியம் பதினொரு மணி இருக்கும் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. காயத்திரி சென்று கதவைத் திறந்து பார்த்தாள். பெண் ஒருத்தி கைக் குழந்தையுடன் நின்று கொண் டிருந்தாள். அவளை உள்ளே அழைத்து 'நீங்க யாரம்மா? என்ன விஷயம்? யாரைப் பார்க்க வேணும்?' என்று காயத்திரி கேட் டதற்கு அவள் 'நான் மாதவனின் மனைவி. இது அவரின் குழந்தை. அவர் சிறிது நாள் வீட்டுக்கு வரவே இல்லை. அவர் இங்கிருப் பதைக் கேள்விப்பட்டு இங்கு வந்த போது தான் அவர் அடுத்த திருமணம் முடித்தி

ருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு அவரிடம் நியாயம் கேட்க வந்திருக்கன்' என்று அழுதாள்.

இதைக் கேட்டவுடன் காயத்திரியின் கண்ணிலிருந்து கண்ணீர் மழையாகப் பொழிந்தது. அப்போது தான் அவள் சிந்தித்தாள். தன் பிடிவாதத்தால் பெற்றோரின் வார்த்தையை மதிக்காது வரட்டுக் கௌரவத்தாலும் பிடிவாதத்தாலும் அவர்கள் பார்த்த மாப்பிள்ளைகளை யெல்லாம் அலட்சியம் செய்து தான் விரும்பியவனைத் திருமணம் செய்ததால் ஏற்பட்ட விளைவு எவ்வளவு மோசமானது என்பதை. ஆயினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அப்பெண்ணை மாதவனுடன் மீண்டும் சேர்த்து வைத்தாள்.

படித்து பட்டம் பெற்று பதவி பார்த்தும் என்ன பயன்? கண்ணை இமை காப்பது போல் தன்னைக் காத்த தந்தையையும், கன்றைப் பாராட்டும் பசுவின் பாசத்தை விட அதிக பாசத்துடன் தன்னைப் பாராட்டி சீராட்டி அழகு பார்த்து ஆசையுடன் வளர்த்த அன்னையையும் புறக்கணித்த தன் பேதமையையும் எண்ணி அவள் மனம் வருந்தினாள். அம்மா, அப்பாவின் சொல்லைக் கேட்டிருந்தால் தனக்கு இக்கதி நேர்ந்திருக்காது என்பதை இப்போது அவள் உணர்ந்து கொண்டாள். சந்தர்ப்பங்கள் தூறிப் போன பின்பு தான் மனிதர்களுக்கு ஞானம் பிறக்கின்றது இந்த ஞானத்தையே அனுபவம் என்கின்றோம்.

பெண் ஒன்றில் கன்னியாக இருக்க வேண்டும். அல்லது சுமங்கலியாக இருக்க வேண்டும். அதுவே தமிழ் பெண்ணுக்கு உரிய நியதி. காயத்திரி இப்போது கன்னியுமல்ல கணவனுடன் வாழும் சுமங்கலியுமல்ல. ஆனாலும் அவள் ஓர் 'மகள்' அவள் பெற்றோருக்கு என்றுமே செல்ல மகள். அவளுக்கு அது போதும்.

இதோ நெஞ்சின் பாரத்துடனும் கண்களில் ஈரத்துடனும் கையில் பெட்டியுடனும் காயத்திரி போய்க் கொண்டு இருக்கிறாள். எங்கே? தன் தகப்பனிடம், அவர் அவளுக்கு இப்போது மலையைவிட உயர்ந்தவர். உலகில் அவளை யார் வெறுத்தாலும் அவளுடைய தாய் அவளை வெறுக்கப் போவதில்லை. எல்லா உறவுகளுமே போலியானவை ஆனால் தாய்மை என்றுமே சத்தியமானது.

பெற்றோரின் நிழலே இனி அவளுக்கு சாஸ்வதமானது. அந்நிழலில் அவள் தன் கடந்தகால வெம்மையை விரைவில் மறந்துவிடுவாள்.

முற்றும்

## பதில் என்ன சொல்லு

''பாப்பா, பாப்பா பள்ளிக்குப் போறியா?'' என்று கேட்ட போது அவர்கள் தந்த பதில்கள் இதோ:

1) ஆகாபோறேனே!
2) உம்! நான் மாட்டேன்!
3) பள்ளியா என்ன மிரட்டுறே?
4) வாட்? பள்ளீ?
5) மாட்டேன்! அம்மாவை விட்டிட்டுப் போக மாட்டேன்!
6) பள்ளீயா? பயமாயிருக்கே!
7) ஓ! போவேன்! அதெப்படி என்று பார்க்க வேணும்!
8) பள்ளியா? அது நல்லாயிருக்காது!
9) அம்மாவும் வந்தா எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும்!

திருநாவுக்கரசு கிருஸ்ணப்பிரியா
ஆண்டு - 3

சிறுகதை

# தந்திரக் கள்வன்

S. கமலேஸ்வரி
ஆண்டு 10 V

ஓர் ஊரிலே ஏழைக் கமக்காரன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் முயற்சியுடையவன். அவன் தன் தோட்டத்திலே பல தென்னை மரங்களை நாட்டியிருந்தான். அவை நன்கு செழித்து வளர்ந்திருந்தன. அம்மரங்களில் காய்கள் குலை குலையாகத் தொங்கின அங்கே இளநீர் அதிகமாக இருப்பதைக் கள்வன் ஒருவன் கண்டான். கண்டதும் உடன் இளநீர் திருடாமல் மறுநாள் நண்பகல் வேளையிலே யாருமில்லாத நேரத்தில் அந்தத் தென்னந் தோப்புக்குள் நுழைந்து ஒரு தென்னையில் ஏறி சத்தம் செய்யாமல் சில இளநீர்களைப் பிடுங்கிக் கொண்டு போய்விட வேண்டும் என அவன் நினைத்தான். ஆனால் அவன் மரத்தில் ஏறும் போதே சிறிய சத்தம் கேட்டது. கமக்காரன் தன் சொத்துக்களில் விழிப்புடனும் கண்ணும் கருத்துமாக இருந்ததால் சிறிய சத்தம் எங்கிருந்து கேட்கிறது என அவதானித்து அச்சத்தம் கேட்டு சிறிது வினாடிக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்த கையை உடன் கழுவி விட்டு வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தான். மனிதன் ஒருவன் தென்னை மரத்தில் இருப்பதைக் கண்டான்.

''யாரடா அது''? என்று சத்தமிட்டான் கமக்காரன், அந்த சத்தம் கேட்டுக் கள்வன் விரைவாக கீழே இறங்கினான். கமக்காரன் அவனைப்பார்த்து ''நீ ஏண்டா மரத்திலே ஏறினாய்'' என்று கோபத்துடன் கேட்டான். அதற்கு கள்வன் ''அண்ணா கோபிக்காதே நான் கன்றுக் குட்டிக்கு புல் பிடுங்க ஏறினேன்'' என்று அக் கள்வன் சொன்னான்.

இது கேட்ட கமக்காரன் ''ஆ! அப்படியா இது என்ன புதுமை தென்னமரத்திலே புல் முளைக்குமா? என வினவினான். அதற்குக் கள்வன் ''தென்னையில் புல் முளைக்காத படியாலேதான் நான் இறங்குகிறேன். புல் முளைத்திருக்குமானால் புல்லைப் பிடுங்கிக் கொண்டல்லவா இறங்கியிருப்பேன். இது தெரியவில்லையா உனக்கு?'' என்று பரிகாசம் பண்ணிக் கொண்டே அக்கள்வன் அவ்விடத்தை விட்டு விரைவாக ஓடிச் சென்றான்.

## உண்மையை உணர்ந்திடு

ஏழை ஏழை என்று ஏளனம் செய்யாதே
நீயும் ஏழையாவாய் மறவாதே!
பணம் பணம் என்று பதறாதே
அது பறந்து விடும் மறவாதே!
ஓரளவின்றி பணத்திற் பற்றுக் கொள்ளாதே
மறுகணம் மரணம் வந்தால் மாய்ந்து மறைந்திடுமே!
இந்த உண்மையை உணர்ந்திடுவாயே
பாசமாய் ஏழைக்கு உதவிடுவாயே!

செல்லத்தம்பி வாணிஸ்ரீ
ஆண்டு - 11 ஆர்

# சமுதாய ஆக்கத்தில் ஆசிரியர்

செல்வி. அனட் சிமியோன்
ஆசிரியை

மனித உயிர்களுடன் மிக நெருங்கிய தொடர்பினையுடைய தொழில்கள் வைத்தியத் தொழிலும் ஆசிரியத் தொழிலுமாகும். வைத்தியத் தொழில் உட உள நோய்களை தீர்க்கின்ற தொழிலாக அமைய ஆசிரியத் தொழில் அறியாமையை நீக்கி மனிதனை சகல வழிகளிலும் துறைகளிலும் பூரணமான மனிதனாக ஆக்குகின்ற தொழிலாக அமைகின்றது. இதனாலேதான் பண்டைக் காலங்களில் கிராமங்களில் ஆசிரியனே, தலைவனாக, குருவாக, வைத்தியனாக மதிக்கப்பட்டு வந்திருக்கின்றான்.

ஆசிரியர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் ஒரு கலைஞன். அவனின் கரங்களில் தான் ஓர் நல்ல சமுதாயம் உருவாவதோ அல்லது ஒரு தீய சீரற்ற சமுதாயம் உருவாவதோ தங்கி இருக்கிறது- அறிவாற்றலும் செயலாற்றலும் மிக்கவர்கள் உருவாக்கப்படுவதற்கும் ஆசிரியர்களே காரணமாகின்றனர். தீய கெட்டழிந்த தீவிரவாத போக்குடையவர்கள் உருவாக்கப்படுவதற்கும் ஓரளவுக்கு ஆசிரியர்களும் காரணமாகின்றனர் என்றால் மிகையாகாது.

உலகின் எவ்வுயர்ந்த துறையும் கற்பித்தல் கற்றல் முறைகளால் வளர்ச்சியடைந்தவையாகும். வைத்தியத் துறையையோ அல்லது வியாபாரத்துறையையோ பொறியியல் துறையையோ எதை நோக்கினாலும் அவை முறையான கல்விக் கூடங்களினாலும், ஆசிரியர்களினாலும் உருவாக்கப்பட்டவையேயாகும்.

ஆசிரியத் தொழில் என்பது மற்றைய தொழில்களைப் போல பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்ட தொழிலன்று. அது சேவையை நோக்காக கொண்ட தொழிலாக அமைகிறது. அது நீண்டகாலப் பயனைக் கொணரும் தொழிலாகும்.

நல்லாசிரியர் எனப் போற்றப்படுபவரிடம் உயர்குடிப்பிறப்பு, சீவகாருண்ணியம், கடவுள் வழிபாட்டு மேன்மை, பரந்த அறிவு, பேச்சு வன்மை, நிலம், மலை, நிறைகோல் மலர் ஆகியவற்றை ஒத்த குணங்கள் உடையவராகவும் உலக நடையையறியும் அறிவும், உயர் குணமும் பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது நன்னூலார் கூற்று.

இவ்வாறான நற்பண்புகளை உடையவர்களாக ஆசிரியர்கள் இருந்தால்தான் மாணவ சமுதாயத்தை நல்வழியில்வழி நடத்திச் செல்லவும் மாணவர்களிடையே உயர்ந்த இலட்சியங்களை உருவாக்கி அவர்களை வருங்காலத்தில் சமுதாயத்தின் சிறந்த சிற்பிகளாக்க முடியும்.

ஆசிரியரெனப்படுபவர் போதனாசிரியராக பிள்ளைகளின் சிந்தனையை தூண்டுபவராக, திறன்களை, திறமைகளை மதிப்பிடுபவராக, பாதுகாப்பாளராக, வழிகாட்டியாக நண்பனாக முன் மாதிரியான நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். இவ்வாறான தன்மையுடையவராக ஆசிரியர் ஆளுமையுடன் செயலாற்றும்போது வளமான நற்பிரஜைகளாக மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

ஒரு பிள்ளையின் வளர்ச்சிக் காலத்தில் அதாவது ஐந்து வயதில் இருந்து பெரும்பாலான பகுதி மாணவப்பருவமாக ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் அமைந்து விடுகிறது அவர்களின் அறிவு ஆற்றல் வளர்ச்சியடைகின்ற பருவம் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் அமைகின்றது.

இப்பருவத்தில் அவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலையும் அவர்களின் நடத்தை கோலத்தையும் பின்பற்றி வாழ முற்படுவர். எனவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எல்லா விதத்திலும் முன் மாதிரியாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு செயற்படும் போது தான் அவர்களால் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு வழி சமைக்க முடியும்.

இவ்வாறெல்லாம் ஆசிரியர் மது அருந்துபவராக, புகைக்கும் பழக்கமுடையவராக,

அாட்டை அடிப்பவராக இவை போன்ற தவறான வழிகாட்டல் செயற்பாடுகளையு டையவராக இருப்பாராயின் மாணவர்களும் அவரது செயற்பாட்டை பின்பற்ற முற்படு வர். இவ்வாறான ஆசிரியர்களால் சீரற்ற கெட்டழிகின்ற சமுதாயத்தையே உருவாக்க முடியும்.

ஆசிரியர் பாடங்களை கற்பிப்பவராக மட்டுமன்றி பாடத்தை கற்பவராகவும் கற்பிக்கும் முறைகளை திட்டமிட்டுச் செயலாற்றுபவராகவும், மாணவர்களைப்பற்றி முழுமையாக அறிந்து அவர்களின் சிந்தனையைத் தூண்டுபவராகவும்செயற்பட வேண்டும். மாணவர்களின் தேவைகளையும், கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் பொருட்டு முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவராகவும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு சிறப்பாக ஓர் ஆசிரியர் செயற்படும் போதுதான் ஒரு நல்ல சமுதாயம் உருவாகின்றது. இதனால்தான் ஆசிரியர் சமுகத்தில் உயர்ந்தவராக கருதப்படுகின்றார். மதிக்கப்படுகின்றார்.

எதிர்கால சந்ததியினரைச் சான்றோனாக்கி நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பை ஏற்ற ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நல்லாசிரியர் பண்புகளைப் பெற்று நல்லாசிரியராக விளங்குவோம்.

# கலைகள் அறுபத்துநான்கும்

| | | |
|---|---|---|
| 1) அக்கர இலக்கணம் | 22) சுத்த பிரமம் | 43) காந்தர்வ வாதம் |
| 2) இலகிதம் | 23) வீணை | 44) பைபீல வாதம் |
| 3) கணிதம் | 24) வேணு | 45) கௌதுக வாதம் |
| 4) வேதம் | 25) மிருதங்கம் | 46) தாது வாதம் |
| 5) புராணம் | 26) தாளம் | 47) காருடம் |
| 6) வியாகரணம் | 27) அத்திர பரிட்சை | 48) நட்டம் |
| 7) நீதி சாஸ்திரம் | 28) கனக பரிட்சை | 49) முட்டி |
| 8) சோதிட சாஸ்திரம் | 29) இரதப் பரிட்சை | 50) ஆகாயப் பிரவேசம் |
| 9) தரும சாஸ்திரம் | 30) கஜ பரிட்சை | 51) ஆகாய கமனம் |
| 10) யோக சாஸ்திரம் | 31) அசுவ பரிட்சை | 52) பரகாயப் பிரவேசம் |
| 11) மந்திர சாஸ்திரம் | 32) இரத்தின பரிட்சை | 53) அதிர்ச்யம் |
| 12) சகுன சாஸ்திரம் | 33) பூ பரிட்சை | 54) இந்திர ஜாலம் |
| 13) சிற்ப சாஸ்திரம் | 34) சங்கிராம இலக்கணம் | 55) மகேந்திர ஜாலம் |
| 14) வைத்திய சாஸ்திரம் | 35) மல்ல யுத்தம் | 56) அக்னித் தம்பம் |
| 15) உருவ சாஸ்திரம் | 36) அக்ருசணம் | 57) ஜல ஸ்தம்பம் |
| 16) இதிகாசம் | 37) உச்சாடனம் | 58) வாயுத் தம்பம் |
| 17) காவியம் | 38) வித்து வேசணம் | 59) சுக்கிலத் தம்பம் |
| 18) அலங்காரம் | 39) மதன சாஸ்திரம் | 60) கன்னத் தம்பம் |
| 19) மதுரபாடனம் | 40) மோகனம் | 61) கட்கத் தம்பம் |
| 20) நாடகம் | 41) வசீகரணம் | 62) அவத்தைப் பிரயோகம் |
| 21) நிருத்தம் | 42) இரச வாதம் | 63) திட்டித் தம்பம் |
| | | 64) வாக்குத் தம்பம் |

த. சுபிரஜினி
ஆண்டு 10 - சீ

# போலிப் பூக்கள்

செல்வநாயகம் செல்வந்தி
ஆண்டு 12 கலைப் பிரிவு

நடு வருடப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. எல்லாப் பாடங்களும் நடைபெற்று முடிந்து விட்டன. இன்னும் ஒரேயொரு பாடம் கைப்பணிதான் எஞ்சியிருக்கிறது. அதுவும் நாளை தீர்ந்து விடும். அப்புறம் என்ன விடுமுறை தானே! எல்லாப் பாடங்களையும் சுறுசுறுப்பாகச் செய்து முடித்த நிஷாந்திக்கு கைப்பணியை நினைக்கும் போது மனதில் சோர்வு தட்டியது. அது அவளுக்கு பிடிக்காத பாடம். அவளுக்கென்ன? யாருக்குத் தான் பிடிக்கும்? ஏன் ரீச்சருக்குக்கூட அப்படித் தான். அதனால்தான் ரீச்சரும் எப்பொழுதுமே எதுவுமே செய்து காட்டுறதில்லை!

கிழமைக்கு ஒரு நாள் கைப்பணிப்பாடம். ரீச்சர் வராமலிருப்பது... வந்தாலும் வேறு பாடங்களைச் செய்வது. இப்படியிப்படியே வாரங்கள் உருண்டோடும். ஆனால் பரீட்சை வந்தாலோ, அதற்கென்றும் ஒரு நேரம்...... புள்ளியிடல் எல்லாம் நடக்கும்! இருந்தாலும் என்ன, பாடசாலைக்கு வந்து தான் செய்து காட்ட வேண்டுமென்பதில்லையே! மற்றப் பாடங்கள் போல்! தாராளமாக வீட்டிலேயே செய்து கொண்டு வரலாம்.

'இங்கே பிள்ளைகள்... தெரியும்தானே நாளைக்குக் கைப்பணி இருக்கு. மறக்காம எல்லாரும் செய்திட்டு வாங்க......'

எல்லோரையும் அழைத்து ரீச்சர் சொல்லிவிட்டு அவர்களை வீட்டுக்கனுப்பி வைத்தார். வீட்டுக்குச் சென்றால் இனிக் கேட்கவா வேண்டும்? வெண் கொக்குகள் சிறகடிப்பது போல் தான்! நிஷாந்தினிக்கு மாத்திரம் வேறு எந்த நினைப்புமே ஓடவில்லை. நாளைக்கு எப்படி பூ சரிபண்ணுவது என்ற யோசனை தான்...

ஆதரவோடு செய்து கொடுக்க அவளுக்குத்தான் அக்காமார்களென்று யாருமில்லையே! அம்மாவுக்கு ஆயிரம் வேலைகள்... கேட்டால் எரிந்து விழுவா...... இதுதான் நடக்கும் என்பது அவளுக்கு முன் அனுபவமாயிற்றே!

வீட்டில் ரிசு கடதாசி கூட இல்லை. குறைந்தது மூன்று நிறங்களிலாவது வேண்டுமே! அம்மாவிடம் ரிசு வாங்கக் காசாவது பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுமில்லை நிஷாந்தினிக்கு! அவளிடமிருந்த எழுபத்தைந்து சதமும் ஒரு வடை சாப்பிட்டதோடு சரி. அவளது அப்பா கூட எந்த நேரம் வருவார் என்று நிச்சயம் இல்லையே!

நிஷாந்தினி பாடசாலையில் இருந்து வீட்டையடையும் போது பன்னிரெண்டு மணியை நெருங்கியிருந்தது. அவளது அம்மா சமையலில் மூழ்கியிருந்தாள். எப்பொழுதுமே அவள் பாடசாலை கலைந்து வீட்டையடைந்தால், முதலில் 'பசிக்கிறது' என்ற வார்த்தை தான் அவளது வாயிலிருந்து வெளிப்படும். ஆனால் இன்று அவளுக்குப் பசிக்கவில்லை.

'அம்மா நாளைக்கு கைப்பணிச் சோதினை இருக்கு... பூ செய்திட்டு போகணும்மா...' கெஞ்சல் பாவனையோடு சொன்னாள் நிஷாந்தினி.

'நானிங்க நெருப்பில சாகிறன் உனக்கு பூ வேற செய்யணுமா?' அம்மா எரிந்து விழுந்த பின்பு நிஷாந்தினி அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. அம்மாவின் சுபாவமே அப்படித்தானே... .. அப்பாவோடு போடும் சண்டைகள் போதாதா அவள் பயப்பட!

இரவைப் பறைசாற்றிக் கொண்டு லாம்புக் குப்பி எரியத் தொடங்குகிறது. ஈர்க்குகள்... கசங்கிய ரிசுத் துண்டுகள்... பானையிலிருந்து சுரண்டியெடுத்த சோற்றுப் பருக்கைகள் எல்லாம் அவளுக்குக் கைகொடுத்தன. லாம்பு உமிழ்ந்த வெளிச்சத்தில் பூத்தயாரிப்புத் தொடர்ந்தது.

மிகுந்த பிரயத்தனப்பட்டு மூன்று பூக்களைச் செய்து கொண்டாள். அவை போசாக்கு இல்லாத குழந்தைகளைப் போல் துருத்திக் கொண்டிருந்தன. இந்த விவகாரங்களெதுவும் அவள் கண்ணுக்குப் படவில்லை. தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா? மனதிற்குள் தெரிதும் சாந்தி நிலவியது, நிஷாந்தினிக்கு.

அடுத்த நாள் மிகுந்த களிப்போடு தான் மலர்ந்தது. அவளும் பாடசாலைக்கு சுறுசுறுப்பாகத்தான்சென்றாள். ஏனெனில் அவளுக்குத் தானும் கைப்பணிப் பாடத்திற்குத் தயாராகிப் போகும் பெருமிதம்.

ஒரே பூக்கள் மயமாக வகுப்பு காட்சியளித்தது. ஒருவருடையதை மற்றவர்கள் மாறி மாறிப் பார்த்து புகழ்ந்து கொண்டார்கள். எத்தனை வண்ணம்... எத்தனை வகைகள்! ரீச்சர் இன்னும் வகுப்புக்கு வந்து சேரவில்லை.

'பாருங்கடி நிஷர்ந்தினியின்ர பூவை...' ஒரு முறை எல்லோரும் ஒரேயடியாக இவள் பக்கம் திரும்பிக் கொல்லென்று சிரித்தார்கள். அதனால் ஒன்றும் நிஷாந்தினி வெட்கமடைந்து விடவில்லை. அவளுக்குக் கணக்குப் பாடத்திலும் தமிழ்ப் பாடத்திலும் எத்தனை மாக்ஸ் கிடைத்திருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்வதிலேயே நோக்கம் சுழன்றது. இரண்டு ஆசிரியர்களும் எல்லா மாணவர்களையும் கூப்பிட்டு புள்ளிகளைச் சொல்லி விட்டார்கள். இனியென்ன நான் முதலா நீ முதலா என்று பார்க்கும் ஆர்வம் தலைகாட்டியது. தாங்கள் பெற்ற மதிப்பெண்களை எல்லாம் நிரல் படுத்திக் கூட்டினார்கள். எல்லோரிலும் பார்க்க நிஷாந்தினியே கூடிய புள்ளிகள் பெற்றிருந்தாள். தற்போதைக்கு அவள் தான் முதலாவது பிள்ளையாக வந்திருந்தாள். சும்மா அல்ல எண்பத்தைந்து மேலதிக புள்ளிகளால் முன்னணியில் நின்றாள். இனியென்ன......

நிஷாந்தினியின் குடும்பம் வறிய ஏழைக் குடும்பம். அவளுடைய தந்தை ஏதோ விறகு வெட்டி விற்றுத்தான் அந்த நான்கு ஜீவன்களது வயிற்றைக் கழுவுவது தனது தந்தை படித்திருந்தால் இவ்வாறெல்லாம் கசங்கிய ரிசுக் கடதாசியிலே அவள் பூச்செய்து கஷ்டப் படத் தேவையில்லையே. சதீஸினி, மாலினி போன்ற மற்ற மாணவிகளைப் போல் தானும் அழகாகப் பூச்செய்து வந்திருக்கலாம். மற்றவர்கள் தன் பூவைப் பார்த்துக் கேலி செய்து சிரித்திருக்க மாட்டார்கள். என்றாலும் நிஷாந்தினி வகுப்பிலே நன்றாகவே படித்தாள். ஒவ்வொரு பாடத்திலும் அதிக புள்ளிகள் எடுத்து முதலாம் பிள்ளையாகவே வந்தாள். இம்முறையும் அவள் முதலாம் பிள்ளையாகவே வருவாள். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவ்வாறு தன் குடும்ப நிலையையும் தன்னிலையையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டு அமைதியாக இருந்தாள் நிஷாந்தினி.

ஆ... ரீச்சர் வந்திட்டா... ரீச்சா வந்திட்டா...... உண்மைதான். கைப்பணிக்காக ரீச்சரின் வரவு வகுப்பில் மீண்டும் கலகலப்பை ஏற்படுத்தி விட்டது. ரீச்சர் ஒவ்வொருவராக அழைத்து அவர்களது கைப்பணிப் பூக்களைப் பார்த்து புள்ளி போட்டுக் கொண்டிருந்தார். மாலினிக்கு எழுபது . வாணிக்கு எழுபத்தைந்து...... சதீஸினிக்கு எண்பது... இப்படியிப்படி.

நிஷாந்தினியை அழைத்த ரீச்சர் அவளது பூக்களைப் பார்த்ததும்ஒரு சிரிப்புச்சிரித்தார். அது வேண்டுமென்றே சிரித்ததல்ல... இயல்பாகவே வந்த சிரிப்புத் தான் அது!

நிஷாந்தினிக்கு ஆக பதினைந்தே புள்ளிகள்தான். அவ்வளவாவது அவளுக்கு கிடைத்தது போதுமல்லவா?

எல்லாப் பாடங்களிலும் புள்ளிகள் கிடைத்து விட்டன, நிஷாந்தினி படபடவென்று அவற்றைக் கூட்டிப்பார்ப்பதில் ஈடுபடலானாள்.

(யாவும் கற்பனை)

# ஒரு சமுதாய விளக்கு அணைகிறது

பா. கணேசமூர்த்தி
ஆசிரியர்
இந்துக்கல்லூரி

ஆனந்தனுக்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. நாளை தை முதலாம் திகதி! அவன் முதன்முதலாகப் பாடசாலைக்குப் போகும் நாள்! புதுச் சப்பாத்து, மேஸ், புத்தகப் பை, தண்ணீர்ப் போத்தல் எல்லாம் அப்பாவிடம் சண்டைபிடித்து வாங்கினான்.

அன்றிரவு அம்மாவிடம் தன் எதிர்காலம் பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தான்.

'அம்மா நான் படிச்சி டாக்குத்தராக வருவன். அப்பாவுக்கு ஊசி போட்டு அவர் குடிக்கிறத நிற்பாட்டுவன். அம்மாவுக்கு நிறைய புது உடுப்பு வாங்கித் தருவன் '

மகனின் பிஞ்சு மொழியில், அவன் பேச்சில் தொனித்த இலட்சிய உறுதியில் மெய் மறந்துபோன ஈஸ்வரி அவனை அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

'கண்ணா! நேரம் நல்லாப் போயிட்டு. காலமே தம்பி பள்ளிக்குப் போகணும் இல்லையா? பேசாமத் தூங்கு!'

ஈஸ்வரியின் கணவன் செல்வராசா முடாக் குடியன். குடும்பப் பொறுப்பு இல்லாதவன். கையெழுத்துப் போடும் அளவில் படிப்பறிவு உண்டு. மகன் மேல் நல்ல பாசம் வைத்திருந்தான். நிறை வெறியில் அவனை மடியில் வைத்துக் கொண்டு ''மனே ஆனந்தா! நீ நல்லாப்படிக்கனும். உனக்கு என்னவுமெண்டா எனக்கு மூளைப் பைத்தியம் பிடித்திரும்டா மனே!'' என்று புலம்புவான்.

செல்வராசாவின் தங்கைக்கு துடிப்பான அறிவுள்ள பிள்ளைகள் இருவர் இருக்கின்றனர். இருவரையும் ஈஸ்வரிக்குப் பிடிக்காது. அதாவது அப்பிள்ளைகளின் தாயை அவளுடைய மச்சாளை - அவளுக்குப் பிடிக்காது. தாயின் மேல் கொண்ட குரோதம் பிள்ளைகள் மீதும் படர்ந்தது. தனது மச்சாளின் பிள்ளைகளைவிடத் தன் மகன் ஆனந்தன் படிப்பில் சிறந்து விளங்க வேண்டுமென ஈஸ்வரி தன் மனதில் சங்கல்பம் செய்து கொண்டாள். தன் மகன் பிற்காலத்தில் சிறப்புடன் வாழ வேண்டுமென்பது அல்ல. தன் மச்சாளின் மக்களைவிட அவன் மேல் ஓங்கி நிற்க வேண்டுமென்பதே அவள் பேரவா.

ஆனந்தன் பெரிய கெட்டிக்காரன் அல்ல. மக்கு என்றும் கூறிவிட முடியாது. அவன் ஒரு சராசரி மாணவனாகத் திகழ்ந்தான். ஈஸ்வரி பெரிய படிப்பாளி அல்ல. எட்டாம் வகுப்பிற்கு மேல் அவளுக்குப் படிப்பு எட்டவில்லை. மகனை ரியூசனுக்கு அனுப்ப வேண்டுமென்று திட்டமிட்டாள். கணவன் பணம் கொடுக்க மாட்டான் என்று தயங்கினாள். ஒரு நாள் அவள் வயிற்றெரிச்சலைக் கிளப்பும் ஒரு சம்பவம் நடந்தது.

அன்று ஆனந்தன் ஊர்க் கடையில் சில சாமான்கள் வாங்கி வந்தான். கடைக்காரன் மிகுதிப் பணத்தைச் சரியாகக் கொடுக்கவில்லை. ஈஸ்வரி கணக்குக் கேட்ட போது ஆனந்தனால் உடனடியாக விடை சொல்ல முடியவில்லை. பக்கத்தில் நின்ற ஆனந்தனின் வயதொத்த ரகுவரன் (ஈஸ்வரியின் மச்சாள் பிள்ளை) சரியான விடையைப் பட்டென்று சொன்னான் ஈஸ்வரியின் மனம் எரிமலையானது. கெட்ட வார்த்தைகளால் மகனைத் திட்டியவாறு அவன் முதுகில் பளார் பளாரென்று ஓங்கியறைந்தாள். 'உன் மகன் மக்கு உன் மகன் மக்கு' என்று அவள் மனம் பேய்க் கூச்சலிட்டது.

ஆனந்தன் தேம்பித் தேம்பி அழுதவாறு ஒரு மூலையில் போய்ச் சுருண்டு படுத்தான். பார்ப்பவர்களுக்கு அவன் சும்மா படுப்பது போல் தெரிந்தாலும் அவன் மனதில் பல கேள்விகள் எழுந்து பாம்பு போல் படமெடுத்தன.

அம்மா எனக்கு ஏன் அடித்தார்?
நான் என்ன தப்புப் பண்ணினேன்?

எனக்கு அடி விழுந்ததும் ரகு ஏன் அவ்வளவு வேகமாக ஓடினான்? எனக்கு அடிக்க வேண்டாமென்று ஏன் அவன் அம்மாவிடம் சொல்லவில்லை?

அவன்ட முகம் ஒரு மாதிரி பாவமாக இருந்திச்சே ஏன்? அவன்ட முகம் அப்பிடி இருந்தத நான் ஒரு நாளும் காணலியே!

சனியன், மாடு, மக்கு எண்டு அம்மா எனக்குத் திட்டினாரே! படிக்காத பிள்ளைகளுக்குத்தானே அப்படித் திட்டுவாங்க? நான் ஒழுங்காகப் பள்ளிக்குப் போய் படிக்கிறநான் தானே? அம்மா சும்மா சொல்லுவாரா? நான் மக்குத்தானோ?

மிச்சக் காசி எவ்வளவு எண்டு ரகு சரியாகச் சொன்னானே! ஏன் என்னால சொல்ல முடியல? எனக்குப் படிப்பு வராதோ? - இக்கேள்விக்கு விடைகாண ஆனந்தனால் முடியவில்லை.

விளைவு? ஆனந்தனின் தன்னம்பிக்கை என்ற அத்திவாரத்தில் ஒரு கல் கழன்றது. அதே நேரம் தாழ்வு மனப்பான்மை என்ற அத்திவாரதிற்குப் புதிதாக ஒரு கல் நடப்பட்டது. காலம் செல்லச் செல்ல ஒரு அத்திவாரம் மேலும் மேலும் இடிந்து தகர, புதிய அத்திவாரம் பலப்பட்டுக் கொண்டேபோனது. ஆனந்தனின் உளவியலில் ஏற்பட்ட இப்பாரிய தாக்கத்தினை உணர்ந்து கொள்ளும் வல்லமை அவன் பெற்றோருக்கு இல்லை. அப்பிள்ளையைக் கூர்ந்து அவதானிப்பதற்கான அவகாசம் ஆசிரியர்களுக்கும் இல்லை.

மக்கு என்பதைச் சாட்டாக வைத்து ஈஸ்வரி ஆனந்தனை ரியூசன் வகுப்புகளில் சேர்த்துவிட்டாள். அவன் இப்போது ஒரு கைதி. வெளியில் செல்லவோ நண்பர்களுடன் விளையாடவோ அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அடுத்த வெட்டை வளவில் ரகு, காந்தன், வசந்தன், திலீப், நவநீதன் ஆகியோர் கிட்டிப்புள், கிளித்தட்டு, பிள்ளையார் கட்டை முதலிய விளையாட்டுகள் விளையாடுவதைக் துக்கம் நிறைந்த மனதுடன் ஏக்கம் நிறைந்த கண்களால் பார்த்துக் கொண்டிருப்பான். அம்மாவையோ அப்பாவையோ கண்டு விட்டால் கண்கள் புத்தகத்தில் மேய, மனமோ அவர்கள் இடும் கூச்சலில் இலயித்துப் போகும். தன்னை விளையாட விடாமல் தடுக்கும் புத்தகங்களின் மேலும் கல்வியின் மேலும் அவனுக்குத் தீராத வெறுப்பு ஏற்பட்டது. சராசரி மாணவன் கடைநிலைமாணவனானான்.

ஈஸ்வரி பதறினாள். அவள் மச்சாள் பிள்ளைகள் பல போட்டிகளில் பங்கு பற்றி பரிசுகளை எடுத்துக் குவிக்க அவளுடைய பிள்ளையோ படிப்பிலும் நடையிலும் மந்தையாக இருப்பது கண்டு மனம் புழுங்கினாள். இரணியனுக்கு வாய்த்த பிரகலாதன் போல் தனக்கு வாய்த்த மகனைக் காணும் போதெல்லாம் அவள் தன்னுடையவெறுப்பை வார்த்தைகளில் உமிழத் தவறவில்லை. மகனின் அசமந்த நிலை செல்வராசாவுக்கு எரிச்சலை ஊட்டியது. 'உன்னை நான் பட்டினியா போடுகின்றேன்? வெறுப்பு நோய் பிடித்தவன்போல் ஏன் இப்படியிருக்கிறாய்?' என்று மகனைத் திட்டினான்.

'பள்ளிக்குப் போறாய் ... ரியூசனுக்குப் போறாய்...ஒண்டுக்கும் உதவாது. செலவழிக்கிற காசி வீண். உன் மண்டையில் களி மண்ணா இருக்கிறது?' என்று தாய் சாடினாள்.

பலமான அத்திவாரத்தில் எழுந்த தாழ்வு மனப்பான்மை என்ற மாளிகைக்கு 'அடங்காமை' என்ற நபர் குடிபுகுந்தார். ஆனந்தனுக்கு இப்போ வயது பதினாலு. அவன் இப்போது பேருக்குத்தான் பாடசாலைக்குப் போய் வருகிறான். 'நான் இப்போ சிறுவன் அல்ல, பெரிய ஆள்! என்னை யாரும் இனி அவங்கட இஷ்டம்போல ஆட்டிவைக்க முடியாது. நான் என் இஷ்டப்படிதான் வாழ்வேன். அதை யாரும் தடுக்க முடியாது' என்ற முடிவுக்கு அவன் வந்தான். இயற்கை அவனைப்பற்றிக் கவலைப்படாமல் அதன் கடமையைச் சரிவரச் செய்தது. ஆனந்தனின் உடல் நிலையில் இயற்கை ஏற்படுத்திய மாற்றங்கள் அவனுக்குப் புதிய உத்வேகம் கொடுத்தன.

சிகரட் குடிக்கத் தொடங்கினான். சிகரட் குடிக்கும் மாணவர்களுடன் மட்டுமே சினேகிதம் வைத்துக் கொண்டான். ஒழுக்கமுள்ள மாணவர்களை அவன் கால் தூசிக்கும் மதிப்பதில்லை. மாணவிகளுடன் தைரியமாகவும் பகிரங்கமாகவும் சேட்டைகள்விடத் தொடங்கினான். விரைவிலே நிர்வாகம் அவனைப் பாடசாலையால் விலக்கியது. அவன்

அதற்காகக் கவலைப்படவில்லை. அவர்கள் விலக்காவிட்டாலும் அவன் விலகித்தான் இருப்பான்.

பள்ளியில் இருந்த காலத்தில் படிப்பை விட இன்னொரு விடயத்தில் தான் அவனுக்கு கூடிய கவனம் இருந்தது. அதுதான் தமிழ்ச் சினிமா! கிழமைக்கு குறைந்தது ஐந்து படமாவது பார்க்க வேண்டும். நடிகர், நடிகைகளின் பிறந்த திகதி, அவர்களுக்குப் பிடித்த உடைகள், உணவு, அவர்களின் பொழுது போக்கு முதலான விபரங்களை ஆர்வத்துடனும் அக்கறையுடனும் சேகரிப்பான். நடிகர் நடிகையருக்கு கடிதம் எழுதுவதே அவனுடைய 'புனிதமான' பணி. எவளாவது ஒரு நடிகையின் செயலாளர் 'தங்கள் கடிதத்திற்கு நன்றி!' என்று ஒரு வரி எழுதியனுப்பினால் போதும்; ஜென்ம விமோசனம் பெற்ற ஜீவன் முக்தனாகப் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து போவான். இப்போதெல்லாம் ஆனந்தனுக்கு சாதாரணமான சினிமாவின் மேல் ஆர்வம் குறைந்துவிட்டது. நண்பர்களுடன் சேர்ந்து இரகசியமாக 'விசேட' படங்கள் பார்க்கத் தொடங்கினான். இன்று குறுக்கு வழியில் பணம் சேர்ப்பதற்கு மிக இலகுவான வழி இளைஞர்களின் பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்வதுதான்!

ஒழுங்கான முறையில் நெறிப்படுத்தப் படாத இன்றைய இளம் தலைமுறையினர் இயற்கை, உடல் நிலையில் குறித்த ஒரு நோக்கத்திற்காக ஏற்படுத்தும் மாறுதலால் உந்தப்பட்டுத் தம் 'வெம்மை'யைத் தவித்துக் கொள்ளக் கானல் நீருக்காக அலையும் மான்களாகத் தாகத்துடன் அலைகின்றனர். அவர்களின் அறியாமையையும், தாகத்தையும், பலவீனத்தையும் சரியாகப் பயன்படுத்திப் பணம் சேர்ப்பதற்கென்று சில கும்பல்கள் இருக்கின்றன. அக்கும்பல்களில் முதலிடம் பெறுபவர்கள் இன்றைய தமிழ் சினிமாக்காரர்களும் அவர்களின் கையாட்களான வீடியோ நிலையத்தினருமாவர்.

ஆனந்தனின் பெயரைக் கேட்டாலே ஊரவர்கள் அஞ்சி ஒதுங்கும் அளவிற்கு அவன் "செல்வாக்கு" உயர்ந்தது. பெற்றோரை மறந்தான். நண்பர்களின் வீடுகளில் தங்கினான். பணப் பிரச்சினை தலைதூக்கியது.

நண்பன் ஒவருன் ஆலோசனை சொன்னான். ஏன் குடிக்கிறான்? மனிதனை ஒத்த ஏனைய பாலூட்டி விலங்குகள் குடிக்கின்றனவா? இல்லையே! குடி என்பது மனிதனின் மற்றொரு பலவீனம்! அப்பலவீனத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டனர், ஆனந்தனும் நண்பனும்.

ஈச்சம் பழம், சீனி, ஈஸ்ற் மற்றும் பண்டம் பாத்திரங்களுடன் இரகசிய இடமொன்றைத் தெரிவு செய்தனர். விற்பனையில் போட்டி அதிகம். எனவே "வெறி" கூட்டுவதற்காகக் கறள் கம்பி, சீமெந்து என்பனவும் கலவையில் சேர்க்கப்பட்டன. முன் அனுபவம் இல்லாதவர்கள் முயற்சியிலீடுபட்டனர். ஆலகால விஷத்தைவிட மிகக் கொடுமையான "கலக்கல்" ஒன்று உருவானது.

இரண்டு பேர் உடனேயே பிராணனை விட்டனர். பத்துப்பேர் இரத்த வாந்தி எடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். நண்பன் தலைமறைவாக ஆனந்தன் பிடிபட்டான். வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாத அளவு "உபசாரங்கள்" பொலிஸ் நிலையத்தில் அவனுக்குக் கிடைத்தன. நீதிபதி ஆறு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

மறியற்சாலையில் பட்ட அவலமும் பெற்ற அனுபவமும் பெரும் கதை! பாடசாலையில் படிக்கத் தவறியதை மறியற்சாலையில் படித்தான். தன்னைப் பற்றியும், தன் சமுதாயத்தைப் பற்றியும் சிந்தித்தான். பல உண்மைகள் அவனுக்கு விளங்கின. பால்ய வயதில் தாய் அடித்தபோது அவன் மனதில் படம் விரித்தாடிய வினாக்களுக்கெல்லாம் விடைகள் கிடைத்தன.

அவன் சிறையிலிருந்த காலத்தில் அவன் தாய் உட்பட எவருமே அவனை வந்து பார்க்கவில்லை. அதற்காக அவன் கவலைப்படவுமில்லை. காலப்போக்கில் சிறை வாழ்வு அவனுக்குப் பிடித்தமானதாகி விட்டது. சொற்ப உணவானாலும் நேரத்திற்குக் கிடைத்தது. நேரத்திற்கு வேலை. நேரத்திற்கு உறக்கம். நேரத்திற்கு உடற் பயிற்சி - இப்படி எல்லாமே நேரம் பிசகாமல் ஓர் ஒழுங்கு முறையில் நடைபெற்றன. மற்றக் கைதிகள் அவனைத் தொல்லைப்படுத்தியபோதெல்லாம் பொறுமையுடன் அவற்றைச் சகித்துக்கொண்டான். இறுதியில் அவனுடைய பொறுமையையும் பெருந்தன்மையையும் கண்டு சக கைதிகள் அவன் மேல் பிரியம்காட்டத் தொடங்கினர். சிறைச்சாலை அதிகாரிகளும் அவன் நடத்தையில் திருப்தியுற்று அவனுக்கு மட்டும் ஓரளவு

சுதந்திரம் வழங்கினர். கடுமையான வேலைகள் அவனுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது. அலுவலகப் பையன்போல் இலகுவான வேலைகளைச் செய்துகொண்டிருந்தான்.

மறியலுக்கு வருவதற்கு முன் பொலிஸார் அவனுக்குக் கொடுத்த அடிகளின் தாக்கம் இன்னும் உடலைவிட்டு அகலவில்லை. அவை என்றுமே மறையப் போவதில்லை. சிறு வயதில் அவன் பெற்றோர் பொருத்தமற்ற முறையிலும் காரணம் எதுவும் இல்லாமலும் அவன் சுதந்திரத்தை நசுக்கி வீட்டுக் கைதியாக அவனை வைத்திருந்தனர். அது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இன்று பொருத்தமான முறையில் காரண காரியத்துடன் சிறைவைக்கப்பட்டிருக்கிறான். இது அவனுக்குப் பிடித்திருக்கிறது. ''சிறைச்சாலைகள் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்கள்'' என்பது அவனைப் பொறுத்த வரையில் உண்மையானது.

ஆனந்தன் விடுதலையானான். ஊருக்கு வந்தவுடன் தாயார் காலமாகிவிட்ட செய்தியையும் தந்தை மறுமணம் செய்து கொண்டு வேறூர் போன செய்தியையும் அறிந்துகொண்டான். தாயின் மரணம் துயரத்தைத் தந்தாலும் மனதைத் தேற்றிக் கொண்டான். எதையும் ஜீரணித்துக் கொள்ளும் மனப் பக்குவத்தை அவன் எப்போதோ அடைந்துவிட்டான்.

ஆனந்தனுடைய மச்சான் ரகுவரன் உள்ளூர் வைத்தியசாலையில் டாக்டராகப் பணியாற்றுகிறான். அவனுடன் படித்த மாணவர்கள் இன்று உயர்வான பதவிகளை வகிக்கின்றனர். அவர்களைச் சந்திப்பதை ஆனந்தன் தவிர்த்துக்கொண்டான்.

ஆனந்தனின் மனதில் ஒன்றன் பின் ஒன்றாக அத்திவாரமிடப்பட்டு எழுந்த இரண்டு மாளிகைகளுமே இடிந்து தகர்ந்துவிட்டன. அம்மாளிகைகளில் குடியிருந்த இலட்சியவாதியும் அடங்காப்பிடாரனும் இன்று அங்கில்லை. சாதாரண ''மனிதன்'' ஒருவன்தான் அந்த இடிபாடுகளுக்கிடையில் போக்கிடமின்றி அலைந்துகொண்டிருந்தான்.

ஆனந்தனுக்குள் இருந்த ''மனிதனை'' சமுதாயம் கண்டுகொள்ளவில்லை. அவ்வூரிலுள்ள எல்லா வீடுகளின் கதவுகளும் அவனுக்கு மூடப்பட்டன. சந்தையில் லொறிகளிலிருந்து மூட்டை இறக்கும்கூலியாளனானான். மூட்டை தூக்குமளவில் அவன் உடல் வலுவானதல்ல. வேறு என்ன செய்ய முடியும்? வயிறு என்று ஒன்று இருக்கிறதே! அறுபது கிலோ எடையுள்ள சீனி மூடை ஒன்றை ஏற்றினால் அல்லது இறக்கினால் ஐம்பது சதம் கூலி கிடைக்கும். அரசாங்க உத்தியோகத்தன் ஒருவன் வரவேட்டில் கையெழுத்திட்டால் அவனுக்குச் சம்பளம் நூறு ரூபாய்! அம்மாவுடன் காரில் பவனி வருவதுபோல் சிறு வயதில் கண்ட கனவு நினைவு வந்தது. ஆனந்தனுக்குக் கண்கள் கலங்கின.

அன்று மூட்டை இறக்கிய பின் ஒரு கடையின் மூலையில் ஓய்வாக நின்றுகொண்டிருந்தான். தூரத்தில் ஓர் ஆணும் பெண்ணும் கைகோர்த்தபடி அந்நியோன்னியமாக வந்துகொண்டிருப்பதை அவன் கண்டான். ஒருவித ஏக்கத்துடன் அவ்விருவரையும் உற்றுப் பார்த்தபடி நின்றான். அருகில் வந்தவுடன் அப்பெண்ணை அடையாளம் கண்டான் அவனுடன் படித்த வசந்தி! அவளைப் பார்த்து மெல்லிய புன்முறுவல் பூத்தான். அவளோ வெடுக்கென்று முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

இன்னொரு நாள் ஓர் ஒழுங்கையால் ஆனந்தன் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பெண் சிறுவன் ஒருவனைத் தாறுமாறாக அடித்துக்கொண்டிருந்தாள் அவன் சற்றுத் தயங்கினான். பின்-

''அம்மா, பிள்ளையை ஏன் இப்படி அடிக்கிறீர்கள்?''

''எப்ப பார்த்தாலும் புழுதியில விளையாட்டுத்தான்! புத்தகம் எடுத்துப் படித்தால் என்ன? மக்கு...''

ஆனந்தனுக்கு நெஞ்சு பதறியது. ''அம்மா இன்னொரு தடவை அப்பிடிச் சொல்லாதீங்க! நம்மூரில எந்தப் பிள்ளையுமே மக்கு இல்ல... அந்தப் பையனுக்கு இப்ப தேவை விளையாட்டுத்தான். ஏன்னா இதுதான் விளையாட்டுப் பருவம். இன்னும் அஞ்சு வருசத்தில நீங்க சொல்லாமலே விளையாட்ட நிப்பாட்டிருவான். தாயே! அந்த பிள்ளய விளையாட விடுங்க. விளையாட்டு பிள்ளைகளின் பிறப்புரிமை. அதை அடக்கி வைக்க யாருக்கும் அதிகாரமில்லை ..''

''உன்னப்பத்தி எனக்குத் தெரியாதாக்கும்...நீ எல்லாம் புத்தி சொல்ல வெளிக்கிட்டா சாத்தான் வேதம் ஓதினமாதிரி தான்!''

ஆனந்தன் தலை குனிந்தபடி அப்பால் சென்றான். சிறுவனின் விம்மல் ஒலி அவன் நெஞ்சைப் பிளந்தது. அவன் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் நிலத்தில் வீழ்ந்தது.

கையில் இருக்கும் எதுவும் மனிதனுக்குப் பெறுமதியாகத் தெரிவதில்லை. கைக்கு வராததையும் கையை விட்டுப் போனதையும் நினைத்து ஏங்குவது மனித சுபாவம். சந்தர்ப்பமும் வசதியும் இருக்கும்போது அவன் எதையும் சாதிப்பதில்லை. காலம் கடந்த பின் வருத்தப்படுகிறான். வாலிபத்தின் மகிமையும் அருமையும் இளைஞர் யுவதிகளுக்குப் புரிவதில்லை. அவர்களுக்குப் புரிய வைப்பார் எவருமிலர். புரிய வைத்தாலும் அதைச் செவிமடுக்கும் மனப்பக்குவமோ, பொறுமையோ, கீழ்ப்படிவோ அவர்களுக்கு இல்லை. தள்ளாடும் முதுமையில்தான் வாலிபத்தின் வல்லமை விளங்குகிறது. இதைத்தான் 'அனுபவம்' என்கிறார்கள். முதியவர்களின் அனுபவம் இளைஞர் யுவதிகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். அந்த அனுபவங்களை இளம் தலைமுறை அசட்டை பண்ணுவது அவர்களுக்கே பேரிழப்பாகும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனந்தனும் இதற்கு விதிவிலக்கல்ல. பொன் போன்ற பாடசாலைப் பருவத்தை வீணடித்து விட்டதை நினைக்கும் தோறும் அவன் அடையும் மனவேதனை எழுத்தில் வடிக்கக் கூடியதல்ல. தனக்கு ஏற்பட்ட இந்த இழிநிலை இனி எந்த ஒரு பாடசாலைப் பிள்ளைக்கும் ஏற்படக் கூடாது என்று துடித்தான். வெறும் துடிப்பு என்ன செய்யும்? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா?

சிந்தனையிலாழ்ந்து போயிருந்தவனை கிசுகிசு குரல்கள் சுயநினைவுக்குக் கொண்டு வந்தன. காதைக் கூர்மைப்படுத்திக் கொண்டு உற்றுக் கேட்டான். இரண்டு பாடசாலைப் பையன்கள்! அவர்கள் கிசுகிசுத்த விடயம்...?

இறைவா! எத்தனை ஆனந்தன்கள் சீரழிந்தாலும் இந்தப் பிள்ளைகளின் கண் திறக்கவே மாட்டாதா? இது என்ன கொடுமை? வாலிபப் பலவீனங்கள் தொடர்ந்தும் பணமாக்கப் படத்தான் வேண்டுமா? எமது கலாச்சாரம், பண்பாடு, பெண்மையின் உயர்வு எல்லாம் கடைச்சரக்காக விலை பேசப்படத்தான் வேண்டுமா? அமிழ்தினு மினிய தமிழ் இந்தச் சினிமாக்காரன்களால் என்றோ செத்து விட்டது. பிஞ்சு மனங்களையும் சாகடிக்கத்தான் வேண்டுமா? மழைக் காளான்கள் போல் நாள்தோறும் பல்கிப் பெருகும் வீடியோக் குகைகள் இளம் இரத்தங்களைச் சூடேற்றி அதில் குளிர் காயத்தான் வேண்டுமா? கூடாது! இந்த இழிநிலை இனியும் நீடிக்கக் கூடாது. நாளை நமதே என்ற நம்பிக்கை ஒளி இளைஞர்களுக்குப் புலப்பட வேண்டுமானால், உடலாலும் உள்ளத்தாலும் அவர்கள் உறுதியடைய வேண்டுமானால், பெண்மை போற்றப்பட வேண்டுமானால், குற்றுயிராகக் கிடக்கும் தமிழ் உயிர் பிழைக்க வேண்டுமானால் இந்தக் கேவலம் சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும். 'உன் சமுதாயத்திற்கு உன்னால் எதுவுமே செய்ய முடியவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருப்பவனே எழும்பு! ஆனந்தா உன்னால் இயன்றதைச் செய், ஆனந்தனின் உள்ளக் கொதிப்படங்க வெகு நேரம் சென்றது.

நடுநிசி! வீடியோ கொட்டகை தீயின் அகோரத் தாக்குதலுக்கு உட்பட்டுக்கொண்டிருந்தது. 'நீல' நிறப்புகை ஆகாயத்தில் பரவியது.

ஆனந்தனுக்கு மூச்சிரைத்தது. இனி ஓட உடலில் வலு இல்லை. அவனுக்கும் அவனைத் துரத்துபவர்களுக்கும் இடையிலான தூரம் குறுகிக் கொண்டே வந்தது. ஓடுகிறவனையும் பணிந்து போகிறவனையும் கண்டால் மனிதப் பிராணிக்குக் கரைபுரண்டு ஓடும் உற்சாகம்! படார்! ஆனந்தனின் பிடரியில் பலமான ஓர் அறை விழுந்தது. பலவீனங்களை வாங்குபவர்களும் பலவீனங்களை விற்பவர்களும் பலவீனமான ஒரு மனிதனைப் போட்டுப் பலமாக உதைத்தனர். ஒருவன் சப்பாத்துக் காலால் ஆனந்தனைப் புரட்டி விட்டான். அவன் உடலெல்லாம் செந்நிறம் படர்ந்தது.

ஆனந்தன் மெல்லக் கண் திறந்தான். தன்னைச் சுற்றி நிற்கும் கூட்டத்தைப் பலவீனமாகப் பார்த்தான். இளைஞர்களைக் கண்ட போது அவன் கண்கள் பிரகாசித்தன. ஆனால் வாயை அசைக்க முடியவில்லை. மிக மிகச் சிரமப்பட்டு அவர்களை நோக்கிக் கரம் குவித்தான்.

''செய்பிறதையும் செய்துபோட்டுக் கள்ளன் கும்புடுறதப் பாரு. தூ......'' கூட்டத்தில் ஒருவன் காறித் துப்பினான்.

கீழுதட்டைக் கடித்தபடி ஆனந்தன் ஒரு விம்மலை வெளியிட்டான். கூப்பிய கரங்கள் கீழே விழுந்தன. கண்கள் மூடிக்கொண்டன. அவை மீண்டும் திறக்கவேயில்லை.

இடிபாடுகளுக்கிடையே போக்கிடமின்றி அல்லாடிக்கொண்டிருந்த ஒரு சாதாரண ''மனிதனும்'' மறைந்தான்.

முற்றும்.

—✱—

ஒரு பிள்ளையின் முதல் ஆசிரியர் அதனுடைய தாயே ஆவாள். எனவே பிள்ளையின் எதிர்காலமானது அப்பிள்ளை தாயின் மடியில் தவழும் காலத்திலேயே தங்கியிருக்கிறது. எனவே தான் நாளைய உலகைப்படைக்கும் பிரமாக்களாக தாய்மார்கள் திகழ்கின்றனர். பெண்மை தாய்மையிலேயே முழுமை அடைகிறது. ஒரு பெண்ணின் சிறப்பானது அவளுக்கு வாய்க்கும் கணவனை வைத்தோ அல்லது அவளிடம் இருக்கும் சொத்து பத்துக்களை வைத்தோ, நிருணயிக்கப் படுவதில்லை. அவள் பெற்ற பிள்ளை பிற்காலத்தில் எப்படி வாழப்போகிறான் என்பதிலேயே அவள் பெருமை தங்கியுள்ளது. ஆகவே நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவள் பேர் சொல்லி வாழ முடியாது.

# ஒரு கவிஞனின் ஆவல்

நான் பேச விரும்புகிறேன்
ஏழைகளுக்காக
நான் எழுத விரும்புகிறேன்
ஏழைகளின் எண்ணங்களை
எனக்கு இடம் வேண்டும்,
ஏழைகளின் இதயத்தில்,

நான் வாழ வேண்டும்
ஏழைகளின் உறவுகளோடு
நான் மீண்டும் பிறக்க வேண்டும்
ஏழையாகவே
ஏழையாகப் பிறப்பினும்
மனிதனாக மடிய வேண்டும்!

மனோகரன் கலைமதி
ஆண்டு - 9 வீ

# இன்னுமொரு நூற்றாண்டு

அகந்தை எனும் இருள் உலகில்
உலவி வரும் தளர் மதியே
அமாவாசையே இல்லாத
அறிவு நிலா - நீதான்!

நெடுங்கால உறவுகளில்
நீ புதுமையான ஆலமரம்!
வாய்மை விழுதுகளைப் புதைத்து
வையகத்தைக் காக்கும் - நீ
இந்த உலகின்
கலங்கரை தீபம்!

உன்னுடைய பேனா
உதறுகின்ற மைத்துளிகள் - இல்லை
அது மணித்துளிகள்
அந்த மணித்துளிகளில்
விளைந்த முத்துக்கள்
ஆயிரமாயிரம் கல்விமான்கள்

உன்னுடைய தோட்டத்திலே
விளைகின்ற செடிகளில்
சொல் என்னும் பாரி ஜாதங்களை
நுகர்கின்ற வண்டுகள் கூட
வல்லூறாய் மாறி விடுகின்றன.

உனது வியர்வை முத்துக்களில்
விளைகின்ற பயிரினங்கள்
பாரினை வளப்படுத்தி
பசுஞ் சோலையாக்கி வைக்கின்றன.

அமாவாசையே இல்லாத
அறிவு நிலவே - நீ
நூற்றாண்டுகள் அல்ல
ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
அவனிக்கு நல்ல அமுதூட்டு!

வீரக்குட்டி இராஜேந்திரம்
13 வர்த்தகப் பிரிவு

# விடிவொன்று ஓடி வரும்

காலை விடிந்தவுடன்
கை கால் முகம் கழுவி
கல்விதனைக் கற்றிட
பள்ளிக்கூட வழி நடந்து
சரித்திரத்தைக் கெடுக்காது
பள்ளியிலே இயந்திரமூளையாய்
அனுதினமும் பாடுபட்டு
கல்வியினைப் பயின்று
வெற்றியினைத் தொடும் போது
விடிவொன்று ஓடி வரும்
வீண் கவலை நமக்கெதற்கு!

கோழைச் சமுதாயத்தை
கொண்டதாக இருக்காது
கல்வியின் உயர்வறிந்து
வெளிக்கிட்டு பள்ளிக் கூடத்துக்கு
மனதினை நிலையாக
ஒருமனப் படுத்தி விட்டு
கற்றலில் இறங்கி விடின்
விடிவொன்று ஓடி வரும்
வீண் கவலை நமக்கெதற்கு!

உள்ளத்து நல்லவற்றை
உருவாக்கி நித்தமும்
கள்ளமுள்ள உள்ளத்தை
கழற்றியே எறிந்து விட்டு
பற்றற்ற வாழ்க்கைக்கு
பாதைதனை வகுத்துவிட
துள்ளிவிடும் சிந்தனையை
துணையாகக் கொண்டு விடின்
விடிவொன்று ஓடி வரும்
வீண் கவலை நமக்கெதற்கு!

பட்டந்தனை தூக்கி நின்று
புதுவாழ்வைப் பெற்றிட
பயம்தனை நெஞ்சிலகற்றி
பயணத்தை நாம் தொடர்ந்தே
நயத்தால் நாம் உயர்ந்து
நல்லுலகைக் காணும் போது
விடிவொன்று ஓடி வரும்
வீண் கவலை நமக்கெதற்கு!

**சாமித்தம்பி ஜெயமலர்**
*13 வர்த்தகப் பிரிவு*

# உங்கள் சிந்தனைக்கு

றிற்றாமேரி றிச்சட்
ஆண்டு - 12 கலை

தன் நாவைக் காக்கிறவன் தன் ஆன்மாவையே காக்கிறான்.
உன் பகைவன் விழும் போது நீ மகிழ வேண்டாம்.
அவன் அழிவுறும் போது அக்களிக்க வேண்டாம்.
அகந்தை எங்கே இருக்கிறதோ, அங்கே அவமானம் இருக்கும்.
தாழ்ச்சி எங்கே இருக்கிறதோ, அங்கே ஞானம் இருக்கும்.
அக்கிரமத்தோடு நிறைவு கொண்டு இருப்பதை விட நீதியோடு வலிமையுற்றிருப்பதே நன்று.
பகைவனின் வஞ்சக முத்தங்களைக் காட்டிலும், நண்பன் தரும் காயங்களே அதிக நலமானவை.
தீய வழிகளில் நடக்கும் செல்வந்தனை விட, நேர்மையாக நடக்கும் ஏழையே உத்தமன்.
குழி தோண்டுபவன் தானே அதில் விழுவான்.
கல்லைப் புரட்டுகின்றவனிடமே அது திரும்பி வரும்.
உண்மை செய்பவன் உலகப் பகைவன், நன்மை செய்பவன் நாளும் விரோதி.

| | | |
|---|---|---|
| விரும்ப வேண்டிய மூன்று | - | தூய்மை, நேர்மை, உழைப்பு. |
| மதிக்க வேண்டிய மூன்று | - | முதுமை, மதம், சட்டம். |
| பாராட்ட வேண்டிய மூன்று | - | அழகு, அறிவு, குணம். |
| வளர்க்க வேண்டிய மூன்று | - | அஞ்சாமை, உற்சாகம் திருப்தி. |
| காப்பாற்ற வேண்டிய மூன்று | - | செல்வாக்கு, நட்பு, பற்று. |
| விலக்க வேண்டிய மூன்று | - | மது, பகை, சூதாட்டம். |
| கட்டுப்படுத்த வேண்டிய மூன்று | - | நாக்கு, உணர்ச்சி, இச்சை. |
| கவனிக்க வேண்டிய மூன்று | - | பேச்சு, நடத்தை, செயல். |
| ஒழிக்க வேண்டிய மூன்று | - | சோம்பல், பொய், புறங்கூறல். |

## சில நாடுகளின் சுதந்திர தினங்கள்

| | | |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | - | யூலை 04 |
| அப்கானிஸ்தான் | - | ஜனவரி 04 |
| அமெரிக்கா | - | யூலை 04 |
| பர்மா | - | ஜனவரி 04 |
| பெல்ஜியம் | - | யூலை 04 |
| கனடா | - | யூலை 01 |
| சீனா | - | ஒக்டோபர் 10 |
| இலங்கை | - | பெப்ரவரி 04 |
| போலந்து | - | மே 03 |
| பின்லாந்து | - | டிசம்பர் 06 |
| பிரான்ஸ் | - | யூலை 16 |
| இஸ்ரேயில் | - | ஏப்ரல் 03 |

| | | |
|---|---|---|
| இத்தாலி | - | மார்ச் 26 |
| யப்பான் | - | ஏப்ரல் 29 |
| மெக்சிக்கோ | - | செப்டம்பர் 14 |
| நோர்வே | - | மே 17 |
| பிலிப்பைன்ஸ் | - | யூலை 04 |
| போர்த்துக்கல் | - | ஒக்டோபர் 05 |

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் ஆசை.

விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் ரகசியம்.

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்.

படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று.

நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சியின் வாய்க்கால்.

உழைப்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை.

சமுதாயத்துக்கு நேரம் ஒதுக்குங்கள் அது சகாப்தத்தின் எழுச்சி.

---

## புத்தகத்தைக் காப்பதெப்படி

1) புத்தகத்தை அதிகமாகப் பிரிக்காதீர்.

2) பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்.

3) மூலைகளை மடிக்காதீர்.

4) தூக்கம் வரும்போது எடுத்து வைக்க மறவாதீர்.

5) தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்.

6) வைக்கும் போதும் கொடுக்கும் போதும் வீசியெறியாதீர்.

7) ஆளின் மீதோ பூமியிலோ அடிக்காதீர்.

8) குழந்தைகளிடம் கொடாதீர்.

9) குறிப்புகளும் கோடுகளும் எழுதாதீர்.

10) எண்ணெய், தண்ணீர் பட்ட கைகளோடு தொடாதீர்.

த. சுபராஜினி
ஆண்டு 10 சீ

# தந்தை சொல் மிக்க மந்திர மில்லை

ம. வசந்தி
ஆண்டு 12 கலை

கதிரவனின் ஒளிமயமான பிரகாசத்திற்கு அஞ்சி இருளானது கண்கூசி ஓடி மறைவதைப் போல மறைந்து கொண்டிருக்க வெற்றிக் கொடியை ஏந்திய வண்ணம் கதிரவன் கிழக்கிலிருந்து அதன் கதிர்களைப் பரப்பிக் கொண்டு வரத் தொடங்கியது. துன்பத்தில் இருந்து கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தோர் இன்பத்தைக் கண்டு குதூகளிப்பது போல் குயில்கள் பாட காக்கைகள் கரைய மற்றும் பல இனிய குரல்களையுடைய பறவைகள் கீச்சிட உலகமே இன்ப வெள்ளத்தில் மிதக்கின்றது.

இவ்வேளையில் படுக்கையில் இருந்து எழும்புவதற்கு மனம் இடம் கொடுக்காதவராய் படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டிருந்த ஜெயராமன் ஒருவாறு அவரை சமாளித்துக் கொண்டு எழுந்தார். ஜெயம் என்றாலே வெற்றி. அனைத்து வெற்றிகளையும் வாழ்க்கையில் வெற்றி கொண்டே வந்த ஜெயராமன் நீதி, நேர்மை, ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இரக்கம் இவ்வாறான குணங்களுக்கெல்லாம் சிறந்து விளங்கி இப்போதும் மக்களின் மனத்திரையை விட்டு அகலாத மனுநீதிச் சோழனைப் போல் சிறந்து விளங்கினார்.

இந்த ராமனுக்கு 5 பிள்ளைகள். இவ் ஐவரும் ஆண்மக்களே. இவரது மனைவி பிள்ளைகள் சிறுவராக இருக்கும் போதே இவ்வுலகை விட்டுப் போய்விட்டார். சிறு வயதிலேயே அன்னையை இழந்த பிள்ளைகளுக்குத் தந்தைக்குத் தந்தையாய் தாய்க்குத் தாயாய் பிள்ளைகளுக்கு எக் குறையும் வரவிடாது வளர்த்து வந்தார். இப்படிப்பட்ட தந்தையிடம் வளர்ந்து வந்த பிள்ளைகள் எப்படி இருந்தனர் என்பது தான் இப்போது நமது கருத்தினை ஈர்க்கின்றது.

எமது ஐந்து விரல்களும் ஒன்றாக இருக்கின்றனவா இல்லவே இல்லை. இது இயற்கையின் நியதி. இப்படித்தான் இந்த ஐவரும் இருக்க வேண்டுமா? இல்லையா! என்று சொல்வோம். ஆனால் என்ன செய்வது ஜெயராமனின் தலைவிதி நால்வர் நல்ல ஒழுக்க சீலர்களாக நாட்டின் நற்பிரசைகளாக திகழ ஒருவன் மட்டும் குலப் பெருமையைப் புகழ்ச்சியை ஜெயராமனுடைய கௌரவத்தை அழிக்க வந்த துரியோதனனாக உருவெடுத்தான். அயலவர்களிடமும் அந்த ஊரிலும் பல கெட்ட பெயர்கள் புரிந்து கெட்டவன் என்ற பட்டத்தைப் பெற்றான்.

ஜெயராமனுக்கோ நான்கு பிள்ளைகளின் மகிழ்ச்சியை அனுபவிப்பதை விட இந்த கெட்டவனான ரகுவின் துன்பத்தை அனுபவித்து அனுபவித்து மனம் சோர்ந்து போனார். இவருடைய கௌரவத்திற்கு மக்கள் அவர்மேல் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் இங்கே அழிந்து விடப்போகின்றதோ, என்று அஞ்சினார் ஜெயராமன். நிச்சயமாக அவன் மனம் திருந்தி வாழ்வான் எனக் கனவு கண்டார்.

ரகு சூதாடுதல், மதுவருந்துதல், பெண்களோடு தகாத முறையில் தொடர்பு கொள்ளுதல், சகல கெட்ட பழக்க வழக்கங்களையும் கைவந்த கலையாக கொண்டிருந்தான். இதைப் பார்த்துப் பார்த்துச்சகிக்கமுடியாமல் ஜெயராமனும் ரகுவின் சகோதரர்களும் அவனைக் கண்டித்து அவனைத் திருத்த முயற்சித்த போதுதான் ரகுவின் அட்டகாசச் செயல்கள் வீட்டிலும் தலைதூக்கின. அவனுடைய செயல்கள், வார்த்தைகள் அனைத்தும் ஜெயராமன் நெஞ்சில் ஈட்டிபோல் குத்தியது. ஒரு நாள் ரகு மது அருந்திவிட்டு வந்து ''நீ என்னடா அப்பா? நீ என்ர கொப்பனா இருந்தா எனக்குத் தார சொத்தை எல்லாம் உடனடியாக எழுதித்தா? மக்கள் நான்கு பேரும் பெரிய படிப்பாம் படிப்பு. நான் கண்டறியாத படிப்பா அது. நான் இந்த மதுப்பாட்டில் இருந்து அனுப விக்கும் சுகத்தைக் கூட அனுபவிக்கத் தெரி

யாமல் இருக்கும் உங்கள் புத்திரர்களின் படிப்பும் உத்தியோகமும் எதற்கு? அதையெல்லாம் கொண்டு போய் குப்பையில் போடுங்கள்'' என்று சீறினான்.

ரகுவை நல்லவனாக்கித் தான் மகிழலாம் என்று நினைத்த ஜெயராமன் மனக்கோட்டை மண்கோட்டையாகிப் போகவே அவருக்கு இதய நோய் முற்றிய நிலைக்கு வந்து படுத்த படுக்கையாகி விட்டார்.

அச்சந்தர்ப்பத்தில் அவர் ஒரு நாள் ரகுவிடம் கூறிய வார்த்தைகள் ''நான் பெற்றெடுத்த ஐந்து பிள்ளைகளும் ஐந்து விரல்களைப்போல் ஒன்றாக இருக்காவிட்டாலும் ஒற்றுமையாக நல்லவர்களாக இருக்க வேண்டும் என எண்ணினேன். என் குறிக்கோளைப் போல் எனது நான்கு பிள்ளைகள் நடந்து கொண்டார்கள் ஆனால் நீ......நீ வழி தவறி விட்டாய். எனது நான்கு பிள்ளைகளும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ அந்த இறைவன் அருள் புரிவான்! நான் இனி பிழைக்க மாட்டேன். ஆண்டவன் அருட்செயலால் நான் பணக்காரனாக இருந்ததால் எனது குடும்ப வைத்தியர் எனது சாவை இவ்வளவு நாளும் பின் நோக்கச் செய்திருக்கிறார் என நினைக்கின்றேன். நீ எனக்கும் உனது சகோதரர்களுக்கும் செய்த, செய்கின்ற துரோகங்களுக்கு நீ அடுத்த ஜென்மத்தில் அல்ல இந்த ஜென்மத்திலேயே தண்டனை அ...னு...ப...வி' என்று சொல்லும் போதே கண்களை மூடிவிட்டார்.

தந்தை இறந்து சில காலத்திற்குப் பிறகு ரகுவும் அவனது சகாக்களும் ஒரு வங்கியைக் கொள்ளையடித்து விட்டு மது நிறைய அருந்தி விட்டு வரும் போது வீதிவிபத்தொன்றில் ரகு சிக்கிக் கொண்டான். அவ்விபத்தில் ரகு ஒரு காலையும் வலது கையையும் இழக்க வேண்டி நேரிட்டது. அவன் ஒரு அரச மருத்துவமனையில் உற்றார் உறவினர் எவரும் இன்றி படுத்த படுக்கையாய் கிடந்த நேரத்தில்தான் அவன் தனக்குத் தானே நினைத்துக் கொண்டான். அப்பா நான் உங்களுக்கும் எனது சகோதரர்களுக்கும் செய்த துரோகங்களுக்கு அடுத்த ஜென்மத்தில் அல்ல இந்த ஜென்மத்திலேயே தண்டனை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றேன் அப்பா, அப்பா என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள் அப்பா. நான் செய்த துரோகங்களை உங்களது ஆத்மாவாவது மன்னிக்குமா அப்பா? என ரகு புலம்பிக் கொண்டிருந்தான். தந்தை சொல்மிக்க மந்திரமில்லையப்பா இவ்வுலகிலே!

(யாவும் கற்பனை)

# ஏர் கொண்டு எழுந்திடடா

இயற்கையெனும் இளவரசி
ஏறி நடம் புரிகின்றாள்
அயர்ச் சிறையில் கிடக்கின்ற
அகிலத்தைப் பார்க்கின்றாள்
துயர் களைந்து தூங்கும் இருள்
தொலைந்திடவே வருகின்றாள்
இயற்கையினை எழிலூட்ட
ஏர் கொண்டு எழுந்திடடா!

உனையீன்ற மாதாவை
உயிர் கொள் செய்திடடா
தனைத் தந்து உன் பசியை
தாங்கினனை வாழ்த்திடடா
வினை கொண்ட நானிலத்தில்
வீர நடை போட்டிடடா
இணையில்லை உந்தனுக்கு
ஏர் கொண்டு எழுந்திடடா!

செல்வி. செ. சுலோஜினி
13 கலை பிரிவு

# உங்களுக்குத் தெரியுமா!

1) கேத்திர கணித விற்பன்னர் - பைதகரஷ்

2) ரஷ்யர்களின் மதுபானம் - வொட்கா

3) டேவிட் கின்னத்துக்குரிய விளையாட்டு - ரெனிஸ்

4) டியர் கார் உற்பத்தியாகும் நாடு - இத்தாலி

5) வேகமாக ஓடவல்ல புலியினம் - சிறுத்தை

6) மாட்டிறைச்சி அதிகமுள்ள இடம் - சிக்காகோ

7) மனித உடலில் பெரிய சுரப்பி - கல்லீரல்

8) தென்னமெரிக்காவில் அதிக செழிப்பான நாடு - பரகுவே

9) முதற் சிங்கள அகராதி தொகுத்தவர் - சோரட்டதேரோ

10) மஹாவம்சம் எழுதக் காரணமானவர் - மஹாநாமன்

11) அந்தமான் தீவுகளின் தொகை - 204

12) ஆங்கிலக் கால்வாயை நீந்திய பெண் - கேற்றூட் சுதனி

13) அதிக இறைச்சி உண்ணும் மிருகம் - துருவக் கரடி

14) மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - ரேணர்

15) தென்னையின் பிரயோசனங்கள் அதிகமுள்ள நாடு - பிலிப்பைன்ஸ்

16) எகிப்தின் முதல் ஜனாதிபதி - நாகீப்

17) தத்துவமும் கணிதமும் வல்ல ஆங்கிலேயர் - பேட்றன்சல்

18) சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - கேக்

19) மிகப் பெரிய உயிரினம் - திமிங்கிலம்

20) கம்பளையின் பழைய பெயர் - கங்கசிரிபுர

21) இலங்கையில் அதிக தெருக்களை அமைத்தவர் - பான்ஸ்

22) கிரேக்க நாட்டின் களஞ்சியம் எனப் பெயர் பெற்றவர் - அரிஷ்ராட்டில்

23) புத்தர் ஞானம் பெற்ற இடம் - காயா

24) சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் - முத்துக்குமாரசாமி

25) பின்பக்கம் ஓடக்கூடிய மிருகம் - கோபர்

26) இந்தியாவுக்கும் திபெத்துக்கும் இடையிலுள்ள மலை - இமயம்

27) வீதிகளில் வெளிச்சம் ஏற்பட்ட முதல் நகரம் - பாரிஸ்

28) கப்பல்களை இழுத்தலைக்கும் உயிரினம் - களகன்

ச. யோகபாரதி
12 கலை

—✶—

29) 'ஜனநாயகம்' என்ற கோட்பாட்டிற்கு முதல் முதலில் விளக்கம் தந்தவர் யார்?
- ஆபிரகாம் லிங்கன்

30) சிரியா நாட்டின் தலைநகரம் எது?
- டமாஸ்கஸ்

31) கோப்பியில் உள்ள நச்சுப்பதார்த்தம் எது?
- கபின் பதார்த்தமாகும்

32) எரிமலையால் அதிகளவு பாதிக்கப்படும் நாடு எது?
- ஜப்பான்

33) குங்குமப் பூவை ஏற்றுமதி செய்யும் ஒரே ஒரு நாடு?
- ஸ்பெயின்

34) நத்தைக்கு உள்ள பற்களின் எண்ணிக்கை என்ன?
- 1800 பற்கள்

35) 120 நாட்கள் உணவு இல்லாமல் இருக்கும் உயிரினம் எது?
- வௌவால்

36) சமாதானத்திற்கான நோபல் பரிசின் தந்தை யார்?
- அல்பிரட் பேர்ணாட் நோபல்

37) நோபல் நிறுவனம் எத்தனையாம் ஆண்டு, எங்கு நிறுவப்பட்டது?
- 1893 ம் ஆண்டு சுவீடனில்

மெத்தியஸ் தாரணி
கலைப்பிரிவு 12

—✶—

## அச்சுத்தொழில்

38) அச்சிடுதல் (பிரின்டிங்) எப்போது கண்டு பிடிக்கப்பட்டது?
- சீனாவில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எளிய முறையில் அச்சுத்தொழில் செய்யப்பட்டது.

39) முற்காலத்தில் எவ்வாறு அச்சிடப்பட்டது?
- மரத்தில் எழுத்துக்களைச் செதுக்கி அதன் மீது மைதடவி பேப்பரிலோ துணியிலோ அழுத்தி அச்சிட்டார்கள்.

40) நவீன அச்சுமுறையின் தந்தை யார்?

- ஜேர்மனியைச் சேர்ந்த ஜொகான் கூட்டன்பார்க் 18 ம் நூற்றாண்டில் சுழல் அச்சு முறையைக் கண்டு பிடித்தார்.

41) முதலில் அச்சிடப்பட்ட புத்தகம் யாரால் அச்சிடப்பட்டது?

- இங்கிலாந்தில் வெஸ்ட் மினிஸ்டர் என்ற இடத்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவரால் அச்சிடப்பட்டது.

42) நவீன அச்சுத் தொழிலில் எத்தனை முறைகள் உள்ளன?

- லெட்டர் பிரஸ், ஆப்செட், கிரேவார், ஸ்கிறீன் பிறின்டிங் ஆகிய முக்கிய முறைகள் உள்ளன. பத்திரிகைகள், போஸ்டர்கள் ஆகியன ஆப்செட் முறையில் அச்சிடப்படுகின்றன.

செல்வி. தயானி நடேசன்
ஆண்டு 11

—✶—

43) ஐந்து வகை இலக்கணங்களும் எவை?

- எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

44) மாருதி என்று இராமாயணத்தில் சிறப்பிக்கப்படுபவர் யார்?

- அனுமார்

45) இரசிகமணி என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படும் முதுபெரும் தமிழறிஞர் யார்?

- திரு. டி.கே. சிதம்பரநாத முதலியார்

46) ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரியாத ஆங்கில மன்னன் யார்?

- முதலாம் ஜோர்ச் மன்னன்

47) சிங்கம் எத்தனை வருடம் வாழும்?

- 40 வருடங்கள்

48) எகிப்தின் தேசிய சின்னம் என்ன?

- தாமரை

49) ஆட்டு உரோமத்தினை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது:

- அவுஸ்ரேலியா

50) இந்திரா காந்தி முதன் முதலாக பிரதமராக பதவி ஏற்ற ஆண்டு எது?

- 1966ம் ஆண்டு

ஸ்ரீ. எழிலன்

—✶—

51) ஈரடி நாயகன் வள்ளுவப்பெருந்தகை இந்து மதமா? சமண மதமா? பௌத்த மதமா? தாய்மொழி எது?
- இந்துமதம். மொழி தமிழ் (வள்ளுவன் இந்து என்னும் நூலைக் கவனிக்க)

52) விமானக் கறுப்புப் பெட்டி என்பது எதனைக் கருதுகின்றது?
- விமானத்தில் நடைபெறும் சம்பவங்களைப் பதிவு செய்யும் கருவியாகும்.

53) நாலறிவு உள்ள உயிரினங்கள் எவை?
- நண்டும், வண்டும்

54) உலகில் ஆதியில் தோன்றி இன்றுவரை உள்ள மூன்று மதங்களில் ஒன்று இந்துமதம், யூத மதம் மற்ற மதம் எது?
- சௌத்திரியமதம்

55) உலகில் புகைபிடிப்பவர்கள், துவிச்சக்கரவண்டி ஓடுபவர்கள் அதிகம் ஆண்களா? பெண்களா?
- பெண்கள் (புள்ளிவிபரத் திணைக்களம்)

56) ஹிட்லர், எந்த நாட்டில் பிறந்தார் எந்த நாட்டில் இறந்தார்?
- ஜேர்மன், சோவியத் ஒன்றியம்

57) கலையும் காமமும் எப்போது தோன்றியது?
- மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே

58) 'கொக்கோ கோலா' கலவையில் என்னென்ன போதைப் பொருள் உண்டு?
- கோக்கோ லைன்

59) கரப்பானின் கண் எப்பெயரால் அழைக்கப்படும்?
- கூட்டுக்கண் (இரண்டல்ல பலகண்கள்)

60) 'ரியூசன்', ரியூட்' என்ற இரு எண்ணக்கருக்களின் தமிழ் மொழிப்பெயர்ப்பு யாது?
- ரியூசன் - தனியார்கல்வி (மேலதிக நேர வகுப்பு)
- ரியூட் - கட்டுரைப் பயிற்சி

**எதிர்மன்னசிங்கம். ஜெயன்**
*13 கலை*

—✱—

## பதினாறு பேறு (செல்வங்கள்) பெறுதல்

1) புகழ்
2) கல்வி
3) ஆற்றல்
4) வெற்றி
5) நன்மைகள்
6) பொன்
7) நெல்
8) அழகு
9) பெருமை
10) ஆயுள்
11) நல்லூழ்
12) இளமை
13) அறிவு
14) துணிவு
15) நோயின்மை
16) நுகர்ச்சி

சிறுகதை

# முயற்சியே உயர்ச்சி

P. சுடர்மதி

கந்தரின் மனைவி அன்னம். அவர்களுக்கோர் ஆண் குழந்தை. பெயர் சேகரன். வாய்க்காலின் வடிநீரிலே வளர்ந்து விட்ட கீரைபோல பார்க்க வனப்பாயிருந்தான். வயது ஏழு ஆகியும் பாடசாலை சேர்கக வசதி யற்ற நிலை மட்டுமல்ல அசிரத்தையும் கூட கந்தருக்கு. இருந்தும் சேர்த்து விட்டார்.

ஒரு நாள் கந்தர் ஏதோ அலுவலாக பாடசாலை வழியே போய்க் கொண்டிருந்தார். ''கந்தண்ணா'' என்ற குரல் கேட்டு திரும்பிய கந்தர் திகைத்து விட்டார், வாத்தியார் மகனைப் பற்றி ஏதோ விபரீதமாக சொல்லப்போகிறாரோ என்று. ''பையன் படிக்கின்றான் பறவாயில்லை'' வாத்தியார் பூவாலர் கந்தரிடம் சொன்னார். ''படித்து என்னாய்யா செய்யிறது, எங்களைப்போல ஏழைகளுக்கு யார் உதவுவாங்க, ஒரு மாடு, ஒரு வண்டி இவைதான் என் சொத்து. இந்த வண்டில் தொழில் தானே அவனும் செய்ய வேண்டும்'' என்றார் கந்தர் பெருமூச்சு கலந்த மன வேதனையுடன், ''கந்தண்ணா காலம் வரும் போது எல்லாம் தானாக வரும், என்ர அப்பா வெத்திலைத் தோட்டம் செய்து தான் என்னைப் படிப்பித்தவர். நான் என்ன வெத்திலைத் தோட்டமா செய்கிறன்? தரமான தலைமை ஆசிரியர். 'ஏன் ஊக்கமாக படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசையோடு செயல்ப்பட்டவன் நான், அது போல உன்ர பொடியனுட்ட அந்த திறமை தெரியுதண்ணா. பையனைக் கெடுத்துப் போடாம ஏண்டளவு படிப்பி'' என்று கூறி விட்டு வாத்தியார் பாடசாலையை நோக்கி சென்று விட்டார். சேகரனுக்கு வயது பன்னிரண்டு. வகுப்பு ஐந்தாவதுதான். அம்மாவுக்கு உதவியாக காலையில் அப்பம் விற்க வேண்டும். மாலையில் அரிசி விற்க வேண்டும். இடையிடையே அப்பாவுக்கு உதவவேண்டும். படிக்க வேண்டும். இவைகளுக்கு மத்தியிலும் சேகரன் மனம் கோணாமலும் களைக்காமலும் பாடு படுவான். அவனிடம் காணப்பட்ட அடக்கமும் பண்பும் கீழ்ப்படிதலும் அனைவரோடு அன்பு காட்டுதலும் ஆசிரியர் பூபாலரைக் கவர்ந்தன.

அவரிடம் சேகரன் கல்வி கற்க காலக் கலண்டரில் வருடங்கள் ஒன்பது உருண்டோடின. இந்தக் காலங்களிலே சேகரன்பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. காரணம் தனது படிப்புக்கும் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தன் குடும்பத்தின் அத்தியாவசிய தேவை பற்றாக்குறைகட்கும் பணம் அவசியமாகியது. இக் குறையை அவன் தந்தையாலோ தாயாலோ ஈடு செய்ய முடியவில்லை. அப்பப் பெட்டி அரிசிப் பெட்டியென தன் தலையிலேயே பாரங்களை சுமககக் கற்றுக் கொண்ட சேகரன் தன் மனதிலேயும் மூளையிலேயும் கல்வியே கருந்தனம் எனபதை உணர்ந்து அதனையும் சுமந்தான். நாள், மாதம், வருடம் என ஓடிக்கொண்டிருந்த அவனின் வாழ்க்கைப் பாதையில் காய்ந்து உலரும் பயிர்கட்கு இடையிடையே கிடைக்கின்ற மழைத்துளி, பனித்துளி போல ஆசிரியர் பூபாபலர் சேகரனில் இரக்கம் கொண்டு பெற்றாரின் அனுமதியுடன் உறுகாமத்திலுள்ள தனது சேனை வாடிக்கு ஓய்வு நாட்களில் அழைத்துச் சென்று மரவள்ளிக் கிழங்கு மரக்கறி போன்றவற்றைக் கொடுப்பார்.

ஒரு நாள் ஆசிரியர் சொன்னார் ''சேகரன் உனக்கு நல்ல திறமையிருக்கு அறிவு மிருக்கு நான் சொல்லுகிற படி செய்'' என்று ஒரு வீட்டுத்தோட்ட அமைப்புக்கான சகல புத்திமதிகளையும் கூறினார். பட்டிச்சேனைப் பாடசாலை வட்டாரங்களிலே வீட்டுத்தோட்டப் போட்டி ஆரம்பமாகி இருந்ததே காரணம். சேகரன் வேலி நடத்தொடங்கி கூட்டெரு தயாரிப்பு, நாற்று நடுதல், பிரயோசனம் எடுத்தல் வரையிலும் நாளாந்த குறிப்புக்கள் எழுதியிருந்தான்.

சிறு வயதிலேயே வீட்டில் பல சிறு பயிர்களை செய்து தன் படிப்புச்செலவுப் பழுவை ஓரளவு குறைத்து வந்த சேகரனுக்கு இது இலகுவாக இருந்தது. வீட்டுத்தோட்ட பார்வையாளர்களான மேலதிகாரிகட்கு சேகரின்

செயல் முறைகள் மிகவும் பிடித்திருந்தன. சேகரனுக்கே முதல் பரிசு கிடைத்தது. அப்படியும் இப்படியுமாக தனது வருமானங்கள் மூலம் சுய தேவையைப் பூர்த்தி செய்து சிரேஸ்ட தராதர வகுப்பு வரை தேறிவிட்டான். சேகரனின் மனதிலே அடியாழத்தில் ஒரு தாகம் - அதாவது தான் கற்கும் கல்வியின் மூலம் தன் சனங்களுக்கு நாட்டுக்கு நல்லதொரு சேவை செய்ய வேண்டும் என்பதாகும். இவ்வேளையிலே அவன் தந்தை கந்தர் சோர்வாதத்தால் பீடிக்கப்பட்டு நடக்க முடியாத நிலை. தனக்கு கீழுள்ள இரு சகோதரர்கட்கும் படிக்க முடியாத நிலை. கஷ்டம் வந்தால் அடுத்தடுத்து வரும் என்று சிலர் கூறுவார்கள். ஒரு நாள் தலைமை ஆசிரியர் பூபாலரும் மாரடைப்பால் மரணமான செய்தியைக் கேட்ட சேகரனுக்கு தலையில் இடி விழுந்தது மாதிரி இருந்தது. மழைமுகம் காணாத பயிர்போல வாடினான் சேகரன். மேற்கொண்டு என்ன செய்வதென்றே தோன்றவில்லை அவனுக்கு.

அரசினர் வைத்திய சாலையில் உதவிகள் செய்தும் வேறு பல வழிகளிலும் தனது வீட்டுத் தோட்டத்தின் மூலமும் பணம் சேர்த்தான். கொட்டக்கலை என்ற இடத்துக்கு தோட்ட ஆசிரியர் கடமைக்கு மனுப்பண்ணியிருந்தான். திருமலை அஞ்சல் அலுவலகம், ஏறாவூர் வைத்தியசாலை, மட்டக்களப்பு கச்சேரி ஆகிய எல்லா இடங்களுக்கும் தொழில் தேடி மனுப்பண்ணிய சேகரனுக்கு மட்டக்களப்பு கச்சேரி அழைப்பு விடுத்தது அவசர அவசரமாக புறப்பட்டான் சேகரன் ''தம்பி! சேகரன் எங்கப்பா அவசரமாக போறா? தண்ணி வெண்ணியுங் குடிக்காம என்றாள் தாய் அன்னம்மா. ''மட்டக்களப்புக்கு அம்மா அவசரமாவரச்சொல்லி கச்சேரியில் இருந்து கடிதம் வந்திருக்கு அதான்'' என்றான்.

''என்னப்பா தம்பி கையிலே ஒரு சதக் காசியுமில்லை. என்ன செய்யப் போறா?'' தாயின் மனம் உருகியது. ஒரு ஒழுங்கான உடுப்பில்லை என்று தனக்குள்ளே கவலை கொண்டாள் அன்னம். ''அம்மா நீ ஏன் கவலைப்படுகிறாய். அப்பாவை கவனமாக பாத்துக்க, என்னைப் போல கஷ்டப்படாம தம்பிமார் படிக்க வேணும். என்னை நான் எப்படியும் சமாளிச்சுக்குவன் நீ கவலைப்படாத'' என்று புறப்பட்டான் சேகரன்.

சில காலமாக அங்கு சேகரினுடைய சகல செயல் திறமைகளையும் கண்ட கச்சேரி மேலதிகாரி, மனதுக்குள் ஒரு நோக்கை வைத்துக் கொண்டு சேகரனுக்கு உதவ முன் வந்தார். தனது மன அபிலாசைகள் நிறைவேறும் காலம் அண்மி விட்டதை நினைத்து மகிழ்ந்து பல்கலைக் கழகம் சென்றான். இதே வேளையில் தான் முன்போட்ட மனுக்களுக்கெல்லாம் பதில் வந்தது தொழிலுக்கு வரும்படி. இதுவே தான் காலம் வரும்போது எல்லாம் தானாய் வரும் என்பது. ஆண்டுகள் ஐந்து பறந்தன. வண்டிக்கார கந்தரின் மகன் சேகரன் இன்று டாக்டர் சேகரன். ஆனாலும் தான் அடியெடுத்து வந்த பாதைகளை திரும்பிப்பார்க்க சேகரன் தவறுவதில்லை ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய். அதுபோல அன்னம் தனது மகனின் நிலை கண்டு பெருமிதத்துடன் களித்திருந்தாள். தன்னை உணர்ந்து தான் வந்த பாதைகளின் கரடுமுரடுகளை அறிந்து, உணர்ந்து பிறருக்குதவி புரிந்து தாயுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்தான். இவ் வாழ்வுக்கு அவன் புகழ் திகழ்ந்த தென்றால் அதற்கு காரணம் அவனது முயற்சி தான். எனவே நமதுமுயற்சிகளின் பிரதிபலிப்புத்தான் நமக்கு உயர்ச்சியையும் சிறப்பையும் தருவதோடு பிறரின் மதிப்பான பார்வைக்கும் இடமளிக்கிறது. சகலரோடும் சரியாசனமும் தருகிறது.

தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன்
மெய் வருந்த கூலி தரும்.

(யாவும் கற்பனை)

---

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்
அதை அங்கோர் காட்டிலே
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் மூப்பென்றும் குஞ்சென்றும் உண்டோ? —பாரதி

# பாட்டியின் தந்திரம்

கௌ. சிவநேசராஜா
ஆண்டு 11 ஆர்

ஓர் ஊரிலே இணை பிரியாத வேலர், பாலர் எனும் திருட்டு நண்பர்கள் வாழ்ந்தனர். வேலர் பலரைப் பார்த்து "நாம் இருவரும் வேறு ஊர் சென்று பொருட்களும் பணமும் திருடி வந்து சமமாகப் பங்கிட்டுக் கொள்வோம்' என்றார். இருவரும் உணவுப் பொதியையும் எடுத்துக் கொணடு காட்டு வழியாகச் சென்றனர். கடும் வெயிலும் பசியும் வாட்டியது. கொண்டு சென்ற உணவுப் பொதிகளை அவிழ்த்து உணவை உண்டனர். மீண்டும் அவர்களுடைய பயணத்தைத் தொடர்ந்தார்கள். சிறிது நேரத்தின் பின் ஒரு கிராமத்தை அடைந்தனர். வீதியோரமாக ஒரு பாட்டியின் வீடு இருந்தது. இப்பாட்டியானவள் வழிப்போக்கர்களுக்கு உணவு விற்று பெட்டி நிறையப் பணம் வைத்திருந்தாள். இதைக் கண்ட இருவரும் இப்பணப் பெட்டியைத் திருடத் திட்டமிட்டு அப்பாட்டியின் வீட்டில் தங்குவதற்கு இடம் கேட்டனர்.

மாலையானதும் பாலரும், வேலரும் வீட்டு முற்றத்தில் படுத்துக் கொண்டு பாட்டி அயர்ந்து தூங்கியதும் அவளைக் கொலை செய்து விட்டு பணப் பெட்டியைக் கொண்டு செல்ல வேண்டும் என்று திட்டமிட்டனர். இதை ஒழித்திருந்து கேட்ட பாட்டிக்கு பயம் வந்தது. சிறிது நேரம் சென்றபின் பணப் பெட்டியுள் இருந்த பணத்தை வேறு இடத்தில் மறைத்து வைத்து விட்டு பெட்டியில் கல் மண் என்பவற்றைப் போட்டு நிரப்பி இறுக்கமாக கட்டி வைத்தாள். பின எழுந்து முற்றத்தில் படுத்திருந்த வேலரையும், பாலரையும் எழுப்பி 'நான் கனவு ஒன்று கண்டேன். திருடர்கள் எனது பொருட்களைத் திருட வருவதாகக் கண்டேன். ஆகவே நாம் பணப் பெட்டியை வீட்டுக்குப் பின்புறம் உள்ள கிணற்றில் போட்டு பின் சிலகாலம் கழித்து எடுக்கலாம் என்றாள். அதற்கு உடன்பட்ட பாலரும் வேலரும் பெட்டியைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு பாட்டியின் பின்புறமாகச் சென்றனர். கிணற்றை அடைந்ததும் பாட்டி பெட்டியை பாங்கிதொம் என்று போட்டாள்.

மூவரும் வந்து அயர்ந்து தூங்கினார்கள். பாலரும், வேலரும் 'எமக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது சரியாகப் பயன்படுத்த வேண்டும்' என்று எழுந்தனர். கிணற்றடிக்கு விரைந்து சென்றனர். பாலர் வெளியில் நின்று கயிற்றைப் பிடித்தார். வேலர் உள்ளே இறங்கினார். இறங்கிய வேலர் அரைவாசிப் பணத்தை தாம் திருடிவிட்டு தம் நண்பருக்குக் கொடுக்கும் பங்கிலும் அரைவாசியை எடுக்கலாம் என்று பெட்டியை அவிழ்த்துப் பார்த்ததும் மண்கல் என்பன நிறைந்திருந்தன. இதை தமது நண்பன் அறிந்தால் கிணற்றில் விட்டு விட்டுச் செல்வான் என்று பயந்து பெட்டியுள் படுத்துக் கொண்டு 'உம் உம் விரைவாய் எடு' என்றார் வேலர். வேகமாக இழுத்த பாலர் இவனை கிணற்றில் விட்டுச் சென்றால் தமக்கு முழுவதும் சொந்தம் என்று நினைத்த பாலர் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடுராத்திரியில் தம் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். வேலர் தம் நண்பரின் மடமைத் தனத்தையும் ஏமாற்றுத் தனத்தையும் நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டு பெட்டியுள் இருந்தார்.

காலை நான்கு மணியளவில் பெட்டியை கீழே வைத்து விட்டு அக்கம் பக்கம் பார்த்து பெட்டியைத் திறந்தார். உள்ளிருந்து நண்பனான வேலர் வெளியில் வந்தார். பாலர் உடனே திகைத்து நின்றார். 'பாலா உன்னை ஏமாற்றப் பார்த்தேன் நீ என்னை ஏமாற்றப் பார்த்தாய். நம் இருவரையும் பாட்டி ஏமாற்றி விட்டாள் என்று நடந்தவற்றைக் கூறி நேர்மையாக வாழ்ந்தனர்.

பிறரை ஏமாற்ற நினைப்பவர்கள் இறுதியில் தாமே ஏமாறுவர்.

# நிம்மதியே.....

எண்ணங்கள் பல இருந்தும்
இதயங்கள் தான் நொந்தும்
உயிர்கள் பல துறந்தும் - உன்னைக்
காணவில்லை நிம்மதியே......

மேற்கு வானில் ஆதவனின்
உதயமதைக் கண்டிடலாம் - ஆனால்
அதில அரிது தான் உன்னைக்
காண்பதுதான் நிம்மதியே......

விலைகள் தான் எவ்வளவு
என்று நீ சொல்லிருப்பின்
நான் அதைக்கொடுத்திடுவேன் - என்றோ
நீ பேசாமல் ஒழிந்து விட்டாய் நிம்மதியே......

மக்களது உள்ளமதை
கலக்கம் எனனும் கயவனிடம்
குத்தகைக்கு விட்டுவிட்டு - நீ
தலைமறைவோ நிம்மதியே......

நடந்தவைதான் கடந்து போக
அழிந்தவைதான் மறந்து போக - இனி
இருப்பவைதாம் இருப்பதற்கு
துணைபுரிவாய் நிம்மதியே......

இணைந்திருந்த இதயம் பல
தனித்துவாழும் இப்போது
பிணைந்து அவை வாழ்ந்திடவே - வந்து
வாழ்த்திடுவாய் நிம்மதியே......

உயிரதனைப் பெறுமதியாய்
நினைத்திடாத இவ்வுலகில் - அதன்
தன்மையினை எடுத்துரைக்க
ஓடி வா நீ நிம்மதியே......

நல்லவர்கள் வாழ்ந்து சென்ற
புண்ணிய பூமியிலே
கயவர்கள் தாம் வாழ - இடம்
விடாதே நிம்மதியே......

அணி அழகு பல இருந்தும்
கற்பிழந்த தையல் போல் - இனி
நானிலமும் நீயின்றி ஆகாமல்
காத்திடுவாய் நிம்மதியே......

மாதங்கள் பன்னிரண்டும்
உனக்காக காத்திருப்பேன்
தை மாதம் வருவதென்றால் - உனை
வரவேற்பேன் நிம்மதியே......

**க. பாஸ்கரன்**
**ஆண்டு 13 வர்த்தகம்**

# பயில்வோருக்கு
# பதினாறு கேள்விகள் ' 16 '

சின்னத்தம்பி சுதர்மன்
ஆண்டு 11 H

1. கதோட்டுக்கதிர் பரிசோதனை செய்த விஞ்ஞானியின் பெயர் என்ன? எப்போது?
2. இலத்திரன் ஏற்ற வரிசலை கூலோமில் எவ்வளவு?
3. நேர்கதிர்களின் ஆய்வுகளில் பங்கெடுத்தவர் யார்? எப்போது?
4. புரோத்தனைக் கண்டு பிடித்தவர் யார்? எப்போது?
5. இயற்கைக்கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் எவை?
6. D. N. A யின் வடிவத்தை விவரித்த விஞ்ஞானிகள் யாவர்?
7. நியூத்திரனைக் கண்டு பிடித்தவர் யார்?
8. மனிதனின் குருதியின் வழமையான PH பெறுமானம் யாது?
9. நுணுக்கு காட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
10. இயற்கை கதிர் தொழிற்பாட்டுத் தோற்றுவாய் எவை?
11. அதிகளவு சமதானியைக் கொண்ட மூலகம் எது?
12. அணுவின் கருமாதிரியுருவொடு தொடர்புடைய விஞ்ஞானி யார்?
13. முதன் முதலாக பூமியில் உயிர் தோன்றிய முறையை விளக்கும் தற்காலக் கொள்கையை முன் மொழிந்தவர் யார்? இதனைப் பரிசோதனை மூலம் நிரூபித்தவர் யார்?
14. கலக்கொள்கையை உருவாக்கிய இருவிஞ்ஞானிகள் யாவர்?
15. R - h காரணியைக் கண்டு பிடிப்பதற்காகப் பரிசோதனையின் போது பயன் படுத்திய விலங்கு எது?
16. X கதிர்கள் எப்போது, யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

## விடைகள் ' 16 '

1. குறூக்ஸ, 1879 ம் ஆண்டில்
2. $10^{-19}$ கூலோம்
3. கோஸ்ட்ஸ்ரீன், 1886ம் ஆண்டில்
4. இரதபோட், 1932 ம் ஆண்டில்
5. U- Th- Ra- Po- Nd

6. வற்சன் - கிறிக்
7. சட்விக், 1932 ம் ஆண்டில்
8. 7 PH
9. அன்ரன் வனலீவன்குக்
10. கரிப்பிசின் மயக்கி - தோரியோனைற்று மொனோசைற்று
11. Sn (வெள்ளீயம்)
12. மாஸ்டன்
13. ஒப்பாரின் - ஸ்ரன்லி மில்லர்
14. சீல்டன் - சுவான்
15. றெயிசஸ் என்னும் குரங்கு
16. 1895ம் ஆண்டில் உரோஞ்சன் என்பவரால்

---

# ஆசிரியர்

எதிர்மன்னசிங்கம் ஜெயரஞ்சித்
13 கலை

---

ஆசிரியர் என்ற பதம் ஆச்சாரியர் எனும் வடமொழியில் இருந்து பிறந்த சொல்லாகும். ஆசிரியர் என்னும் சொல்லை ஆசு + இரியர் எனப் பகுத்து எழுதலாம். ஆசு என்பது குற்றம், மாசு, குறை போன்றவைகளைக் குறிக்கும். இரியர் எனும் சொல் நீக்குபவர், களைபவர் எனும் கருத்துக்களைக் குறிக்கும். எனவே ஆசிரியர் எனும் பதம் குற்றங்களை நீக்குபவர் எனும் கருத்தினை எமக்கு அளிக்கும். எனவே ஆசிரியர் என்பது குற்றங்களைக் களைதல் அல்லது குற்றம் நீக்குதல் எனப்படும்.

திருமூலர் அவர்களின் கருத்துப்படி ஆசிரியர் ஒரு மாணவனுக்குக் கற்பிப்பது இறைவனுக்குச் செய்யும் தூய பணி போன்றது எனக் கூறுகிறார். எனவே ஆசிரியர் தொழில் ஒரு புனிதத்தன்மை வாய்ந்தது. பவனந்தி அவர்களின் கூற்றுப்படி ஆசிரியர்கள் பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் வற்றாத கல்வியினை வாரி வழங்கக் கூடியவர்களாகவும் "தொட்டனைத் தூறும் மணற்கேணிகள்" போல் செயல்பட வேண்டும் என்று கூறுகின்றார். டாக்டர் இராதாக்கிருஸ்ணன் கருத்துப்படி ஆசிரியர் ஞானம், சிந்தனை, தெளிவு, கருணை போன்ற சிறப்பு அம்சங்களைக் கொண்டவராக இருக்கவேண்டும். 'டால்ஸடாய்' அவர்களின் கருத்துப்படி ஆசிரியர்கள் தாமரை மலரைப் போன்றவர்கள் என்று கூறுகிறார். தாமரை மலர் மொட்டாக இருக்கும்போது அமைதியான முறையில் கூம்பிய அமைப்பைப் பெறுகின்றன. அதாவது ஆசிரியர் நிறைந்த கூர்மையான அறிவைப் பெற்று இருத்தல் வேண்டும் என்பது அதன் விளக்கமாகும். தாமரை மொட்டு மலரும்போது விரிந்து தன்னிடமுள்ள எல்லா இதழ்களையும் சூரிய ஒளிக்குக் காட்டுகின்றது. இதே போன்று ஆசிரியர்கள் கற்பிக்கும் போது தனது அறிவை மாணவர்களிடையே விரித்துப் பரப்புதல் வேண்டும்.

மணிமேகலை பள்ளிக் கூடங்களை அறச்சாலை என வர்ணிக்கின்றாள். அறச்சாலை என்பது தருமம் வளரும் இடம். அதாவது இறைவன் வாழும் இடமாகும். எனவே பாடசாலைகள் புனிதமான தெய்வங்கள் உறையும் கூடங்களாகும். பொருளியலாளர் றொபின்சன் என்பவரின் கூற்றுப்படி பள்ளிக் கூடங்கள் அறிவுச்சாலையும் தொழிற்சாலையுமாகும். எனவே பள்ளிக் கூடங்கள் கல்வியையும் மக்களையும் இணைக்கும் சமூக நிலையாகும்.

# கதம்ப அச்சாறு

## தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| உரித்த வெங்காயம் | ½ சுண்டு |
| வட்டம் வட்டமாக வெட்டிய மிளகாய் (கறிமிளகாய்) | ½ சுண்டு |
| மாங்காய்த் துண்டுகள் | ½ சுண்டு |
| வெட்டிய அன்னாசித் துண்டுகள் | ½ சுண்டு |
| விதை நீக்கி நான்காக வெட்டிய பேரீச்சம் பழம் | ½ சுண்டு |
| கராம்பு | 6 (தட்டிப்போடவும்) |
| இஞ்சித் துண்டு | 1 சீவல் |
| பூடு | 4 பல்லூ |
| கடுகு | 1 தே.க (மாவாக்கியது) |
| மிளகாய்த்தூள் | ½ தே. க |
| சீனி | 1 தே. க |
| உப்புத்தூள் | 1 தே. க |
| எலுமிச்சம் புளி | 1 மே. க |
| வினாகிரி | ¼ சுண்டு |

## செய்முறை

1. வெங்காயத்தை நன்நான்கு துண்டுகளாக வெட்டுக
2. அதே பருமனில் மாங்காய், அன்னாசி, பேரீச்சம்பழம் ஆகியவற்றையும் வெட்டிக் கொள்க.
3. இஞ்சி, பூடு என்பவற்றை ஒன்றாக அம்மியில் வைத்து தட்டி எடுத்து இத்துடன் சீனி, கடுகு, மிளகாய்த்தூள், உப்பு, வினாகிரி முதலியவற்றையும் சேர்த்து கரண்டியால் பிசிறி எடுத்து 2 மணி சென்ற பின் உபயோகிக்கவும்.

# அப்பிள் சுவீற்ஸ்

## தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| லக்ஸ்பிறே | 1 பக்கட் |
| சீனி | 200 g |
| இடித்த முந்திரியம் பருப்பு | 150 g |
| நெய் | 2 மே. க |
| வனிலா | 1 தே.க (அல்லது ஏலப்பொடி) |
| தண்ணீர் | ¾ கப் |
| பெரியகல் சீனி | 100 g |
| கராம்பு | 50 |

## செய்முறை

சீனியை நீர் சேர்த்து மெல்லிய கம்பிப்பாகாகக் காய்ச்சி இதில் சேர்த்து வைத்து லக்ஸ்பிறே, ஏலப்பொடி முந்திரிகைப் பருப்பு ஆகியவற்றை சேர்த்து கிளறி 1 மே. க. நெய் விட்டு பச்சைக் கலறிங் சேர்த்து இறக்கி இளம் சூட்டில் அளவான (கொட்டைப்பாக்களவு) உருண்டைகளாகப் பிடித்து பெரியகல் சீனியில் புரட்டி காயமுன் கராம்பு ஒவ்வொன்று உருண்டையில் குற்றி அழகாக அடுக்கிப் பரிமாறலாம்.

திருமதி. பா. வசந்தகுமார்
ஆசிரியை

# அறிஞர்கள் வாழ்வில் நடந்த அதிசயங்கள்

### காந்தியடிகள்

1934 இல் காந்தியடிகள் தமிழ் நாட்டிற் திறந்த காரில் வருவதைப் பார்த்து ''இப்படி வருகிறீங்கள்'' உங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் என்ன செய்வது? என்று திரு லிங்கம் கேட்டபோது,

காந்தியடிகள் 'லிங்கம்' எனக்கு மரணம் எப்படித் தெரியுமா? ''சுட்டுக் கொல்லப் படுவேன். அல்லது தூக்குத் தண்டனை பெறுவேன்.'' என்றார். அவருடைய வாக்கின் படியே சுட்டுக் கொல்லப்பட்டார்.

### கென்னடி

ஜான் கென்னடி இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு மயானம் வழியாகச் சென்றார். மயானத்தில் சில நிமிடங்கள் நின்று ''இந்த இடம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த இடத்தில் நிரந்தரமாகத் தங்கி இருக்க என் மனம் விரும்புகிறது'' என்றார். சரியாக மூன்று நாட்கள் கழிந்ததும் விரோதியால் சுட்டுக் கொல்லப்பட்டு அதே மயானத்தில் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

### விவேகானந்தர்

''இன்னும் நான்கு ஆண்டுகள் தான் உலகில் வாழ்வேன். நான்கு ஆண்டு கழிந்ததும் ஜூலை நான்காம் திகதி இவ்வுலகை விட்டு விடை பெறுவேன்'' என்று கூறினார். அவர் கூறியது போலவே ஜூலை மாதம் நான்காம் திகதி இறந்தார்.

---

# தேச பக்தி

ஈழத்தின்
பெருமை பேசும்
தேசபக்தி
இணையற்று
விளங்க வேண்டும்,
ஆனால்...
அதே தேசபத்தி
தமிழ்த்தாயின்
கண்ணீரைத்
தாரை வார்க்கக் கூடாது
தமிழ்த் தாயைக்
காயப்படுத்தி
தேசியப் புதையல்
தேடக் கூடாது

இதைக் கேட்டால்
நாங்கள்
தேசத்துரோகிகளாம்!
இருக்கட்டுமே...
அங்கத்தை மறைக்க
ஆடையின்றி
என் தமிழ் அன்னை
ஈழத்தாய்க்கு
எப்படி நாங்கள்
மணிமகுடம்
சூட்டுவது.

சின்னத்தம்பி சுதர்மன்
ஆண்டு-11 எச்

# பரிசு பெறுங்கள்

பின்வரும் படங்களுக்குச் சரியான விடையைக் கண்டு பிடித்து படம் கீறி அனுப்பும் அதிஸ்டசாலிக்குப் பரிசு ஒன்று காத்திருக்கிறது.

படம்: 1




இது ஒருவருடைய வளவு. ★ அடையாளமுடைய இடங்களில் நான்கு தென்னை மரங்களும், வளவின் மத்தியில் ஒரு பெரிய கிணறும் உள்ளது.

வளவுக்காரர் தனது நான்கு பிள்ளைகளுக்கும் இவ்வளவை நான்கு சமபங்குகளாகப்பிரித்து நான்கு தென்னை மரங்களையும் நான்கு பேருக்கும் ஒவ்வொன்றாகப்பிரித்து நான்கு வளவுக்காரரும் கிணற்றில் தண்ணீர் அள்ளத்தக்கதாகவும், நான்கு பேரும் மற்றப் பங்குக்குள் கால்வைக்காமல் தண்ணீர் அள்ளத்தக்கதாக சமபங்குகளாகப்பிரிக்க வேண்டும்.

1. இவ்வளவை எவ்வாறு பிரித்துக்கொடுப்பது?

படம்: 2




இது ஒருவளவு. இதில் கால்பகுதியில் ஒரு வீடு கட்டப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள முக்கால் பாகத்தை வளவுக்காரர் தனது நான்கு பிள்ளைகளுக்கும் நான்கு சமபங்குகளாகப் பங்கிடவேண்டும்.

2. இதனை எவ்வாறு பங்கிட முடியும் என படம் கீறி அனுப்புங்கள்.

ஆசிரியர்<br>
செவ்வாழை<br>
இந்துக்கல்லூரி<br>
வாழைச்சேனை.<br>
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# குறுக்கெழுத்துப் போட்டி



## மேலிருந்து கீழாக

1) 1 காவியத்தின் கதாநாயகன். தெய்வமாக வழிபடுபவர்.
2) 2 இராமனுக்கு ஆற்றைக் கடக்க உதவிய நண்பன்.
3) 3 வானூர்தி செலுத்துபவனை இவ்வாறு அழைப்பர். இது குழம்பியுள்ளது.
4) 4 இது வந்தால் மழை பெய்யும் என்பர்.
5) 12 பாரதியார் இவர்களுக்காகப் பாடல் பாடினார். இது குழம்பியுள்ளது.
6) 26 இராமனின் மனைவியின் பெயர்.
7) 23 இது அளியாதது. பாடசாலைக்குரிய மாணவருக்கு அவசியமானது.

## இடமிருந்து வலமாக

1) 1 தாமரைமலரில் வீற்றிருப்பவள். செல்வத்தினைத் தருபவள். இது குழம்பியுள்ளது"
2) 7 இராமனை இவ்வாறும் அழைப்பர்?
3) 13 இலங்கையில் முன்னர் இவ் ஆட்சி இடம் பெற்றது. சில நாடுகளில் இவ் ஆட்சி இன்றும் காணப்படுகிறது. இது இடம்மாறியுள்ளது.
4) 21 இதில் பிரயாணம் செய்யலாம். பாரிய இயந்திரங்களையும் கொண்டு செல்லும். இது குழம்பியுள்ளது.
5) 31 போக்குவரத்துக்கு உதவும். வீதியென்றும் அழைப்பர்.
6) 34 தற்போது புதுபதமாக இதை பலர் இயற்றுவர். இம்மலரில் இது நிறைந்துள்ளது.

சீனித்தம்பி நாகராஜா
13ம் ஆண்டு

# படித்துச் சுவைத்தவை

தென்னாலிராமன் ஒரு நாள் அரண்மனையில் விருந்து ஒன்றில் கலந்து கொண்டான். அங்கு பரிமாறிய கறிகளினுள்ளே விதையில்லாத கத்தரிக்காய் கறியே மிகவும் சுவையாக இருந்தது. தென்னாலிராமன் சாப்பிட்டு விட்டு வீட்டுக்குச் சென்று தன் மனைவியிடம் கத்தரிக்காய் கறிபற்றி புகழ்ந்து பேசினான். அதைக்கேட்ட அவளுக்கு அக்காய் மேல் ஆசை வந்தது. அரசனின் தோட்டத்திற்குச் சென்று திருடி வாருங்கள் என்று கூற அவனும் சென்று கத்தரிக்காயைக் கள்ளத்தனமாகத் திருடி வந்தான். அவற்றைச் சமைத்து தென்னாலிராமனும் மனைவியும் சாப்பிட்டுவிட்டு திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த மகனுக்குக் கத்தரிக்காய்க் கறி கொடுப்பதற்குச் சென்றாள். அப்போது தென்னாலிராமன் கொஞ்சம் நில் என்று கூறிவிட்டு ஒரு பாத்திரத்தில் நீரைக் கொண்டு சென்று பையன்மேல் தெளித்தான். அப்போது தென்னாலிராமனின் மனைவி மகனிடம் ''மழை பெய்கின்றது உடையெல்லாம் நனைந்து விட்டது உள்ளே சென்று அந்த உடைகளை மாற்றி விட்டுப்படு' என்று கூறி மகனை தோளில் கொண்டு போய் சிறிதளவு கறியை ஊட்டி விட்டாள்.

விதையில்லாத கத்தரிக்காயை தென்னாலிராமன் திருடியதைஅறிந்த அரசனே தென்னலிராமனிடம் கேட்டால் உண்மை சொல்லமாட்டான் என எண்ணி தென்னாலிராமனின் மகனை அரண்மனைக்கு அழைத்து ''நேற்று உங்கள் வீட்டில் என்ன கறிசமைத்தீர்கள்'' என்று கேட்டான்.அதற்கு அவனோ சட்டென 'விதையில்லாத கத்தரிக்காய் கறி' என்று கூறினான். அந்தவேளை ராமனும் அவ்விடம் வந்தான். மந்திரிமார் எல்லோரும் ''ராமா உன்னுடைய தலை சீவப்படப் போகின்றது'' என்று கேலியாகச் சிரித்தனர். அங்கு என்ன நடந்தது என்றதனை அறிந்து கொண்டராமன் அவன் சின்னப் பையன் அவற்றையெல்லாம் நம்புவதா? என்று கேட்டான். ராமன் பிறகு அவன் திண்ணையில் .. என்று கூறிக் கொண்டு போகும் போது பையனோ இடைமறித்து 'நான் திண்ணையில் நித்திரை செய்து கொண்டிருக்கும் வேளை மழை பெய்தது அதனால் என்சட்டை ஈரமாகி விட்டது. அம்மா என்னை அழைத்துச் சென்று சட்டையை மாற்றி விட்டாள் எனப் பையன் கூறினான், அதைக் கேட்ட அரசனோ அவன் கனவு கண்டிருக்கிறான்என எண்ணி தென்னாலிராமனை மன்னித்து அவனுக்கு பொன் விதையில்லாத கத்தரிக்காய்களை அன்பளிப்புச் செய்தான்.

மெற்றியஸ் தர்ஷினி
ஆண்டி - *11* V

---

## ஒவ்வொரு நாடுகளினதும் மத்திய வங்கியின் பெயர்:

| | | |
|---|---|---|
| இங்கிலாந்து | - | இங்கிலாந்து வங்கி |
| ஐக்கிய அமெரிக்கா | - | பெடரல் ஒதுக்கு வங்கி |
| சோவியத்ரஷ்யா | - | அரச வங்கி |
| மக்கள் சீனா | - | மக்கள் வங்கி |
| ஜப்பான் | - | நிபொக்கிங்கோ |
| பிரான்ஸ் | - | போங்க் தபிரான்ஸ் |
| இத்தாலி | - | பங்கா இத்தாலியா |
| இந்தியா | - | ஒதுக்கு வங்கி |
| மேற்கு ஜேர்மனி | - | டொயிட்ஸ் பூண்டஸ் வங்கி |
| இலங்கை | - | இலங்கை மத்திய வங்கி |

**S. தவாஜினி**
*12*ம் ஆண்டு

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

செல்வி. மனோகரன் ஜெயந்தி
ஆண்டு - 12

01. முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளை இடும் பதவி உனக்கு தானாக வந்து சேரும்.

02. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

03. நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்து விடு.

04. ''நான் எதையும் சாதிக்க வல்லவன்'' என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகி விடும்.

05. 'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒரு நாளும் சொல்லாதே.

06. சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக் கொண்டிருக்காதே.

07. உன்நிலை எப்படிப் பட்டதாக இருந்தாலும் அதை குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறிய படியே இரு!

08. நாம் எஜமானைப் போல் காரியங்களைச் செய்ய வேண்டும். அடிமை போல் செய்யக் கூடாது. சுதந்திரத்தோடு காரியங்களைச் செய்! அன்பு மயமாகக் காரியங்களைச் செய்!

09. கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை நீ எப்படி வழிபட முடியும்? இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.

10. ஓர் இலட்சியத்துக்காக நீ உன் உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால் தான் நீ ஒரு தலைவனாக இருக்க முடியும்.

11. ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டு, மேலை நாட்டு நாகரீகத்தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் அழிந்து போய் விடும்.

12. யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும் மரியாதையும் போய் விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ, அத்தகையவன் அவமானத்தைத் தான் அடைகிறான்.

உடலெனும் மரத்தில் உள்ளமாகிய பறவை அமைந்திருக்கிறது. கூடவே ஐம்புலன்களென்னும் பறவைகளும் அமைந்திருக்கின்றன. இவையாவும் கூடித் தத்துவமென்னும் தானிய மணிகளைக் கொத்தித் தின்று விட்டால் வலையில் சிக்க வழியே இல்லை. இவை சஞ்சலமடைந்து அங்கும் இங்கும் அலைய முற்படும் போது சுக போகம் என்னும் தானிய மணிகளுக்கு ஆசைப்பட்டு மலையாகிய வலையில் சிக்கி வாழ்க்கையில் துன்பமடைய நேரிடுகிறது.

# தோழர்களே நாம் ஒன்று கூடுவோம்

வாருங்கள் தோழர்களே - நாம்
ஒற்றுமையாக உழைத்திடுவோம்
உற்றதுணையாய் வாழ்ந்திடுவோம்!
வீரம் பேசித் திரியாமல் - என்றும்
வீணாய்ப் புராணம் பாடாமல்
தம்மை நாடி வருபவரை - தினம்
நண்பர்கள் போலே பழகிடுவோம்!

ஔவைத் தாயினை மறந்தீரோ - அவள்
உண்மைகள் தன்னை பேணீரோ:
ஆதி இறைவன் வகுத்தது போல் - மக்கள்
அனைவரும் கூடி வாழீரோ!

நாமே நமக்கு துணையானால்
நாடு பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றும் இதனை உணர்வீரோ!

மானமே வாழ்வின் உயர்நிலையம் - அதை
மாசுறச் செய்தால் கொடும் வினையாம்
ஈனச்சாதி என்னும் வழக்கு - இனி
எம்மை விட்டு ஒழியச் செய்வோம்!

மன்னுயிர்க்காக வாழ்பவரே - இந்த
மானிலத் தோங்கும் குலத்தினராம்!
தன்னுயிர் போற்றி திரிபவர்கள் - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தவராம்,

நீதி எங்கும் நிலைத்திடவே - மக்கள்
நெஞ்சில் கருணை நிறைந்திடவே
கூடி வாழ்வோம் தோழர்களே - எந்த
குறைகளும் நம்மைச் சேராவாம்!

செல்வி. மரியதாஸ் வசந்தி

# கடமை

பாலூட்டி அமுதளிப்பாள்
அன்னையவள் கடமை!
பருவத்தில் பள்ளிக்கனுப்புவான்
தந்தையவன் கடமை!

அறிவூட்டி வாழவைப்பான்
ஆசிரியன் கடமை!
ஒழுக்கமுடன் கற்றறிவான்
பிள்ளைகளின் கடமை!

பெரியோரைப் பேணுவது
மனிதர்களின் கடமை!
சிறியோரை வாழ்த்துவது
செகத்திலுள்ளோர் கடமை!

நன்றியுற வாழுவது
நம்மனைவோர் கடமை!
அன்பு மனம் பேணுவது
அறிவுடையோர் கடமை!

செல்வி. சின்னத்தம்பி சோபா

---

## ஷேக்ஸ்பியர் மணி மொழிகள்

* மகுடம் தரித்த தலைக்கு மனஅமைதி கிடையாது.
* உன்வசம் கண்ணீர் இருக்குமானால் இப்போது சிந்தத் தயாராயிரு.
* உலகமே ஒரு சோக மேடைதான். இதில் உனக்கென்ன தனியான சோகம்.
* கப்பல்கள் வெறும் பலகைகள் தான். மாலுமிகள் வெறும் மனிதர்கள் தான்.
* துயரத்தை வெல்ல எவனாலும் முடியும். எவனுக்குத் துயரம் இருக்கிறதோ அவனைத் தவிர.
* அவன் அளவுக்கு மீறிச் சிந்தனை செய்கிறான். ஆகவே ஆபத்தான பேர்வழி.
* எவனுக்குப் பொறுமையில்லையோ அவன் தான் உண்மையான கரடி.
* சந்தேகத்தைப் போல வேறொரு துரோகி கிடையாது.
* நான் கொடியவனாக இருக்க வேண்டியிருக்கிறது இனியவனாக இருப்பதற்காகவே.
* அழுகிப் போன ஆப்பிள்களில் தேர்ந்தெடுப்பதற்கு என்ன இருக்க முடியும்.

கே. அகிலா

# விதியின் பாதையிலே....

ஜி. சுதர்சன்

ஜானகியம்மாளின் கணவன் ராமன் நோய்வாய்ப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவரின் நோய் கடுமையாகவே இருந்தது. அவர்களுக்கு இரண்டு பெண்களும் மூன்று ஆண்களுமாக மொத்தம் ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர். ராமனின் நோய் தீர்க்கமுடியாதளவிற்கு முற்றி விட்டது. அவர்களின் உறவினர்கள் வசதியாக இருந்தும் ராமனின் நோயைக் குணப்படுத்த எவருமே உதவவில்லை. வைத்தியர்களும் கைவிட்டு விட்டனர். ராமன் இறந்து விட்டார். தந்தையை இழந்த ரகு, சுகந்தன், மதி, ரவி, ராதா ஆகியோரும் கணவனை இழந்த ஜானகியம்மாளும் துடியாய் துடித்தனர். என்ன செய்வது அவர்களின் வாழ்வில் அப்படியொரு துன்ப நிலை தோன்றியது. ஏழ்மையின் மத்தியில் குடும்பமே போராடியது.

ஜானகியம்மாளின் மூத்த மகன் ரகு தந்தை இறக்கும் போது பதினாறு வயதுடையவனாக இருந்தான். ஒன்பதாம் தரத்தில் படித்து கொண்டிருந்தான். மற்றவர்களும் பாடசாலைக்குச் செல்பவர்களாகவே இருந்தனர். அந்த ஏழ்மை நிலையிலும் உறவினர்களும் உதவவில்லை, எப்படியோ ஒருவறாக அவர்களின் வாழ்க்கைச்சக்கரம் சுழன்றது. எப்படியும் மூத்த பிள்ளையான ரகுவைப் படிப்பித்து ஆளாக்குவதில் தாயார் மிகக் கவனமாக இருந்தார்.

ரகு பத்தாம் வகுப்பு இறுதி பரீட்சையில் தோற்றி அதில் பாடசாலையிலே மிகவும் திறமையாகச் சித்தியடைந்து உயர்தர வகுப்பில் படிக்கத் தொடங்கினான். அவனுக்கு புலமைப்பரிசிலும் கிடைத்ததனால் ஓரளவு பணம் கிடைத்தது. அப்போது அவர்களின் வாழ்வில் ஓரளவு மகிழ்ச்சி காணப்பட்டது. ஆனால் ஜானகியம்மாளின் கடின உழைப்பினால் அவளது உடல்நிலை மோசமாகிக் கொண்டிருந்தது. அப்படி இருக்கும்போது ரகு உயர்தரப் பரீட்சையிலும் தோற்றி அதிலும் நன்றாகச் சித்தியடைந்து பல்கலைகழக அனுமதியும் கிடைத்தது. அனுமதி கிடைத்த தினத்தில் அவனுடைய தாயார் மாரடைப்பால் மிகவும் அவதிப்பட்டு கொண்டிருந்தார். அவன் எங்கோவெல்லாம் அலைந்து மருந்து வாங்கி வருவதற்குள் காலன் ஜானகியம்மாளின் உயிரைக் கவர்ந்து விட்டான். பல்கலைக்கழக அனுமதி கேட்டு அவனடைந்த மகிழ்ச்சி நீரிற்குமிழியாகிப் போய்விட்டது.

குடும்பப் பாரம் முழுவதும் ரகுவின் தலையிலே சுமத்தப்பட்டது. மற்றச் சகோதரர்களை எப்படியாவது நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்துடன் பல்கலைகழகம் செல்வதை விடுத்து ஒரு சிறிய தொழிலைத் தேடிக்கொண்டான். அன்னையையும். தந்தையையும் இழந்து அனாதைகளான ரகுவும் மற்றவர்களும் மிகமிகத் துன்பப்பட்டனர். ரகு தன் இளைய சகோதரர்களைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வர மிகவும் பாடுபட்டான். அவன் கண்ட கனவை நனவாக்கத் தவறவில்லை.

காலங்கள் கடந்தன சுகந்தன் பொறியியலாளராகவும், மதி வைத்தியராகவும் வெளியேறினர். தனக்குக் கிடையாத வாய்ப்பு தனது சகோதரர்கள் இருவருக்கும் கிடைத்ததையிட்டு ரகு மிகவும் மகிழ்ந்தான். அன்னை இருந்திருந்தால் அவனும் ஒரு பட்டதாரியாக வந்திருப்பான். ஒருவாறாக அவர்களின் வாழ்வில் தென்றல் வீசத் தொடங்கியது. ரவியும், ராதாவும் படித்துக் கொண்டிருந்தனர்.

பணத்தைக் கண்டால் தானே உறவினர்களின் கண் திறக்கும், ஒரு நாளும் இல்லாத சொந்தங்களும் பந்தங்களும் வந்தன. ஆனால் அவர்கள் புறக்கணிக்கவில்லை. முன்னர் அவர்கள் துன்பப்படும்போது உதவாதவர்கள் எல்லாம் உறவு பாராட்டினர். ஆனால் ரகு அதனை முற்றாக வெறுத்தான். ரவியும், ராதாவும் ரகுவுடன் சேர்ந்து கொண்டனர். ஆனால் சுகந்தனும், மதியும் பண ஆசையால் மிகவும் உந்தப்பட்டனர். தங்கள் தரத்திற்கு ரகுவின் தரம் மிகவும் குறைவென்று எண்ணி தங்களை கைகொடுத்து காப்பாற்றிய ரகுவை புறக்கணித்தனர். தங்கள் விருப்பத்திற்கேற்ப வாழத் தொடங்கினர்.

சுகந்தன் தன் மாமாவின் மகள் மாலாவை பண ஆசையால் திருமணம் முடித்தான். இவனுக்கு ரோச நரம்பே இல்லையா? என்று ரகுவின் மனம் வருந்தியது. அவர்கள் பணத்தால் எப்படியும் ஆட்டி வைப்பார்கள். இவன் ஏமாந்து போய் விட்டான் என்று கவலை கொண்டான். மதியும் தன்னைப் போல் ஒருவரை திருமணம் செய்து வாழ்க்கை நடத்தினாள். இருவரும் ரகுவை மறந்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர்.

எப்படியாவது நாம் இருவரும் படித்து அண்ணாவைக் காப்பாற்ற வேண்டும் என்று ரவி, ராதாவிடம் சொல்லி வைத்தான். இதைக் கேட்ட ரகு நீங்கள் அவர்களைப் போல் செய்யாமல் இருந்தால் போதும் என்று கூறினான். உடனே அவர்கள் நிச்சயமாக நாங்கள், அவர்களைப் போல் உங்களை மறக்க மாட்டோம் என்று ஒரே குரலில் கூறினர். அப்படியிருக்கும் போது ரதி என்னும், தான் விரும்பியிருந்த ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். ரவியும், ராதாவும் தங்களுக்கு அன்னைக்கு மேலாக ஒரு அண்ணி கிடைத்து விட்டாளே என்று மகிழ்ந்தனர்.

அப்படி மகிழ்ச்சியாக இருக்கும் வேளையில் ஏழைகள் சந்தோசமாக இருப்பது இறைவனுக்கு பொறுக்கவில்லை போலும். ரகு ஒரு விபத்தில் சிக்கி கால்முறிந்த நிலையில் இருந்தான். வாழவைக்கும் தெய்வம் படுக்கையில் இருந்தால் எவ்வாறு வாழ்க்கையைக் கழிப்பது. கையில் பணமுமில்லை. ரவி கோபம் பாராமல் அக்கா உதவுவாள் என்ற நம்பிக்கையில் மதியிடம் சென்று உதவிகேட்டு ரகுவையும் வந்து பார்க்கும்படி கூறினான். அவளோ 'உன்னைத் தம்பி என்று சொல்வதற்கே வெட்கமாயிருக்கிறது: இதில நின்று என் மானத்தை வாங்காது போய்விடு. உங்கள் வீட்டுக்கு வந்து வைத்தியம் பார்த்தால் எனது கௌரவம் என்னாவது' என்று வாய்க்கு வந்தபடி ஏசினாள்.

அதன் பின் ரவி அலைந்து திரிந்து வங்கியில் ஒரு வேலை பெற்று உழைத்து தமயனைக் குணமாக்கினான். தங்கை ராதாவையும் படிப்பித்து ஒரு வைத்தியராக ஆக்கினான். ரகுவும் குணமாக உழைக்கத் தொடங்கினான். மூவரும் உழைத்து சற்று வசதியுடன் நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்தனர். ரகுவிற்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. ஆனால் சுகந்தனினதும் மதியினதும் ஆடம்பரங்கள் கடவுளுக்கே பொறுக்க முடியவில்லை போலும், அவர்களின் பணத் திமிரெல்லாம் அடங்கி துன்பப்படத் தொடங்கினர்.

மதியும் சுகந்தனும் பணம் எல்லாம் முடிந்தபின் ரகுவிடம் உதவி கேட்க வந்தனர். முதலில் மதிதான் அங்கு வந்தாள். அப்போது ரவி கிண்டலாக இப்போது உங்கள் மானம் மரியாதை என்னாவது, உங்கள் கௌரவம் என்னாவது என்றான். உடனே அவள் என்னை மன்னிச்சு விடடா என்று அழுதாள். ரகுவிடம் அருகில் சென்று அழுதபடி உங்கள் பேச்சைக் கேட்காமல் பணம் தான் உலகம் என்றிருந்த எனக்கு இப்போது கடவுள் நல்ல பாடம் படிப்பிச்சிட்டாரு என்று அழுதாள். அதன் பின் எடுத்ததற்கெல்லாம் காரில் செல்லும் சுகந்தன் நடைப்பிணமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவரும் அதே நிலையில் தான் இருந்தான் இருவரும் தங்கள் நிலையை உணர்ந்து விட்டனர் என்று எண்ணிய ரகு உள்ளுக்குள் மகிழ்ந்தாலும் வேதனையும் பட்டான்.

அண்ணா நான் பணம்தான் சொர்க்கமென்றிருந்தேன். இப்போதுதான் அது நரகம் என்று உணர்ந்து உன்னிடம் மன்னிப்பு கேட்க வந்திருக்கிறேன். என்னை மன்னிச்சேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கோ அண்ணா என்று சொல்லி அவன் காலடியில் விழுந்து கிடந்து கதறி அழுதான். சுகந்தனும் மதியும், தன் சகோதரர்களான ராதாவையும் ரவியையும் பார்த்து தாங்கள் செய்ததை நினைத்து வெட்கித் தலை குனிந்தனர்.

பின்னர் ரகு அவர்களுடன் பேசத் தொடங்கினான், அம்மா இறந்த பின்னர் உங்களை நல்வழிப்படுத்த எண்ணி சிரமப்பட்டு படிப்பித்தேன். ஆனால் நீங்கள் என்னை மதிக்காமல் பணத்துக்கு அடிமையாகி இப்போது அதை உணர்ந்து விட்டீர்கள். இப்படி நீங்கள் உணரும் நாளைத் தான் நானும் எதிர்பார்த்தேன். ரவியும் ராதாவும் எனக்காக மிகவும் துன்பப்பட்டனர். அவர்கள் என்றும் நன்றியுடையவர்கள், நானும் அவர்களுக்கு என்றும் நன்றியுடையவனாய் இருப்பேன் என்று கூறினான்.

ஏதோ விதியால் ரவி மேற்படிப்பு படிக்க முடியாமல் போய்விட்டது. என் வாழ்க்கையிலும் பீ. ஏ. என்ற இரண்டெழுத்தில் விதி

என்ற இரண்டெழுத்து தொடர்ந்து விளை யாடியது. ஆனபடியால்தான் நானும் இன் நிலையில் குடும்பபாரத்தை சுமக்க முடியா மல் சுமந்து கொண்டிருக்கிறேன். இது நீங் கள் யாவரும் அறிந்ததேயாகும். பணம் என் பது போகும் வரும் அது நிரந்தரமானதல்ல. பணம் என்பது சொர்க்கமல்ல நரகம் என் பதை நீங்கள் இருவரும் உணர்ந்துவிட்டீர்கள். இதை உங்களுக்கு உணர்த்திய தெய்வத்திற் குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும். என்று கூறி முடித்தான் ரகு.

இவர்களின் வாழ்க்கையில் விதி விளை யாடி அலுத்துவிட்டது. இப்போது மீண்டும் தென்றல் வீசத் தொடங்குகிறது...

முற்றும்

## பழைய மாணவர்களின் பணிகளில் சில

இம் மலர் வெளியீட்டுடன் பரிசளிப்பு விழாவைச் செய்ய வேண்டும் என்று பழைய மாணவர் சங்க நிருவாக சபைக் கூட்டத்தி லேயே முதன் முதல் தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரியின் அபிவிருத்திக்கும், வளர்ச் சிக்கும் பழைய மாணவர்களின் சக்திகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றும் சிறந்த அமைப்பாகப் பழைய மாணவர் சங்கம் செயலாற்றி வருகிறது.

பழைய மாணவர்கள் சங்சரீதியாகவும், தனிப்படவும், கல்லூரியுடன் தொடர்பான பல பணிகளை ஆற்றி வருகின்றனர்.

நமது இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவருமான பெருமகனார் திரு. செ. இளையதம்பி ஐயா அவர்கள் அமர ரான போது பல பழைய மாணவர்கள் திரண்டு குழுவாகச் செயற்பட்டு அவர் அமரரான 31 ம் நாள் அவருக்கு மாபெரும் அஞ்சலிக் கூட்டம் ஒன்றைக் கல்லூரி மைதா னத்தில் நடத்தினோம். அன்றைய தினம் வீரகேசரி நாளிதழில் ¼ பக்கத்தில் விசேட நினைவஞ்சலி அனுபந்தத்தையும் வெளியிட் டோம்.

அமரர் திரு. செ. இளையதம்பி ஐயா அவர்களைப் பற்றியும், கல்லூரியைப் பற்றி யும் அவரிடம் கல்வி கற்று இன்று மெச்சத் தக்க நிலையில் இருக்கும் பல பழைய மாண வர்களும், அறிஞர்களும் எழுதிய கட்டுரை களையும், கவிதைகளையும் திரட்டி வைத் துள்ளோம்.

அவற்றை ஒரு நினைவு மலராகப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக வெளியிடத் தீர்மானித்துள்ளோம். நினைவு மலர் அச்சில் வெளிவரச் சகல பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பைக் கோருகிறோம்.

பரிசளிப்பு விழா வெற்றி பெறத் தேவை யான நிதித் தேவையைப் பூர்த்தி செய்ய தங்களது சொந்த அலுவல்களை ஒதுக்கி வைத்துப் பல நாட்களாக இயங்கி மெச்சத் தக்க பணிகளை எமது பழைய மாணவர் சங்கச் செயற்குழுவினர் செய்து வருகின்ற னர். எம்முடன் ஒத்துழைத்து வரும் செயற் குழுவினர், பழைய மாணவர்கள் அனைவ ருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கிழக்கிலங்கையின் முன்னோடிக் கல்லூரி யாக இயங்கி வரும் வாழைச்சேனை இந்துக் கல்லூரியை நாட்டின் தேசிய கல்லூரிகளில் ஒன்றாகத் தரம் உயர்த்தும் செயற்திட்டங் களை முன்னெடுத்துச் செல்லுவதற்கு ஒன்றி ணையுமாறு சகல நலன் விரும்பிகளையும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

மயில்வாகனம் ரவீந்திரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்.

## ரமணா வீடியோ விசன்

புதிய, பழைய திரைப்படப் பாடல்கள்

பக்திப் பாடல்கள், மிக நேர்த்தியான
முறையில் பதிவு செய்து கொடுக்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்
எவர்சில்வர் பொருட்கள், அழகு சாதனப்
பொருட்கள், குளிர்பானவகைகள் சகாய
விலையில் கிடைக்கும் இடம்

# ரமணா வீடியோ விசன்

கல்குடா வீதி,
பேத்தாழை,
வாழைச்சேனை.

---

பாடசாலை உபகரணங்கள்,
மின்சாரப் பொருட்கள்,
வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள்
மருந்து வகைகள் ஆகியவற்றைச்
சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

# T. L. T. & BROS

பள்ளிவாசல் வீதி,
வாழைச்சேனை.

# O/L பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் | மிகச் சிறந்த சித்தி பெற்றோர் | D | C | S | F |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1980 | 65 | 15 | 23% | S. பொன்ராஜ் | 1 | 6 | | 1 |
| | | | | A. சிறிஸ்கந்தராஜா | 1 | 6 | | 1 |
| 1981 | 72 | 08 | 11.1% | K. மகேசன் | 1 | 2 | 4 | 1 |
| | | | | T. அகிலன் | 2 | 2 | 2 | 2 |
| 1982 | 64 | 22 | 34.4% | A. அருள்மதி | 2 | 4 | 2 | |
| 1983 | 83 | 18 | 21.1% | இ. இன்பமலர் | 1 | 3 | 4 | |
| 1984 | 68 | 29 | 42.6% | A. ஞானமோகன் | 3 | 5 | | |
| 1985 | 73 | 22 | 30.1% | S. ஜெயஸ்வரன் | | 7 | 1 | |
| 1986 | 123 | 37 | 30% | S. ஜெயகாந்தி | 3 | 4 | 1 | |
| 1987 | 89 | 58 | 65.2% | S. மாலதி | 1 | 6 | 1 | |
| | | | | N. சுஜீதா | 1 | 6 | 1 | |
| 1988 | 59 | 45 | 76.1% | A. சிறி | 5 | 2 | | 1 |
| 1988 | 103 | 23 | 22.3% | P. பரமேஸ்வரி | 1 | 4 | 1 | |
| | | | | G. பிரேமானந் | 1 | 4 | 1 | |
| 1989 | 176 | 19 | 10.8% | S. சறோஜா | 3 | 3 | 1 | |
| 1990 | 114 | 21 | 18.4% | S. சறோஜா | 3 | 3 | 1 | |
| 1991 | 250 | 36 | 14.4% | பா. சுகன்யா | 2 | 6 | | |

# A/L பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் | அதிக தரத்தைப் பெற்றோர் | A | B | C | S |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1980 | 08 | 03 | 37.5% | T. றிபிக்காறோஸ் | | | 2 | 2 |
| 1981 | 09 | 03 | 33.3% | சீ. லோகேஸ்வரி | | | 2 | 2 |
| 1982 | 16 | 09 | 56.3% | மு. சுகுணா | | | 2 | 2 |
| 1983 | 06 | 02 | 33.3% | மு. கனகநாயகி | | | 2 | 1 |
| 1984 | 05 | 04 | 80% | K. மகேசன் | | 1 | 1 | 2 |
| 1985 | 05 | 04 | 80% | த. அருந்ததி | | | 2 | 1 |
| 1986 | 11 | 11 | 100% | M. லீலா<br>M. ஜெயநாயகம் | | | 3<br>3 | 1<br>1 |
| 1987 | 22 | 20 | 90.9% | த. அருணா (வர்த்தகம்)<br>க. தேவமனோகரி (கலை) | 1 | 1<br>3 | [illegible] | |
| 1988 | 17 | 11 | 64.7% | க. தயானந்தன் (கலை)<br>M. நிர்மலா (வர்த்தகம்) | 1 | 2<br>1 | 1<br>2 | <br>1 |
| 1989 | 14 | 07 | 50% | S. அருந்ததி (கலை)<br>சி. தயாபரன் (வர்த்தகம்) | | <br>1 | 3<br>2 | 1<br>1 |
| 1990 | 37 | 24 | 65% | S. ஜெயகாந்தி (விஞ்ஞா.)<br>ஆ. சிறி (வர்த்தகம்)<br>க. கமலநேசன் (கலை)<br>வி. தேவராஜா (கலை) | <br>2<br><br> | <br>2<br>2<br>2 | 2<br><br>1<br>1 | 2<br><br>1<br>1 |
| 1991 | 33 | 14 | 42.4% | ஆ. சிறி (வர்த்தகம்)<br>இ. இன்பராஜா (விஞ்ஞா.)<br>க. கமலநேசன் (கலை)<br>வீ. தேவராஜா | 1 | 3<br><br>2<br>1 | <br>1<br>1<br>3 | <br>3<br>1<br> |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

புனித செபத்தியார் அச்சகம், மட்டக்களப்பு.